சுதேசமித்திரன்

1 - APR 952
MADRAS
11/2.52



"ஏண்டா கொட்டு கொட்டுன்னு முழிச்சிண்டு படுத்துண்டிருக்கே? எழுந்து படிக்கப்படாதோ?"

"அப்பா அஞ்சுமணிக்குத்தானே அலாரம் வெச்சிருக்கார். து அடிக்கிறத்துக்காக காத்துண்டிருக்கேன்......!!"

ஹ311,N305
N52.23.5

விலை 4 அணா

The Swadesamitran Weekly

23-3-5

சுதேசமித்திரன்

புதிய சந்தா விகிதங்கள்:

(1—4—'51 முதல்)

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை வெளிநாடு, தபால் மூலம்	சென்னை
	ரூ. அ	ரூ. அ.
1 வருடம்	26—0	24—0
6 மாதம்	13—8	12—8
3 மாதம்	7—0	6—8
1 மாதம்	2—8	2—4

தனிப்பிரதி

ஞாயிறு மலர் விலை 2 அணா

இதர நாட்களில் ,, 1 அணா.

★

வாரப்பதிப்பு

1 வருடம்	13—0
6 மாதம்	7—0
3 மாதம்	3—12

தனிப்பிரதி அணா 4.

வெளிநாடு : 1 வருஷம் ரூ. 15. 6 மாதம் ரூ. 8.

தற்போதுள்ள சந்தாவின் முடிவு புதிய விகிதப்படி, கணக்கிட்டு மாற்றப்படும்.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்.

குழந்தைப் பிராயத்தில் குதூகலமாய்த் தொட்டிலில் இட்டு வளரும் பருவத்தில் கவனமாய்ப் பாதுகாத்து வளர்க்கப்படும் குழந்தைகள் விரைவில் உலகத்தில் தங்கள் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொள்ளுகிறார்கள். தங்கள் குழந்தைகளின் வருங்கால நலத்தையும், சுகத்தையும் கருதிச் சேமிக்கும் பெற்றோர்கள் புத்திசாலிகள்; அவர்கள் ஆனந்தமாக இருப்பார்கள். இன்று புத்திசாலித்தனமாக முதலீடு செய்யும் சேமிப்புகள் அவர்களது வருங்கால நன்மைக்கே உத்தேசித்துதான் செய்யப்படுகின்றன.

இதற்கு பன்னிரண்டு வருஷ நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளை விட சிறந்த முதலீடு வேறெதுவும் இல்லை.

- அருகேயுள்ள தபாலாபீஸிலிருந்து எளிதில் பெறமுடியும்.
- 100 ரூபாய் 12 வருஷத்தில் 150 ரூபாயாகக் கிடைக்கும்.
- 50 சதம் போனஸ் மீது வருமானவரி செலுத்தவேண்டியதில்லை.

**நேஷனல்
ஸேவிங்ஸ்
ஸர்ட்டிபிகேட்டுகள்**

பணம் திரும்பப் பெறுவதற்கு இந்திய சர்க்கார் உத்தரவாதம் அளிக்கிறது.
உங்கள் குழந்தைக்கு பாதுகாப்பு என்னும் வரப்பிரசாதத்தை அளியுங்கள்.
இந்திய நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர் வெளியீடு. நிதிமந்திரி காரியாலயம், காட்டன் காலிக், ஸிம்லா

வரலக்ஷ்மிப் போட்டி—25.

Govt. Regd. No. 816.

பரிசு ரூபாய் 10000

முதற் பரிசு ரூ7000

மற்றபரிசுகள் ரூ3000

(சரியான விடைக்கும், 1, 2, 3 தவறுள்ள விடைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.)

சீல் விடை - சென்னை ப்ரீமியர் பாங்கில்

ஸ்பெஷல் பரிசு, சரியான விடை அனுப்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகிய வெள்ளி டம்ளர்.

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒன்றொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டு இரண்டு கூப்பனை இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 10—4—52

1 விடைகள் 2

1	கலியாணத்திற்கு பலையகளுக்காக வாங்கப்படும் இது அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி விலையும் உயர்ந்து இருக்கும்.	மாலை	சேலை
2	ஒருவருக்கொருவர் வாழ்க்கைப் பங்காளிகளான தம்பதிகள் பரஸ்பரம் இப்படியாக நடந்துகொள்வது கடமை.	நேசம்	நேரம்
3	நமக்குப் பிடிக்காத விஷயத்தைப்பற்றி இப்படியாகப் பேசுவது சிலரது வழக்கம்	துச்சம்	துவேஷம்
4	இது இல்லாத வேலையாளிடம் முக்கிய பொறுப்புகளை நம்பி ஒப்புவிக்கமுடியாது	கடமை	நேர்மை
5	மனிதன் தன்னுடைய ...தை நிறைவேற்ற எதையும் செய்யத் துணிகிறான்.	[illegible]	[illegible]
6	காங்கிரஸ் மகா சபையின் இப்படியான உழைப்பின் பலன்தான் நாம் அடைந்துள்ள சுதந்திரம். (பொறுதி=பொறுமை)	உறுதி	பொறுதி
7	ஒரு சாமானை வாங்க முற்படும் முன் அதன்..........யினை என்ன என்று விசாரிப்போம்	[illegible]	[illegible]
8	செய்த தீவினையின் பலனை அனுபவிக்கும் போதுதான் மனிதனின் மனம் இது அடைகிறது.	திருத்தம்	வருத்தம்
9	பாலியத்தில் ஒற்றுமையாக இருந்த சகோதரர்கள் கூட பின்னால்.................. காரணமாக பரம வைரிகள் ஆவதுண்டு	தாயம்	தாரம்
10	இதையே பிரதான அம்சமாகக்கொண்டு எண்ணற்ற திரைப்படங்கள் வருகின்றன	காதல்	பாடல்
11	சதா வெற்றிலையும் புகையிலையுமாக குதப்பிக் கொண்டிருப்பவருடைய பற்கள் இப்படியாக இருக்க முடியுமா? (சுவேதம்=வெண்மை)	சுத்தம்	சுவேதம்
12	முன்பின் யோசியாமல் ஒரு பெண்ணை காதலித்துவிட்டு பிறகு இது செய்யமுடியாமல் திணறுபவர்களுமுண்டு.	விவாகம்	தியாகம்
13	இந்த போட்டியின் முடிவு நேயர்களுக்கு ஒரு..............செய்தியாக இருக்க வேண்டுமென விரும்புகிறோம்.	இலாபம்	சுபம்

மேலே உள்ள கட்டத்தில் பதின்மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதாரணமாகவும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம். பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியார்டர் மூலமோதான் அனுப்ப வேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்ப வேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுத வேண்டும். இப்போட்டியின் சரியான விடை மித்திரன் 15—4—52 தேதி இதழில் வெளிவரும். நேயர்களுக்கு தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம்:— மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி (S.M.) "ஸ்ரீநிவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா).

நமது அடுத்த போட்டி புது வருட விசேஷப் போட்டி. — எதிர்பாருங்கள்!

போட்டி—23-ன் பரிசு விவரம்:—முதற் பரிசு தலைக்கு ரூ. 200—0—0 வீதமும், இரண்டாவது பரிசு தலைக்கு ரூ 30—0—0 வீதமும், மூன்றாவது பரிசு தலைக்கு ரூ 2—0—0 வீதமும், நான்காவது பரிசு தலைக்கு ரூ. 1—0—0 வீதமும் வழங்கப்பட்டன. பரிசுகள் 3, 4—3—52 தேதிகளில் அனுப்பப்பட்டன. மற்ற விவரங்கள் வரலக்ஷ்மி கிராஸ் வர்ட்ஸ் தே 25-ல் பார்க்கவும். தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கூப்பன்களும் கட்டணமும் வசூல் செய்து அனுப்ப எங்கும் கலக்டர்கள் தேவை. கலக்டர்களுக்கு வெள்ளிப் பரிசும் நல்ல கமிஷனும் உண்டு.

வரலக்ஷ்மிப் போட்டி விடை விளக்க விமர்சன பத்திரிகை மணி புல்லட்டின் - தபால் மூலம் தனிப்பிரதி விலை 0—1—6. வருட சந்தா ரூ. 2—4—0 மட்டுமே. விலாசம்: மணி புல்லட்டின் ஆபீஸ், 10/A, மார்க்கெட் சந்தை வீதி, பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா).

சுதேசமித்திரன்

வாழிய செந்தமிழ் | வாரப்பதிப்பு | வாழ்க நற்றமிழர்

Vol XXIII] கர வருஷம் பங்குனி 10௳ | 1952-ஞ மார்ச் 23௳ | No 8

பஞ்சப் பகுதிகள்

★

இந்த ராஜ்யத்தில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட பகுதிகள் மீது மத்திய உணவு மந்திரி ஸ்ரீ முன்ஷி செலுத்திய கண்ணோட்டம் மேல் எழுந்த வாரியானது, மிகவும் அவசரமானது. எனினும், அங்குள்ள துன்ப நிலையை இப்போது அவர் கூடிய வரை தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. நிருபர்கள் கூட்டத்தில் இது பற்றி அவர் வெளியிட்டுள்ள கருத்தே இதற்குப் போதிய அத்தாட்சி. உடனடியாக, தீவிரமான நிவாரண நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை அவர் திட்ட வட்டமாக அறிவுறுத்தியிருக்கிறார். இத்துறையில் நமது ராஜ்யத்துக்கு மத்திய சர்க்கார் ஆன உதவியனைத்தையும் செய்வரென்று அவர் உறுதி கூறவும் தயங்கவில்லை. ஆனால் அந்த உதவியின் அளவை, அல்லது மேற்குறித்த நடவடிக்கைகளின் தன்மையைப் பற்றி அவர் ஒன்றும் கூறத் தயாராயில்லை. இவை யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயங்கள் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். எனினும் தேவையான பரிகாரம் என்னவென்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

பஞ்சத்துக்குள்ளான ராயலசீமை, செங்கல்பட்டு, வட ஆற்காடு போன்ற இடங்களில் ஜலக் கஷ்டம் தற்காலிகமானதல்ல. அனேகமாக நிரந்தரமானதென்றே சொல்ல வேண்டும். எனவே, இந்தக் கஷ்டத்தைத் தீர்த்து வைக்கும் ஏற்பாடு எதுவும் கூடிய வரை நிலையானதாயிருப்பது அவசியம். இதற்கான திட்டங்கள் நிறைவேற நீண்ட காலமாகியே தீரும். எனினும், உடனடியான நிவாரணம் அளிக்கும் பொருட்டு, ஊற்று காணும் இடங்களிலெல்லாம் கிணறுகள் வெட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம் தற்போதைய குடி தண்ணீர்க்கஷ்டம் தீருவதுடன், ஓரளவு பாசனத்துக்கும் இந்தக் கிணற்று நீர் பயன்படக் கூடும். இதே சமயத்தில், வேலையின்றி அல்லலுறும் தொழிலாளருக்கு வேலை கொடுக்கவும், கிணறு வெட்டும் திட்டம் பயன்படலாம். கால்வாய்கள் வெட்டி பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வது போன்ற வேலைகளுக்கும் இத்தொழிலாளரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு செய்த பிறகும் ஏழைகளுக்காக கஞ்சித் தொட்டிகள் அவசியமாக உள்ள இடங்களில் அந்த வசதியை ஏற்படுத்துவதில் அதிகாரிகள் அக்கரை காட்ட வேண்டும்.

மேற்குறித்த இனங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளு முன் ஸ்ரீ முன்ஷியும், இந்த ராஜ்ய அதிகாரிகளும் கலந்து யோசிப்பது பொருத்தமே. ஆனால், அரிசி ரேஷனை உயர்த்துவது பற்றி இனியும் பிரமாதமான யோசனையோ, ஆராய்ச்சியோ அவசியமென்ற முறையில் ஸ்ரீ முன்ஷி பேசியிருப்பது மக்களுக்கு எரிச்சலூட்டக் கூடியதாகும். ஆறு அவுன்ஸ் அரிசி அரை வயிற்றுக்கே போதும் என்று அவர்கள் நெடு நாளாக முறையிட்டு வந்திருக்கின்றனர். கூட்டு உணவாக ஓரளவு கோதுமையைப் பழக்கிக் கொண்டு வந்தவர்களுக்கும், அதன் விலை சுமார் 40 சதவிகிதம் அதிகரித்துவிட்டது காரணமாக அதை எளிதில் வாங்க முடியாமல் போய்விட்டது. இந்நிலையில் அரிசி ரேஷன் எட்டு அவுன்ஸாகவாவது உயர வேண்டுமென்று இந்த ராஜ்யத்தினர் கோருவதில் பேராசையெதுவுமில்லை. அரிசி இறக்குமதி செய்வதிலுள்ள கஷ்டங்களை ஸ்ரீ முன்ஷி வழக்கம் போல் இம்முறையும் எடுத்துக் காட்டினார். இவற்றை நாம் சிறிதும் குறைத்துக் கூற விரும்பவில்லை. ஆனால், இவ்விஷயத்தில் மத்திய சர்க்கார் காலா காலத்தில் இன்னும் உஷாராக நடந்து கொண்டிருக்க வேண்டும். இதைத் தவிர, உள் நாட்டிலேயே உபரி அரிசியுள்ள மாகாணங்களில் கொள் முதல் வேலையை இன்னும் சிறிது கண்டிப்பாக நடத்துவதன் மூலம் மற்ற மாகாணங்களின் தேவையை இன்னும் கணிசமாகப் பூர்த்தி செய்யக் கூடும். இத்துறையில் சென்னையில் கையாளப்படுவது போன்ற முறையை அந்த உபரி மாகாணங்களிலும் கையாளுமாறு மத்திய சர்க்கார் அவற்றை ஏன் நிர்ப்பந்திக்கக் கூடாது?

சென்னை-600 008



சாவி கிடைக்கணுமே!

காற்றுவாக்கிலே...

"தங்கம், வெள்ளி தலைகுப்புற விழுந்தது. சணல் சரசரவென்று இறங்குகிறது. வெல்லத்தை வேண்டுவோர் இல்லை. சர்க்கரையைச் சீண்டுவார் இல்லை. பதிமூன்று பருத்தி வியாபாரிகளுக்கு 10 லட்ச ரூபாய் நஷ்டம். மணிலா மார்க்கெட்டில் 9 கோடி ஓகயா! மிளகாய் மண்டிக்காரர்கள் கண்ணீர் வடிக்கின்றனர். கடுகு வியாபாரி, கன்னத்தில் கைவைத்தார். இன்னும் தனியா, மஞ்சள், சீரகம், வெந்தியம், அரிசிதிப்பிலி, கண்டத்திப்பிலி, பூண்டு முறையே 8, 12, 15, 7, 9, 17, 4 சதவிகிதம் விலை இறக்கம். மிளகைப் பிடிக்க முடியவில்லை. குண்டூர் மார்க்கெட் மூடப்பட்டது. சுண்டூர் மார்க்கெட் திறக்கப்படாது."

....அப்பப்பா, பத்திரிகைக்காரர்களுக்கு அலுத்துத்தான் போகாதா? தினசரியைப் புரட்டினா புத்தி பத்தியா இந்த சேதி தான். ஜனங்களுக்குத்தான் என்ன கும்மாளம். போன சண்டையில் பாரிஸ் வீழ்ச்சி, பெர்லின் வீழ்ச்சிகூட அவ்வளவு பெரிசாப் படவில்லை. அணுகுண்டு யுகத்தில் எவ்வளவோ அதிசயத்தைக் கண்டவர்கள்; எல்லா எண்ணெயையும்விட கடலை எண்ணெய் அதிக விலை விற்பதைப் பார்த்தவர்கள்தான். ஆனால், விலை வாசி இறங்கும் அற்புதத்தைக் கேட்டதுகூட இல்லையே! ஆனந்தக் கூத்தாடாமல் இருக்க முடியுமா?

நிதி, வர்த்தக, பொருளாதார நிபுணர்கட்கும் அரிய வாய்ப்பு. கரைத்துக் குடித்ததையெல்லாம் கக்கி, விலை சரிவுக்குக் காரணம் காட்டுகின்றனர். "அயல் நாட்டில் கிராக்கியில்லை. ஏற்றுமதி தீர்வைதான் குடியைக் கெடுக்கிறது. வரி போட்டுப் போட்டு சர்க்கார் உறிஞ்சி விட்டதே, யாரிடம் பணம் இருக்கு?" இந்த மாதிரி இன்னும் எவ்வளவோ. ரிசர்வ் பாங்கியும் என் பங்கு சொத்தையா என்ன; "வட்டி விகித உயர்வு, கடன்வசதிஇறுக்கத்தின் விளைவு இது" என்கிறது. பாத்யதைப் போராட்டம் ஒரு புறம். விலைச் சரிவில் சிக்கி தத்தளிக்கும் பண மூட்டைகளின் ஓலம் மறு புறம். டில்லியிலுள்ள "லக்ஷ்மி" ரக்ஷகனை நோக்கித் தெண்டனிட்டனர் சிலர். பழக்கமானவர் ஜாடை மாடையாகக் கண்ணடித்துப் பார்த்தனர். அது கல்லுப் பிள்ளையாராகத் தோன்றவே, சில பெரும் புள்ளிகள் கரடி விட ஆரம்பித்தன. இதோ பார், தலை வாசலில் பொருளாதார மந்தம். நாளைக்கே தொழிற் சாலைகளை மூட நேரும். இதைச் செய், அதைச் செய் சீக்கிரம் என்று பூச்சாண்டி கிளம்பின. இந்திய சர்க்காரோ நிலைமையைக் கூர்ந்து கூர்ந்து கவனித்த வண்ணமிருந்தனர்.

யாரை நம்பி எதைச் செய்கிறது என்று கேட்கிறார் வர்த்தக மந்திரி மஹதாப். மனப்பூர்வமாக புத்திமதி சொல்ல ஒருத்தன் கிடையாது. இந்த சுயநலமிகள் பேச்சைக் கேட்டுக் கேட்டு சர்க்கார் போக்கு சந்தி சிரிக்கிறது என்று பஹிரங்கமாகச் சொன்னவரல்லவா அவர். அரசாங்க கருத்து இதுதான். ஹேஷ்ய போத்துக்கும் ஒரு எல்லையுண்டு. விலையைக் கூட்டியோ, கழித்தோ கொஞ்சம் தட்டிக்கொண்டு போகட்டும் சுலபமாக சம்பாதிக்க கசக்காது. வாஸ்தவம். அதற்காக, பணம் படைத்தவனெல்லாம் ஆளுக்கு ஒரு ஊதுன்னு ஊதி விலையை ஏத்தினா, கடைசியில் பலூன் உடையத்தானே செய்யும். பேரக்காரனில் அகப்பட்டுண்டவனுக்கு அஷ்டமத்திலே சனி. இந்தத் திருக் கூட்டத்துக்கு யார்தான் இரக்கங் காட்ட முடியும்.

ஆற அமர சர்க்கார் தலையிட்டது. சில பண்டங்கள் மீது ஏற்றுமதித் தீர்வை குறைந்தது. சிலதுக்கு ரத்தாகியது. இதனால் பல கோடி ரூபாய் வருமானம் நஷ்டம். அதற்காக அன்னிய மார்க்கெட்டை இழக்க முடியுமா அல்லது உற்பத்தியாளர் நஷ்டமடைய விட முடியுமா. மார்க்கெட் புத்துயிர் பெறுகிறது.

இதையெல்லாம் கண்டு களித்த உங்களுக்கும் எனக்கும் லாபமும் இல்லை. நஷ்டமும் இல்லை. சரசமா வருடாந்திரமா வாங்கிப் போடலாம்னா, கையில் பணத்தைக் காணோம். கொஞ்சம் நஞ்சம் இருக்கிறவர் இன்னும் விலை இறங்கும்னு சப்புக் கொட்டிண்டு இருக்கார். துணிந்து போய் பார்க்கிறவருக்கு பகீர் என்கிறது. நாகபுரியில் இப்படித்தான் பேப்பர் நியூஸைப் படித்துப் படித்து ஒரு கிரஹஸ்தர் ஆனந்தத் தாண்டவமாடினாராம். சஹதர்மிணிக்குச் சகிக்கவில்லை. கையில் பணத்தை எண்ணிக் கொடுத்து 4 பவுன் உள்பட இந்த இந்த சாமான் வாங்கி வாரும்னு ஆர்டர் போட்டாள். ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு ஆசாமி சுற்றியடித்ததுதான் மிச்சம். சாயந்திரம் வெறும் கையுடன், பேஸ்து அடித்த மாதிரி மூஞ்சியை வைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். இந்த வீழ்ச்சியெல்லாம் பாரம், டன், பேல் கணக்கில்தான். சேர், பவுண்டு, கெஜத்துக்கு எப்போ வருமோ! சன்ன, மிக சன்ன ஜவுளி விலை குறைப்பு லட்சணத்தைப் பார்த்தாலே போதுமே. நமக்குக் கொடுத்து வச்சது ஆத்ம திருப்தி தான்.

கருர்

குதர்க்கம்

நரியம்பேட்டை கிராமப் பள்ளிக் கூடம் யாரோ ஒருவரால் கொளுத்தப் பட்டது. —களம்பூர் செய்தி.

பள்ளிக்கூடம் அறிவு கொளுத்தும் போது, தாம் ஏன் பள்ளிக்கூடத்தைக் கொளுத்திப் பார்க்கக்கூடாது என்று முனைந்திருப்பார்!

* * *

பிறவிக் குருடரான கிளேன் பென் பீல்ட் என்பவர் ரயில்வே ஸ்டேஷனில் தடுக்கிவிழுந்ததில் கண் பார்வை பெற்றார். —டமாஸ்கஸ் செய்தி.

இவர் பிரஸ்தாப ரயில்வே ஸ்டேஷனைக் 'கண்கண்ட தெய்வம்' என்று போற்றுவார் என்று யாருக்குத்தான் சந்தேகமிருக்கமுடியும்!

* * *

6 குழந்தைகளுக்குமேல் பெற்றெடுக்கும் பெற்றோர்களுக்கு விசேஷ சலுகைகள், சர்க்கார் மான்யம்—முதலியவை அளித்துக் கவுரவிக்க சிரிய சர்க்கார் சட்டம் செய்துள்ளது.

—டமாஸ்கஸ் செய்தி.

சிரிய சர்க்காரின் இந்தச் சீரிய சட்டம் அமுலுக்கு வருமானால், 'ஆறுக்குமேல் பெற்றால் ஆண்டியும் அரசனாகலாம்' என்று ஒரு புதுமொழியும் உண்டாகலாம்!

* * *

போலீசாக நடித்த ஆசாமியைப் போலீசார் கைது செய்தனர்!—செய்தி.

'பலே! போலீசார்களும் அவருடைய நடிப்பை ரசித்து, கைதியாக நடிக்கவும் ஒரு 'சான்ஸ்' கொடுத்திருக்கிறார்களே' என்று அவர்களுடைய ரசனையை வியக்கிறார் ஒரு ரசிகர்!

* * *

இந்திய ஐந்தாண்டு திட்டத்தைப் புகழ்ந்து பேசிய அகிலதேச பொருளாதார, தொழில் துறைக் தலைவர் ஸ்ரீ.கேவல், கனடாவிலிருந்து பெரும் அளவில் இந்தியாவிற்குக் காகிதம் அனுப்பவேண்டுமென்றார்.

—பம்பாய் செய்தி.

புகழ்பெற்ற ஐந்தாண்டு திட்டத்தைத் தயாரித்த இந்தியா, இன்னும் பல திட்டங்கள் தயாரிக்கக் காகிதப் பஞ்சம் ஏற்படக்கூடாதே என்ற நல்லெண்ணத்தோடுதான் பேசியிருப்பாரோ? !

* * *

குரங்கு மூளை மனிதன் மூளை போலவே வேலை செய்கிறது.

—ஆராய்ச்சி உண்மை.

'மனிதன் மூளை இல்லாமல்கூட நடந்துகொள்கிறானே, அப்படியிருக்க நமது மூளைக்கு அவர்களதை ஒப்பாடுவது எப்படி சரியாகும் என்று குரங்குகள் கண்டனம் தெரிவிக்கலாம்' என்கிறார் ஒரு விஷமக்காரர்!

"சூழ்நிலை சரியாக இருந்தால் ஸ்டாலினுடன் பேச்சு நடத்துவேன்."

—காமன்ஸில் சர்ச்சில்.

'சர்ச்சிலின் சூழ்நிலை ஒருக்காலும் சரியாக இருக்கப்போவதில்லை. புகைந்துகொண்டே இருக்கும்!' என்று தொழிற்கட்சி மெம்பர்கள் பேசிக்கொண்டதாகவும் கேள்வி!

* * *

ஒரே வருடத்தில் 7000—பேர்களுக்குத் தான் விவாகம் செய்து வைத்துள்ளதாக தெவபி நீதிபதி பெருமைப்படுகிறார்.

—நியூயார்க் செய்தி.

'பாவம், இவர்கள் விவாக ரத்து கோரி இவரிடமே வராமலிருக்கவேண்டுமே' என்று அனுதாபப்படுகிறார் மாஜி மனைவி யொருத்தியின் அமெரிக்கக் கணவர்!

* * *

பேனா உற்பத்தியாளர் சங்கக் கூட்டம் இனிது நடந்தேறியது,

—வண்ணாரப்பேட்டைச் செய்தி.

பல தீர்மானங்களும் 'இனிது' வரைந்திருப்பார்கள் என்றே நினைக்கிறோம்!

—தரளம்

ரயில் நேரங்கள்

★

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு	8–20
கிராண்டிரங் எக்ஸ்	காலை	8–15
சென்னை–கல்கத்தா (ஜனதா 3–வது வகுப்பு மட்டும்)	காலை	10–30
சென்னை—பெஜவாடா பாஸஞ்சர்	காலை	6–55
பம்பாய் மெயில்	இரவு	9–5
விசாகப்பட்டணம் பார்ஸல் பாசஞ்சர் (3–ம் வகுப்பு)	இரவு	10–45
சென்னை—பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸ் (3–ம் வகுப்பு) பிரதி வியாழன்	மாலை	2–0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை	7–35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை	8–50
ரேணிகுண்டா பாஸஞ்சர்	மாலை	5–30
பெங்களூர் மெயில்	இரவு	8–50
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல்	12–35
" பாஸஞ்சர்	காலை	6–10
" "	இரவு	9–35
சேலம் பாஸஞ்சர்	காலை	11–10
பூரி பாஸஞ்சர்	இரவு	7–20
விசாகப்பட்டணம் பார்சல் பாஸஞ்சர் (3– வகுப்பு)	இரவு	10–45
ஜோலார்பேட்டை பாசஞ்	காலை	11–40
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு	8–15
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை	6–0
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு	7–30
அரக்கோணம் பாசஞ்	மாலை	6–44

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை	6–45
கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்	மாலை	6–50
சென்னை–கல்கத்தா (ஜனதா 3–வது வகுப்பு மட்டும்)	மாலை	5–40
சென்னை–பெஜவாடா பாஸஞ்சர்	இரவு	9–30
பூரி பாஸஞ்சர்	காலை	10–10
விசாகப்பட்டணம் பார்சல் பாசஞ்சர் (3– வகுப்பு)	காலை	5–45
பம்பாய் மெயில்	காலை	5–50
" எக்ஸ்பிரஸ்	இரவு	7–10
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை	4–20
ரேணிகுண்டா பாஸஞ்	இரவு	9–15
" "	காலை	9–50
பெங்களூர் மெயில்	காலை	6–25
" எக்ஸ்.	மாலை	2–25
" பாஸஞ்சர்	இரவு	8–40
" "	காலை	5–15
ஜோலார்பேட்டை பாஸஞ்சர்	மாலை	2–15
பிட்ரகுண்ட பாஸஞ்	காலை	4–0
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை	7–50
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை	7–5
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை	7–20
மதராஸ்–பம்பாய் வாராந்திர ஜனதா எக்ஸ்பிரஸ் (3–ம் வகுப்பு மட்டும்) பிரதி திங்கள்	மாலை	3–0

• எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்		
செங்கோட்டை பாஸஞ்	காலை	7–0
இந்தோ–சிலோன் எக்ஸ்.	இரவு	8–20
திருவனந்தபுரம் பாஸஞ்.	இரவு	9–50
மதுரை பாஸஞ்சர்	இரவு	10–20
கார்டு லைன்		
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு	7–30
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு	9–30
மதுரை ஜனதா எக்ஸ்பிரஸ்	இரவு	6–05
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை	10–0
விழுப்புரம் பாசஞ்சர்	மாலை	3–40
பீச்சிலிருந்து		
காஞ்சீபுரம் பாசஞ்சர்	மாலை	5–34
காஞ்சீபுரம் பாஸஞ்சர்	மாலை	6–1

வரும் நேரம்

மெயின் லைன்		
செங்கோட்டை பாசஞ்சர்	இரவு	8–50
இந்தோ–சிலோன் எக்ஸ்.	காலை	7–40
திருவனந்தபுரம் பாஸஞ்.	காலை	6–0
மதுரை பாஸஞ்	காலை	5–30
கார்டு லைன்		
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை	6–50
தூத்துக்குடி எக்ஸ்.	காலை	6–20
தனுஷ்கோடி பாஸஞ்.	மாலை	4–5
விழுப்புரம் பாசஞ்சர்	காலை	11–45
மதுரை ஜனதா எக்ஸ்பிரஸ்	காலை	8–25
பீச்சிற்கு		
காஞ்சீபுரம் பாசஞ்சர்	காலை	9–28
" "	காலை	9–52

தங்கச்சங்கிலி

★

என். பட்டம்மாள்

பார்த்தசாரதி கோட்டைக் கழற்றிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான். ஆமாம். ஆள் இருக்கும் சுவடு கூட இல்லை அறையில். முண முணத்துக் கொண்டே கையிலிருந்த புஷ்ப பொட்டலத்தை மேஜை மீது வைத்துவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தான். அப்பொழுது தான் ஜெயமணி உள்ளிருந்து காபியை எடுத்துக் கொண்டு வந்தாள். ஜெயமணியை அப்படியொன்றும் பிரமாதமான அழகி என்று சொல்ல முடியாது. ஆனால், ஏதோ விவரிக்க முடியாத கவர்ச்சி ஒன்று அவள் முகத்தில் இருக்கத்தான் செய்தது. ஆசாரமான மடிசார் புடவை தான் அணிந்திருந்தாள் என்றாலும் அது கூட அவளுக்கு அழகாகத்தான் இருந்தது. அகலமான குங்கும பொட்டு மஞ்சள் பூசிய நெற்றியில் மங்களகரமாக ஒளி வீசிக் கொண்டிருந்தது.

"என்ன அதற்குள் காபி போட்டாய்விட்டதா?" பார்த்தசாரதியின் தாயார், ரங்கநாயகி அம்மாள் அதிக ஆசாரமுடையவள். உள் அடுப்பில் காபி போட விடுவதில்லை. அதனால் தினம், பார்த்தசாரதி வருவதைப் பார்த்துவிட்டு வேறு அடுப்பில் காபி போட்டுக் கொண்டு வருவாள் ஜெயமணி.

"உம்."

"அம்மா எங்கே காணோமே? பெரியப்பா வீட்டிற்குப் போயிருக்கிறாளா என்ன?"

"யாருக்குத் தெரியும்? எங்கே போனாரோ?" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, ஜெயமணி உள்ளே போனாள். சற்று நேரம் சமையலறையிலிருந்து கடா புடா என்ற சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. வழக்கம் போல் ஜெயமணியின் வாய் காரியம் செய்கையில் ஏதாவது பாட்டை முண முணத்துக் கொண்டிருக்கவில்லை. பார்த்தசாரதிக்கும் நிலைமை புரிந்துவிட்டது. அதனால், பேசாமல் ஆபீஸ் பைல்களைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினான். அப்பப்பா! என்றைக்குத்தான் இந்த மாமியார்– மாட்டுப் பெண் மனத் தாங்கல்கள் ஒழியப் போகின்றனவோ? சே! சே.

"அழகாயிருக்கிறது! மணி ஏழு ஆகப் போகிறது. இன்னுமா விளக்கை ஏற்றவில்லை?" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் ரங்கநாயகி அம்மாள்.

"நீயும் இங்கே தானிருக்கிறாயா என்ன? இந்த அழகில் ஆபீஸ் வேலை வேறு பார்க்கிறாயா? இந்த கும்மிருட்டில் என்ன கண் தெரிகிறது?" என்று கேட்டுக் கொண்டே வந்து 'ஸ்விச்'சைப் போட்டாள். சற்று முன் இருண்டிருந்த அறையில் ஒளி அரை கணத்தில் வியாபித்து நின்றது.

"மணி ஏழா ஆகிவிட்டது? கவனிக்கவேயில்லை. உம். . இந்தனை நாழி நீ எங்கே போயிருந்தாயாம்?"

"ஊஹூம். போக்கிடம் எங்கே இருக்கு எனக்கு. தாயாரைப் போய் சேவித்துவிட்டு வந்தேன். எங்கே இந்தப் பொண்ணு?"

"எந்த பெண்?"

"தெரியாது போல் பேசுகிறதைப் பாரேன். ஜெயமணியைத்தான் சொல்கிறேன். பேச்சு மூச்சைக் காணோமே?"

"நானே உன்னைக் கேட்க வேண்டுமென்றிருந்தேன். இன்னிக்கு என்ன நடந்தது?"

"ஒன்றும் நடக்கவில்லை. அவள் ஏதாவது சொன்னாளா?"

"பேசாமல் கழுத்தையறுப்பது தான் அவள் தொழில் என்று தெரிந்த விஷயமாயிற்றே. என்ன நடந்தது என்று நீயாவது சொல்லித் தொலையேன்" என்று சிடு சிடுப்புடன் கேட்டான் பார்த்தசாரதி.

"ஒண்ணுமில்லை. அவளோட தங்கை ஜானகிக்குக் கல்யாணமோ இல்லையோ அதற்கு வந்து நீ ஆபீஸுக்குப் போனப்புறம் அவ அண்ணன் வந்து அழைச்சான். நாளைக்குக் கல்யாணம். இப்பொழுதே அழைத்துப் போகிறேனென்றான். அவள் என்னவோ சொன்னாள். நான் என்னவோ சொன்னேன். உண்மையைச் சொன்னதும் கோபம் வந்துவிட்டது அவளுக்கு. நீயே சொல்லேன். உன்னை அழைக்காமல் அவன் இங்கே வந்து அழைக்கிறதே கொஞ்சமாவது நன்றாகயிருக்கிறதா?"

"எல்லாம் ஆபீஸிலும் வந்து மானங் கெட்டு அழைத்தான் அவன். அயோக்யன்! அந்தத் திரிசமனுக்குப் பிறகு என்னைப் பார்க்கக் கூடத் துணிவு இருக்கிறதே அவனுக்கு!"

பார்த்தசாரதி நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தான். ரங்கநாயகி அம்மாளும் திண்ணையைப் பார்க்க நடையைக் கட்டினாள். அமைதி இன்னும் பதின் மடங்கு கோரத்துடன் நிலவி நின்றது. ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் பார்த்தசாரதி கிடுகிடுவென்று கிணற்றுப் பக்கம் போனான்.

ஜெயமணி கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாள். பார்த்தசாரதியைப் பார்த்த பின்னும் அவள் பேசவில்லை. ஆனால், பார்த்தசாரதிக்குத்தான் ஆத்திரம் எல்லை கடந்து போயிருந்தது. அதனால்,

"ஓகோ! அருமை அண்ணா வந்ததும் தலை கால் புரியவில்லை போலிருக்கிறது. உடனே தங்கை கல்யாணத்திற்குப் போய்விடத் துடிக்கிறது உடம்பு, இல்லையா? நீ போகா

விட்டால் கல்யாணமே நின்று போய்விடும். இல்லையா? ஐய! என்ன வெட்கம் கெட்ட ஜன்மங்கள்!" என்றான் படபடப்புடன். இதைக் கேட்டதும் ஜெயமணி தோண்டியை 'நக்'கென்று கிணற்றின் மேடைமீது வைத்தாள். சுவபாவத்திலேயே சாந்தகுணமுள்ளவளான அவள், முற்றிலும் மாறினவளானாள். அவளையும் மீறிக்கொண்டு வார்த்தைகள் உதிர்ந்தன.

"ஏன்? என் அண்ணாவுக்கு என்ன குறைச்சலாம்? அப்படி நான் என்ன வெட்கம் கெட்டுவிட்டேனாம்?" என்று வெடுக்கென்று கேட்டாள்.

"உனக்கு ரோஸம் இல்லை, அதற்காக எனக்குமா ரோஸமில்லாமலிருக்கும்? அந்த மோசடிக்கார ....."

"கொஞ்சம் நிதானித்துதான் பேசுங்கள். உங்களுக்குத்தான் ஒரு பத்துபவுன் சங்கிலி என்னைவிட மேலாக போய்விட்டது. அவனுக்கு தங்கை என்றால் உயிர்தான்."

"தெரிந்ததே எல்லாம் இந்த அழகை சொல்லிக்கொள்ள வேறு வேண்டுமா? அந்தக் கல்யாணம் பக்கம்கூட எட்டிப் பார்க்கக் கூடாது. ஆமாம் சொல்லிவிட்டேன்" என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிவிட்டு உள்ளே திரும்பினான் பார்த்தசாரதி. ரங்கநாயகி அம்மாள் வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன இரைச்சல் என்று வந்து பார்க்கிறேன். எல்லாம் நீதானா? என்னவோ போ, போனதுபோகட்டும். அதுவும் சிறிசுதானே? நாளைக்கு முகூர்த்தத்துக்கு மட்டுமாவது போய் விட்டு வரட்டும். அவன் ரொம்ப சொல்லிவிட்டு போயிருக்கிறான்." என்றாள்.

"எனக்குத் தெரியும் இது முன்னமேயே நான் ஏதாவது சொன்னாலே இப்படித்தான். மாமியாரும் மாட்டுப்பெண்ணுமாக ஒன்று சேர்ந்துகொண்டு விடுவீர்கள். ஏது எப்படிப் போனாலும் கல்யாணத்திற்குப்போகக் கூடாது என்றால் போகக்கூடாதுதான்."

"சரிதான் போ. எதையாவது நினைத்துக்கொண்டு கன்னா பின்னா என்று உளறாதே. அந்த விவகாரமெல்லாம் அவரோடு போகட்டும். ஜெயமணி முகூர்த்தத்திற்கு மட்டுமாவது போகட்டும். அவன்தான் உன்னையும் வந்து அழைத்திருக்கிறானே. நான் முதலில் அவன் உன்னை அழைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன்."

"அம்மா, இதோ பார். இந்த விஷயத்தில் நீ குறுக்கிடாதே. உனக்கு ஒன்றும் தெரியாது. அப்பா போய்விட்டாரென்றால் அவருடன் எல்லாம் போய்விட்டதா? அவன் வீட்டில் காலை எடுத்துவைத்தால் அவ்வளவுதான். அப்புறம் இங்கே வரவே வேண்டாம். அப்படியே போய் விட வேண்டியதுதான்." என்று பொறிந்து தள்ளிவிட்டு வெளியே போய்விட்டான் பார்த்தசாரதி. ஜெயமணி கண்ணில் நீர் தளும்ப குடத்தை எடுத்து வைத்துக் கொண்டு சமையலறைக்குள் சென்றாள் மங்கலாக எரிந்து கொண்டிருந்த அடுப்பின் ஒளியில் அவள் முகம் சோபையிழந்து காணப்பட்டது.

"என்னவோ போ, அவன் பிடித்தால் ஒரு பிடிதான். சின்னக் குழந்தையிலிருந்தே இந்த மாதிரி பிடிவாதம் உண்டு அவனுக்கு. இன்னும் நான் சொல்லிப் பார்க்கிறேன்." என்று மாட்டுப் பெண்ணை சமாதானப்படுத்தி விட்டுச் சென்றாள் மாமியார். ஆனால் ஜெயமணியின் மனம் சமாதானமடையவில்லை. கடந்த 3 வருட சம்பவங்கள் அவள் மனத்திரையில் தோன்றி மறைந்தன.

ஜெயமணி கோபாலய்யங்காரின் ஐந்தாவது புதல்வியாக ஜனித்த பொழுது, ஐந்தாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது என்று குழந்தையை வந்து பார்த்துவிட்டுப் போனவர்கள் சொல்லிக்கொண்டாலும், கோபாலய்யங்காருக்கு என்னவோ தன்னை ஆண்டியாக்கி விடுவதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு வந்த சனியன் என்றுதான் குழந்தையைப் பார்த்ததில் தோன்றியது. அதை நிருபிப்பதுபோல், அந்தக் குடும்பத்தின் பொருளாதார நிலைமையும் க்ஷீணித்துப் போய், கடைசியில் கோபாலய்யங்காரும் அவர் மனைவியும், இந்தக் கஷ்டங்களை அனுபவித்தது போதும் என்று கண்ணையும் மூடிவிட்டார்கள். இப்போது குடும்ப பாரம் முழுதும் மூத்த பிள்ளை வீரராகவன்மீது விழுந்தது. அவனும் எப்படியோ மூன்று தங்கைகளை ஒரு வழியாகக் கல்யாணம் செய்து புக்ககம் அனுப்பிவைத்தான். ஆனால்

நான்காவது தங்கையான ஜெயமணியின் முறை வந்தபோது அவனாலேயே தாங்க முடியவில்லை. ஆயிரம் பொய்சொல்லி ஒரு கல்யாணத்தை முடித்து வைப்பதில்லையா? ஆனால் அவ்வளவுதூரம் போகவில்லை வீரராகவன். ஒரே ஒரு பொய்யைச் சொல்லி ஜெயமணிக்கு விவாகம் செய்துவைத்தான். அதாவது பத்து பவுனுக்கு சங்கிலி ஒன்றை பண்ணிப்போடுவதாகச் சொன்னான். பார்த்தசாரதியின் தந்தையின் கண்டிப்பு, கறார் எல்லாம் பிரசித்தமானவை. அப்படிப்பட்டவரை ஏமாற்ற முடியுமா? 'சங்கிலியுடன் வருவதாக இருந்தால் பெண் வரலாம், இல்லாவிட்டால் வரவே வேண்டியதில்லை' என்று அறிக்கை வந்தது. வீரராகவன் இடிந்து போனான். தன் நிலைமையைப் பற்றித் தானே நேரில் போய் விவரித்தான். உள்ளம் உருகும்படி எழுதினான். ஒன்றிலும் பலனில்லை. அந்த நெருக்கடியான சமயத்தில்தான் ஜெயமணி தன்

கூரிய மூளையைக்கொண்டு ஒரு சிறந்த யோசனையைக் கண்டு பிடித்தாள்.

"அண்ணா, எப்படியாவது ஒரு 50 ரூபாய் கொடுத்து ஒரு மாசம் தாங்கும்படியாக நல்ல 'கில்ட்' சங்கிலி ஒன்றை வாங்கிக்கொடு. நான் போட்டுக்கொண்டு போய் விடுகிறேன், அப்புறம் கடவுள் விட்டபடியாகட்டும்" என்றாள். வீரராகவனுக்கு அது சிறிதும் பிடிக்கவில்லை. இல்லாத விவாதமெல்லாம் செய்தான். ஆனால், ஜெயமணி அவ்வளவையும் எதிர்த்துக்கொண்டு கடைசியில் 'கில்ட்' சங்கிலி சகிதமாக புக்ககம் வந்து சேர்ந்தாள்.

ஒரு மாதம் ஒன்றும் நடக்கவில்லை. மெதுவாக இரண்டாவது மாதத் தொடக்கத்திலேயே 'கில்ட்' மறைய ஆரம்பித்தது. உள்ளேயிருந்து வெள்ளி இளிக்க தொடங்கியது. ஜெயமணியின் மாமனார் வீடே அதிரும்படி கத்தினார். பெண்ணை உடனே திரும்பிக் கொண்டுபோய் விடும்படி உத்திரவிட்டார். ஆனால் பார்த்தசாரதியும் ரங்கநாயகி அம்மாளும் சம்மதிக்கவில்லை. அவர்களுக்கு சாந்த குணமும் சிரித்த முகமாக இருக்கும் ஜெயமணியை வெகுவாகப் பிடித்துப்போயிருந்தது. ஜெயமணிக்கும் இது தெரிந்திருந்தது. அதனால் சந்தர்ப்பத்தைத் தனக்கு சாதகமாக உபயோகித்துக்கொள்ள எண்ணி,

"எனக்கு என்ன தெரியும்? அண்ணா 10 பவுன் சங்கிலி என்றான். போட்டுக்கொண்டு வந்து விட்டேன். இப்படி சொந்த அண்ணாவே மோசம் செய்வான் என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று சொல்லிவிட்டாள். அதிலிருந்து வீரராகவனுக்கும், பார்த்தசாரதி குடும்பத்தாருக்கும் பெரும்பகை ஏற்பட்டுவிட்டது. பார்த்தசாரதியின் தந்தை இருக்கும் வரை வீரராகவன் மிதித்த நிலத்தைக்கூட அவர் மிதிக்காமல் இருந்தார். வீரராகவனும் அனாவசியமாக உண்மையைச் சொல்லி ஜெயமணியை அம்பலத்திற்கு இழுக்க மனமொப்புவில்லை. இருந்தாலும் தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த அநியாய பழியை நினைத்து, நினைத்து மனம் வெதும்பினான். கடைசியில் எப்படியானாலும் தங்கை சுகமாயிருக்கிறாள் என்ற ஒரு எண்ணத்தில் மகிழ்ச்சியடைந்தான். இந்த நிலையில் போன வருடம் ஜெயமணியின் மாமனார் இறந்துவிட்டார். இப்போது வீரராகவன், தன் மற்றொரு தங்கையின் கல்யாணத்திற்கு ஜெயமணியை அழைத்துவிட்டுப் போயிருந்தான்.

மணி ஒன்பதும் அடித்து ஓய்ந்தது. பார்த்தசாரதி தன்னையறியாமல் வீரராகவன் குடியிருந்த தெருவிற்கே வந்திருந்தான். கல்யாணப் பந்தலில் ஒரு 'காஸ் லைட்' எரிந்து கொண்டிருந்தது. நாலைந்து உறவினர்கள் வெளி வாசலுக்கருகில் நின்றுகொண்டு உரக்கப் பேசிக் கொண்டிருந்தார்கள். தானாகக் கேட்காவிட்டாலும் அவர்களின் உரத்த பேச்சு பார்த்தசாரதியின் காதில் வந்து மோதியது.

"என்ன ஸார் இது? இந்தக் காலத்தில் கூட இப்படிப்பட்ட மனித ஜன்மங்கள் இருக்கிறதா என்ன? பத்து பவுன் சங்கிலி போடாததால் பெண்ணைச் சொந்த தங்கையின் கல்யாணத்திற்கு அனுப்ப மாட்டானாமே? தகப்பனுக்கு மேல் பிள்ளை இருக்கிறானே? எல்லாம் அப்படி மோசடி செய்திருந்தாலும் கூட..."

"நீங்க ஒண்ணு. வீரராகவனின் நிலையை யோசித்தீர்களா? நூறு ரூபாய் சம்பளத்தில் 6 தங்கைகளுக்கு ஒரு மனுஷன் எப்படி ஸார் கல்யாணம் பண்ணுகிறது? எல்லாம் அவரவர்கள் பட்டால் தெரியும்."

"போமய்யா போம். என்ன இருந்தாலும் பத்து பவுனுக்கு இருக்கும் மதிப்பு பெண்ணுக்கு உண்டா? விஷயம் தெரியாதவராகயிருக்கிறீரே."

பார்த்தசாரதியின் காதில் இவையவ்வளவும் தெளிவாக விழுந்தன. மறுபடி அவன் கால்கள் தன்னையறியாமலேயே திரும்பி வீட்டை நோக்கிச் சென்றன. கதவு மூடியிருந்தது. சமையலறையில் ஜெயமணியும், ரங்கநாயகி அம்மாளும் பார்த்

திரங்களைத்தேய்த்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அம்மா அப்பா செத்துப் போன போது ஜானகிக்கு மூன்று வயது தான். அவளும் இவ்வளவு பெரியவளாகி கல்யாணம் ஆகிறது என்று நினைக்கும் போது..."

"ஜெயமணி பேசாமலிரேன். நாளைக்கு அவன் ஆபீஸுக்குப் போனதும், நானும் நீயும் காதும் காதும் வைத்தாற்போல் போய் விட்டு வரலாம். அவனிடம் சொல்லவே வேண்டாம்."

"அப்படி என்னம்மா ஆசை வேண்டிக் கிடக்கிறது? இருந்தாலும் அண்ணா எங்களுக்காகச் சிரமப்பட்டதை நினைத்தால். ."

"பைத்யம். எதையாவது சொல்லிண்டு இருக்காதே. இதோ அவன் வந்தாட்டாப்போல இருக்கிறது. நான் தான் சொல்றேனே, போயிட்டு வரலாம்னு." தூரத்தில் மாப்பிள்ளை அழைப்பு மேளச் சப்தம் கேட்டது. கல்யாணி ராகம் அந்த மௌன இரவை ஊடுருவிக் கொண்டு ஒவ்வொரு இதயத்திலும் பாய்ந்தது. பார்த்தசாரதியின் காதில் இரு வாக்யங்கள் மாறி மாறி ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

"உங்களுக்குத் தான் பத்து பவுன் சங்கிலி என்னைவிட மேலாகப் போய்விட்டது."

"பத்து பவுனுக்கு இருக்கும் மதிப்பு பெண்ணுக்கு உண்டா?"

"ஆமாம், இல்லைதான்." என்று சொல்லிக் கொண்டான் பார்த்தசாரதி. பாவம்! வீரராகவன் தான் என்ன செய்வான்? 200 ரூபாய் சம்பளத்தில் 3 பேர் குடித்தனம் செய்ய முடியாமல் திண்டாடுகிறோமே, 100 ரூபாய் சம்பளத்தில் எப்படி அவன் பத்து பவுன் சங்கிலியும் செய்து, கல்யாணமும் வேறு செய்து கொடுப்பான்? பார்த்தசாரதி, நாற்காலியை மேஜைக்கருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். பழக்கம் காரணமாக அவன் கைகள் தாமாக எதிரில் இருந்த புஸ்தகத்தைப் பிரித்தன.

ஆனால், படிப்பு ஓடவில்லை. மாலையில் வாங்கி வந்திருந்த மல்லிகை புஷ்பங்கள் மலர்ந்து, பொட்டலத்திலிருந்து மனோகர வாசனையைப் பரப்பிக் கொண்டே சென்றன. அதை ஜெயமணி எடுத்துக் கொண்டே போகவில்லை போலிருக்கிறது. மறுபடி நாற்காலியில் சாய்ந்தான். அமைதியற்ற மனதுடன் பார்த்தசாரதி. இப்போது நாதஸ்வர வித்துவான் கல்யாணியைவிட்டு விட்டு பந்துவராளியை வாசித்துக் கொண்டிருந்தார். கடிகார முள் பதினொன்றை நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. எதையோ நினைத்துக் கொண்டவன் போல், பார்த்தசாரதி, அந்த புஷ்ப பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான். பால்கனிச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு, அந்தக் கொட்டும் பனியில், சப்தம் வரும் திக்கை நோக்கியவாறு நின்று கொண்டிருந்தாள் ஜெயமணி.

"அடுத்த தெருவில் மாப்பிள்ளை அழைப்பதை இங்கே இருந்து கொண்டு பார்த்தால் தெரிந்துவிடுமாக்கம்?"

ஜெயமணி திடுக்குற்றுத் திரும்பினாள். நிலவொளியில் இரு கண்ணீர்த் துளிகள் அவள் கண்களில் மின்னின. அடுத்த கணம் நெஞ்சைப் பிளக்கும் விம்மல்கள் பார்த்தசாரதியை நிலை தடுமாறச் செய்தன. அழுகைக்கிடையில் ஜெயமணி சொல்ல ஆரம்பித்தாள்.

"உண்மையில். . அண்ணா. . . இல்லை. . சங்கிலியைப் போட்டு அனுப்பவில்லை. . நான் தான் அவனை. . கட்டாயப்படுத்தி. ."

"இதோ பார், ஜெயமணி; சொல்வதைத் தெளிவாகச் சொல்லேன். நான் தான் உன்னை ஜானகியின் கல்யாணத்திற்கு அழைத்துப் போகிறேன் என்கிறேனே. இதோ பாரேன்."

ஜெயமணி பொங்கி வரும் அழுகையை அடக்க உதட்டை அமுக்கிக் கொண்டே, பார்த்தசாரதியை ஏறிட்டுப் பார்த்தாள்.



சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு சந்தா விகிதம்
★

1	வருடம்	13—0
6	மாதம்	7—0
3	மாதம்	3—12

தனிப்பிரதி அணா 4.

வெளிநாடு:

1	வருஷம்	ரூ. 15.
6	மாதம்	ரூ. 8.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

முறைப் பெண்

கோமதி சுப்ரமணியம்

விமலா

வீட்டு வாசற்படியில் காலடி வைத்ததுமே, என்னையறியாமல் உள்ளம்மகிழ்ச்சியடைந்தது.வருஷக் கணக்காக அம்மாவையும், அப்பாவையும் பிரிந்திருந்தது போன்ற ஏக்கம். எங்கள் வரவை எதிர்நோக்கி ஆசையுடன் காத்து நின்ற அம்மாவை ஓடிப் போய் கட்டிக் கொண்டேன். பச்சைக் குழந்தையிடம் காட்டும் பரிவுடன் அம்மாவும் என்னை அணைத்துக்கொண்டாள். பொங்கிப் பெருகும் அன்புப் பிரவாகத்தில் எத்தனை நேரம் திளைத்திருந்தோமோ தெரியாது.

அண்ணாவும் அப்பாவும் சற்று நேரம் லோகாபிரமமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சோடு பேச்சாக அம்மாவுக்கும் சாட்டை கொடுத்துக் கொண்டார். "களைத்து வந்த குழந்தைகளுக்கு ஆகாரம் ஒண்ணும் கொடுக்காமல் வந்தவர்களோடு நீயும் வாயைப் பார்த்துக் கொண்டு நின்றால், காரியம் எப்படி ஆகிறது" என்று அப்பா சொல்லவே, அம்மா எங்களைச் சாப்பிடத் துரிதப்படுத்தினாள்.

அம்மாவிடம் எவ்வளவோ பேச வேண்டும், என்னவெல்லாமோ சொல்ல வேண்டும். அங்கே நடந்தவற்றை ஒன்றுவிடாமல் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் வழி நெடுக, நெட்டுருப் பண்ணிக் கொண்டே வந்தேன். ஆனால், அம்மாவைக் கண்டதும் அவளது மெய் மறந்த அன்பில் ஒன்றுமே பேச முடியாமல் மௌனியாகிவிட்டேன். சின்னம்மாவும், சின்ன எஜமான்களும் இல்லாமல் வீடு வீடாக இல்லையே. வெறிச்சோடிப் போயிருந்த வீட்டில் இப்பொழுது தான் லக்ஷ்மி களை தாண்டவமாடுகிறது என்று தனது சந்தோஷத்தை வெளியிட்டுக் கொண்டான் வேலைக்கார முனிசாமி. குழந்தையிலிருந்து தூக்கி வளர்த்த அவனுக்கு என்னிடம் அலாதி பிரியம். இப்பொழுது பெரியவளாகிவிட்டாலும் சின்னம்மா சின்னம்மா என்று என் பேரில் உயிரையே வைத்திருந்தான், நான் ஏதாவது வேலை சொல்லியிருந்தால், எனக்காக ஏதாவது வேலை செய்து கொண்டிருந்தால்— அப்பா அப்பொழுது கூப்பிட்டாலும் நான் ஏவிய வேலையைச் செய்து முடித்துவிட்ட பிறகே ஏன் என்று கேட்பான். என் மீதுள்ள சலுகையில் அப்பா அவனைக் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது முனிசாமிக்கு அதிக வயதாகி விட்டபடியால், ஓட, ஓடியாட முடியாத வேலையாக, எந்த நேரமும் வீட்டுக்குக் காவலாக எங்கள் வீட்டோடேயே இருந்து வந்தான். எங்கள் குடும்பத்தவருள் ஒருவனாகவே, எங்கள் நன்மை தீமைகளில் பங்கெடுத்துக் கொள்வான். நாங்களில்லாமல் ஏங்கிப் போயிருந்த ஒரு மாத வாழ்க்கையையே மாறி மாறிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

சமையல்கார அம்மா, அன்று தான் சமைத்தாற் போலிருக்கிறதென்றும், குழந்தைகளுக்கு அன்புடன் பரிமாறும் பாக்கியம் கிடைத்த அன்றே நன்னாள் என்றும், தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். இப்படி ஒவ்வொருவரும் எங்கள் வரவிற்காக சந்தோஷத்தை வெளியிட்டுக் கொண்டனர்.

ஊர் சென்று வந்த விஷயங்களைப் பேசிக் கொண்டே ஒரு வகையாகச் சாப்பாடு முடிந்தது. சம்பாஷணையின் முக்கால் பகுதியும் மீனாவைப் பற்றியும், அவள் வேலைத் திறனைப் பற்றியும் வர்ணிப்பதாகவே நிறைந்திருந்தது. சந்துரு அண்ணா எந்த இடத்தில் பேச்சைத் துவக்கினாலும் கடைசியில் மீனாவைப் பற்றியதாகவே கொண்டு முடிப்பான். குமார் அண்ணாவோ ஏதோ ஒப்புக்குப் பேசுகிறவனைப் போல் இரண்டொரு வார்த்தைகள் பேசினானே தவிர, முழு சம்பாஷணையிலும் உற்சாகத்துடன் கலந்து

கொள்ளவில்லை. அது ஏன் என்று புரியவில்லை. ஒருவேளை மீனாவைப் பிரிந்து வந்த ஏக்கமாக இருக்கலாம். புறப்பட்டு வருகிற முதல் தினத்திலிருந்தே இப்படித்தான் உற்சாகமிழந்து, காண்கிறான். இந்த ஆண் பிள்ளைகளே இப்படித்தான். பெண்ணாகப் பிறந்த எனக்கு எப்போ ஊர் போய்ச் சேரப் போகிறோம் அப்பாவையும் அம்மாவையும் எப்பொழுது காணப்போகிறோம் என்று துடியாய்த்துடித்தது மனம். ஆனால், அண்ணாவோ.. ..? ஒரு பெண் வரு முன்னேயே இப்படி என்றால் வந்த பிறகு எப்படியோ?

தங்கம்

இந்தப் பெண் வருவதற்கு முன் தான் விவரம் தெரியவில்லை என்று திண்டாடினால் வந்த பிறகாவது விஷயத்தை விளக்கி சொல்லுகிறாளா? ஒன்றுமில்லை என்னடி போன விஷயமென்ன? அங்கே நடந்ததென்ன என்று கேட்டால் ஏதாவது புரியும்படியாகச் சொல்லுகிறாளோ, அதுவுமில்லை. எப்போது வருவாள்? விஷயத்தை விரிவாய்க் கேட்க வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டு இருந்தேன். அது போல் வந்து சேர்ந்தாள். வந்து வெகு நேரமாகியும் தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை. எல்லாரும் சாப்பாடு முடிந்து அவரவர்கள் படுக்கப் போன பின், விமலியைத் தனிமையில் அழைத்து எனது ஆவலைக் கேட்டுத் தீர்த்தேன். என்னடி போன காரியம் காயா, பழமா? என்று கேட்டால் நேரான பதில் சொல்லாதோ பெண். "காயும் இல்லை. பழமும் இல்லை. அழுகப் பழுத்த பழம்" என்று புதிர் போடுகிறாள். புதிரைச் சற்று விளக்கிச் சொல்லம்மா என்று கெஞ்சினால் அவளுக்குப் பரிகாசமாக இருக்கிறது. சமயா சந்தர்ப்பம் தெரியாமல் விளையாடும் குழந்தைப் புத்தி என்றைக்குத்தான் தூரப் போகிறதோ தெரியவில்லை.

என்னுடைய துடிப்பு அவளுக்கு எங்கே தெரிகிறது? நாளை அவளுக்குக் குழந்தைகள் பிறந்து, அவர்கள் வயது வந்து, விவாகத்திற்கு தடுமாறும் பொழுது ஒருவேளை என் நிலை தெரியுமோ என்னவோ? அப்பொழுது நான் இருந்தால் நன்றாகச் சுட்டிக் காட்டுவேன்.

என் பைத்தியக்கார எண்ணத்தை நினைத்து நானே சிந்தித்துக் கொண்டேன். விமலியைப் பழி வாங்கும் சாக்கில் வெகு காலம் உயிருடனிருக்க ஆசை. இந்த ஆசையைச் சுயநலமென்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்? அந்தச் சமயத்தை விட்டு அடுத்த சமயம் பேசலாமென்று அன்றைக்கு அதோடு விட்டுவிட்டேன்.

மறு நாள் மாலை. யாவரும் வெளியே உலாவச் சென்றுவிட்டார்கள். நானும் விமலியும் மட்டும் வீட்டில் தனித்திருந்தோம். பல பல பேச்சுக்களாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, "அம்மா மீனா இப்பொழுது எப்படி மாறிவிட்டாள் தெரியுமா?" என்று ஆரம்பித்தாள்.

"போதும். போ. உன் பேச்சு. நான் கேட்டதற்கு ஒன்றும் சரியான பதிலளிக்க மாட்டேனென்கிறாய். அதைவிட்டு சதா மீனாவின் பெருமையைப் புகழ்ந்து வீணாக என் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக் கொள்ளுகிறாய்?" என்று கோபமாகக் கேட்டேன்.

அது விஷயமாகத்தான் சொல்ல வந்தேன். அதற்குள் கோபித்துக் கொள்ளுகிறாயே அம்மா.

"அப்படியானால் விஷயத்தைச் சொல்லு. காரியம் ஜெயமா? அபஜெயமா?"

"காரியம் ஜெயமோ, அபஜெயமோ எனக்குத் தெரியாதம்மா. ஒன்று மட்டும் சொல்லுவேன். நல்ல வேளை நான் பெண்ணாய்ப் பிறந்தேனோ, அதற்காக கடவுளுக்கு என் மனமார்ந்த நன்றியைத்தெரிவிக்கவேண்டும்"

"பார். மறுபடியும் துவக்கிவிட்டாயே உன் குறும்புத்தனத்தை! நீ பெண்ணாய்ப் பிறந்ததற்கு என்னவாம்?"

"நானும் ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தால் இப்பொழுது குமார், சந்துரு அண்ணா போட்டியில் நானும் ஒருவனாகக் கலந்திருப்பேனல்லவா?"

"இது என்னடி புரியாதபேச்சு"

"எல்லாம் போகப் போக தன்னால் புரிந்துவிடும். அம்மா" என்று கூறிவிட்டு தோட்டப் பக்கம் ஓடிவிட்டாள்.



குமார்

அன்றைய டிபனுக்கு அம்மா குலோப் ஜான் செய்திருந்தாள். குலோப் ஜானைக் கண்டதும் எனக்கு மேலகரத்தில் மாமா வீடும், அந்த வீட்டை அலங்கரிக்கும் ஜோதியான மீனாவும், அவளது அன்பு ததும்பும் விழிகளும் என் நினைவில் தோன்றி மனதை மயங்கச் செய்தன. கலாசாலை விடு முறைக்குச் சென்றிருந்த அந்த நாட்கள், அந்த நாட்களில் நடந்த இன்ப நாடகங்கள் ஒவ்வொன்றும் என் இதயத்தில் தோன்றி என்னை வாட்டிப் பிழிகின்றன. அந்தப் பிரயாணம் நிச்சலனமாயிருந்த என் உள்ளத்தை இப்படி கலங்க வைக்கும் என்று தெரிந்திருந்தால் ஒரு வேளை அங்கு போகாமலே இருந்திருப்பேன். விதி என்னை அங்கு அழைத்துச் சென்றது. மனதின் பலஹீனத்திற்கு விதி என்ற பழியைச் சுமத்தி மனதைத் தேற்றிக் கொள்வதுதானே உலக இயல்பு.

எனக்கு குலோப்ஜான் பிடிக்கும் என்பதை எப்படியோ தெரிந்துகொண்டிருந்த மீனா, அடிக்கடி டிபனுக்கு அதைச் செய்யத் தவறமாட்டாள். சமையல்காரி செய்வதில் திருப்தி ஏற்படாமல் சகல வேலைகளையும் தானே செய்து தன் கைபடக் கொண்டு வந்து எங்களுக்கு அளிப்பாள். அந்த ருசி, 'இப்பொழுது அம்மா அருமையாய்ச் செய்து வைத்திருக்கும் இந்த குலோப்ஜானுக்கு வருமா? வரவே வராது. உள்ளத்தையே பறித்துக் கொண்ட அந்த ஓவியச் சிலை நஞ்சைக் கொடுத்திருந்தாலும் நான் அதை அமிர்தமென்றுதான் பருகியிருப்பேன். ஆனால் . . . .

ஆனால் நான் வரப்போகிற அன்று அவள், அளித்தவார்த்தை நஞ்சு என்னை அடியோடு கொன்றுவிட்டது. நடைப்பிணமாகத் திரிந்துகொண்டிருந்த எனக்கு இன்று இந்த குலோப் ஜானைக்காணவும் என்னையுமறியாமல் அந்த மாயசுந்தரியை நினைவு தோன்றியது. அவளை மறக்க முயன்று—கிட்டத்தட்ட மறந்துவரும் முயற்சியில் தன்னையும் மீறி சங்கல்பத்தை மறந்து அவள் எண்ணம் தலைவிரித்தாடுகிறது. என் மனதில் விழுந்த கறை என்னைவிட்டு மறைய மறுக்கிறது. மீனா என்னைப்பற்றி எவ்வித இழிவான எண்ணம் கொண்டிருப்பாளோ? இந்த ஒரே எண்ணம் சதா என் நெஞ்சை வாட்டிப் பிழிகிறது. மாசற்ற அவள் அன்பைத் தவறாக எண்ணியதற்கு எனக்கு இந்தத் தண்டனை போதாது. "என்னுடைய அன்பைத் தவறாக நினைப்பீர்கள் என்று தெரிந்தால் தங்களுடன் நெருங்கிப் பழகியிருக்கவே மாட்டேன்" இந்த ஒரே வார்த்தையில் என்னுடைய மதியீனத்தைச் சொல்லாமல் கொன்றுவிட்டாளே. அவள் கூறியதைப்போல் பழகிய ஒரு குற்றத்தினால் மட்டும், அவளது காதலை வேண்டி நிற்கவில்லையே நான். அவள் என்னுடைய 'முறைப் பெண்' என்கிற காரணமே அவளிடம் சகஜமாய்ப் பேசவோ, பழகவோ, கடைசியில் எனது ஆவலைத் தெரிவிக்கவோ

உரிமையாக எடுத்துக் கொண்டேன். ஆனால் அந்த உரிமை அவளது இஷ்டத்தையும் அனுசரித்து இருக்க வேண்டுமல்லவா? அந்த வகையில் சந்துரு பாக்கியவானாகிவிட்டான்.

என்ன என்னவோ எண்ணங்கள் எனது நினைவுக் கயிற்றில் பம்பரமாடின. மனதின் பலஹீனம் வெளியே தெரிந்துவிடாதபடி ஏதாவது பேசவேண்டுமே என்று சம்பாஷணையைத் துவக்கினேன்.

"அம்மா, மாமா வீட்டில் குலோப்ஜான் செய்திருந்தார்கள் அம்மா. மீனா தயார் பண்ணினாள். எப்படி இருந்தது என்கிறாய்."

"இருக்கும் அப்பா இருக்கும். மீனா தயார் பண்ணினாள் என்றால் அதற்குத் தனி ருசி ஏற்படத்தானே செய்யும்" என்று அம்மா ஏதோ குறும்பாகப் பேசினாள். அம்மா கிண்டல் பண்ணுவதை மற்றொரு சமயமாயிருந்தால் மனமகிழ்ந்து ஏற்றுக் கொண்டிருப்பேன். ஆனால் இப்பொழுது அந்தப் பரிகாசத்துக்குத் தகுதியற்ற நான்—அந்த பாக்கியத்தை இழந்துவிட்ட நான்—அதை எப்படி சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ள முடியும்?

"போம்மா உனக்கு எப்பொழுதும் பரிகாசம்தான்"—"நிஜத்தைச் சொன்னால்....."

"என்னம்மா ஒரே மீனாஸ்மரணையாக இருக்கிறதே" என்று கேட்டுக்கொண்டே சந்துரு அந்த இடத்தில் வந்து நின்றான்.

சந்துரு என்ற பெயருக்கு, 'சத்துரு' என்று என் மன அகராதியில் பொருள் பதிந்துவிட்டதால் அவன் வரவுக்கு அப்பால் அந்த இடத்திலிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. எழுந்து வெளியே புறப்பட்டேன்.

சந்துரு

என்னைக் கண்டால் ஏனம்மா இந்த குமார் அண்ணா அப்படி முறைத்துக்கொண்டே போகிறான்" என்று ஒன்றுமே தெரியாதவன்போல் அம்மாவிடம் கேட்டேன்.

"எனக்கென்ன தெரிகிறதப்பா. உங்கள் நாடகங்களெல்லாம், ஒன்றுமே புரியவில்லை. உங்கள் நடத்தை. அவனைக் கண்டால் நீ உர் என்று போகிறதும், உன்னைக் கண்டால் அவன்....."

"ஆமா, அண்ணா. குமார் அண்ணா மட்டும்தான் மீனா ஸ்மரணையாக அலைகிறான். நீங்கள் மீனாவைப்பற்றி ஒன்றுமே சொல்ல மாட்டீர்கள்? அவள் அழகையும், அவள் பாடுவதையும் மட்டும் வார்த்தை ஜாலங்களோடு வர்ணிப்பீர்களில்லையா?" என்று கேட்டுவிட்டுக் கடகடவெனச் சிரித்தாள்.

"அவள் பாடுவதையும்" என்று வேண்டுமென்றே அழுத்திச் சொன்னாள். "மரப் பாலத்தில்" வைத்து நடந்த சம்பவத்தை இன்னும் மறக்கவில்லை விமலி. எப்படி மறக்க முடியும்? எத்தனை ஜென்மமெடுத்தாலும் அந்த தேவகானம் செவிகளில் மதுரமாக ரீங்காரம் செய்து கொண்டிருக்குமே. அதைத்தான் மறக்க முடியுமா? அதையடுத்து எழுந்த மனப்புயலின் வேகத்திலெழுந்த சிறு போராட்டங்களையும் மறந்துவிட முடியுமா? இவைகளெல்லாம் எளிதில் மறந்துவிடக்கூடிய நிகழ்ச்சிகளா? வாழ்வின் அகராதியில் முக்கியக் குறிப்பாக பதித்துக் கொள்ள வேண்டிய சம்பவமல்லவா?

"உன்னுடைய அரட்டை எப்பொழுதான் உன்னைவிட்டுப் போகப்போகிறதோ விமலி?" என்றேன்.

"எப்படி அண்ணா போகும்? உங்களுடைய 'மீனா பைத்தியமே' எப்பொழுது உங்களை விட்டுப் போகிறதோ....."

"அந்தப் பைத்தியம் என்னை விட்டுப் போவதற்கு ஒரு வழி கண்டுபிடித்துவிட்டேன். விமலி, அதைத்தான் இப்பொழுது அம்மாவிடம் சொல்ல வந்தேன்...." என்று மெதுவாக என் மனதிலுள்ள விஷயத்தை அம்மாவுக்குத் தெரியப்படுத்தலாமென்கிற எண்ணத்துடன் பீடிகை போட்டேன்.

நாங்கள் பேசுவதன் மர்மம் ஒன்றும் புரியாமல் பிரமித்து நின்ற அம்மா "என்னப்பா ஒருவராவது விஷயத்தை விளக்கிச் சொல்லாமல் அவரவர்கள் போக்கில் பேசிக் கொண்டிருந்தால்..."

"அதைத்தான் அம்மா இப்பொழுது சொல்ல வந்தேன். அம்மா நான் கலியாணம் செய்து கொள்வதென்றால் மீனாவைத் தவிர....."

இதைக் கேட்ட மாத்திரத்தில் அம்மாவின் உள்ளத்தில் என்ன தோன்றியதோ, அரைக் கணத்தில் அவள் முக மண்டலத்தில் ஆயிரம் உணர்ச்சி வெடிப்புகள் ஓடி மறைந்தன.

"அம்மா அவள் ஒரு வாடாத மென் மலர். கை தேர்ந்த சிற்பியின் பரிபூரண வல்லமையும் பொருத்தி அமரத்வம் பெற்ற அழகுச் சிலை போல் இருக்கும் அவள் உருவம் என் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டது."

"அண்ணா இது நாடக மேடையல்ல என்பதைத் தங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்" என்று விமலி இடையே குறுக்கிட்டாள்.

"அம்மா, மீனா அழகில்மட்டுமல்ல, குடித்தனக் காரியங்களிலும், சமையல் விவகாரங்களிலும் அவளுக்கு நிகர் அவளேதான். சங்கீதத்திலோ கேட்கவே வேண்டாம். வேண்டுமானால் விமலியைக் கேட்டுப்பார்....."

"அண்ணா நீங்கள் சாக்ஷிக்கு அழைக்கு முன்னாலேயே அம்மாவிடம் எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாக ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். வேண்டுமானால் இப்பொழுது தங்களுக்காக மீண்டும் ஒருமுறை தங்கள் முன்பாகவே"

"உன்னுடைய பரிகாசம், அப்புறமிருக்கட்டும் விமலி. இப்பொழுது நான் சொல்ல வந்ததை அம்மாவிடம் தெரிவித்து விடுகிறேன்."

"நீ சொல்ல வந்ததை, சொல்லாமலே புரிந்துகொண்டேன் தம்பி. ஆனால்...."

"ஆனாலாவது கீனாலாவது. அதெல்லாம் இந்தச் சந்துருவிடம் ஒன்றும் நடக்காது. மணந்தால் மீனாவை மணப்பது. இல்லாவிட்டால் வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியாகவே கழித்துவிடுவதென்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டேன் அம்மா" என்று தீர்மானமாகக் கூறினேன்.

"மீனாவைவிட அழகான பெண்ணைப் பார்த்தால் இந்தப் பிரம்மசாரி, என்ன சொல்லுவாரோ?" என்றாள் விமலி.

"உன்னுடைய தீர்மானமெல்லாம் சரிதான். உனக்கு மூத்தவன் குமார் இருப்பதை அடியோடு மறந்துவிட்டாயே. அவனுடைய தீர்மானம் எப்படி இருக்கிறதோ...." என்றாள் அம்மா.

"அதையெல்லாம்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் பிடித்தால் ஒரே பிடிதான்....."

"அது என்னவோ அப்பா. இதெல்லாம் நாமாகத் தீர்மானித்துவிடுகிற காரியமா? யார் யார் என்னென்ன முடிவு கட்டுகிறார்களோ, முதலில் உன்னுடைய அப்பா அபிப்பிராயமென்னவோ? அப்பொழுது வாசலில், மோட்டார் வந்து நின்ற சப்தம் கேட்டது.

"அதோ அவங்களே வந்துவிட்டார்கள். அவர்களிடம் பேசிக் கொள் உன் விஷயத்தை" என்று கூறிவிட்டு அம்மா மெல்ல நழுவி விட்டாள்.

(தொடரும்)

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம் கறுப்பான காந்திமிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ, வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக் கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்சு புட்டி ரூ. 4.

(பாக்கிங் தபால் செலவு தனி.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க

ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம் - திருச்சி.

(ஸ்தாபிதம் 1936)

கேட்லாக் இலவசம்.

"லக்ஸ் டாய்லட் சோப்

என் சருமத்தை மிருதுவாகவும், மழமழப்பாகவும், தெளிவாகவும் இருக்கச்செய்கிறது"

என்கிறார் எம். வி. ராஜம்மா



சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 328-X30 TM

அன்னைக் குலம்

விந்தியா

இயற்கையாய் இதயத்தில் எழும் ஆசைகள் சில உண்டு — உண்மை. நமக்குத் தகுதியா, அவசியமா என்னும் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட அத்தகைய ஆசைகளை ஒடுக்கியடக்க வெளியார் உதவினால், பேதமையுள்ளத்திற்கு ஆறுதலும் உற்சாகமும் இருக்கும். ஆனால் வெளியார், அந்த ஆசைகளுக்கு உருவமளித்து, உயிரூட்டி வளர்க்கவே முன்வருகின்றனர்!

எனக்குக் குழந்தை இல்லை. ஆனால், என் கணவருக்கும் எனக்கும் மனதில் குறையில்லை. நான் பெண், பெண்ணாகப் பிறந்துவிட்டதனால், குழந்தை ஆசை சற்று உண்டு—ஆனால் குழந்தையில்லையே என்னும் கவலை லவலேசமும் கிடையாது. எங்களுக்கு இல்லாத கவலையும் குறையும், எங்களைச் சார்ந்தோரிடம் தோன்றி வளர்ந்தன! சுவீகாரம் கொள்ளும்படி எங்களை வற்புறுத்தி, அச்சுறுத்தத் தொடங்கின!

அக்கம்பக்கத்தவர்களும், நண்பர் உறவினரும், "சீக்கிரம் பிறக்கட்டும்!" என வாழ்த்தினர். நான் சிரித்தேன். என் அருமை மக்களே! நீங்கள் மெல்லப் பிறக்கலாம்! அவசரமேயில்லை! உங்களுக்கு முதலில் நல்வரவு கூற, நாங்கள் — உன் அப்பாவும் அம்மாவும் நிறையப் பொருளீட்ட அவகாசம் தாருங்கள்! நீங்கள் உயர்வுடன் வளர்ந்து வாழலாம்! அதிர்ஷ்டக் குழந்தைகளாகப் பிறந்து உங்களுடனே செல்வங் கொணருவதாகக் கூறுகிறீர்களோ? கட்டிச் சமர்த்துகள்தாம், நீங்கள்! செல்வக் குழந்தைகாள்! வேறு ஒரு விஷயம் இருக்கிறது! உங்கள் அன்னை திடனும் தெம்புமாக இருந்தாலன்றோ, நீங்களும் சிறப்புறலாம்! குறைந்துவிட்ட வலிவையும், மறைந்துவிடும் சுறுசுறுப்பையும், பலப்படுத்தாமல், உற்சாகத்தை வலிய வரச்செய்தவாறு நான் வளையவருகிறேன் இப்பொழுது. வீட்டில் சாமான்கள் வைத்தது வைத்தபடி ஒழுங்காகவும், அமைதியாகவும் இருக்கும் இந்நிலைமையிலே, நான் வேளைக்கு ருசிருசியாய்ச் சமைத்துப் படைக்கும்பொழுதே, நான் கணவ்ரின் பாராட்டு மொழிகளைக் கேட்க முடியவில்லையே? 'இதென்ன, வெட்கக்கேடு — குழந்தைகளை வெருவும் நான் எதற்கு பிறவாத குழந்தைகளுடன் பேசிக் கொஞ்ச வேண்டும்?' என யாரும் கேலிசெய்ய முடியாது— நான் குழந்தையை வெறுக்கவில்லையே? என் நிலைமையில் நான் அவற்றை வெருவினேன் — அவ்வளவே.

என் அன்னைகூட வெளியார் கோஷ்டியில் கலந்தாள்! என் மதனி தாயாகப் போகிறாளாம். அம்மா, என் விஷயத்தில் தான் படும் வேதனையைக் குறிப்பிட்டு எழுதினாள்.

மதனி உமாவுக்கு என் மகிழ்ச்சியை அறிவித்து வாழ்த்தினேன். உமா பதிலே போடவில்லை. அண்ணாவிற்கு எழுதிக் கேட்டதற்கு, அவன் எத்தகைய மறுமொழி அளித்தான்?

அண்ணா அன்னைக்குக் கூட எழுதியிருக்கமாட்டான் - தன் தங்கையான எனக்குத்தான் மனசுவிட்டு எழுதியிருப்பான்- என நினைக்கிறேன். "உனக்குப் பிறக்குமாயின் எத்தனை உவகையாயிருக்கும் தெரியுமா? கடவுளுக்கு ஏனோ இந்த வக்ர புத்தி! மனிதர்களுக்கும் புத்தி வக்ரமாகிறது! போன வருடம் கலியாணம் இந்த வருடம் குழந்தை என்று உன் அண்ணி மனம் புழுங்குகிறதைப் பார்க்கையில் வருங்காலம் இருள்கிறது எனக்கு. அவன் மீது விழவிருக்கிற பெரும் பொறுப்பினைத் தாங்க நான் தயார் -எனினும் அன்னையின் பராமரிப்பிற்கு ஈடாகுமா? குழந்தை பிறக்க நான்கைந்து மாதங்கள் கிடக்கும்பொழுதே அவள் அதைப் பகைக்கிறாள். என்ன தீவினைசெய்ததோ அந்த ஜீவன்! நம் அன்னை இதை அறிவாளாயின் மனங்கசிவாள்!"

இக்கடிதம் மன்னியின் பால் எனக்குச் சின மூட்டிற்று. அண்ணனைத் தேற்றும் விடைக்காக இடைவிடாது சிந்தனையை அடைகாத்தேன். நான் கண்ட பலன்!

சினம் உடைந்து பிளந்தது. அனுதாபம் பிறந்தது! எட்டு மாதங்களுக்கு முன்பு அண்ணா அண்ணி மணக்கோலங் கொண்டனர், உமா எனக்கு நான்காண்டுகள் இளையவள். அவள் 'தாய்மை'யை வெருவுகிறாள் என்றால் அது இப்பொழுது இயற்கைதான். வெருட்சி முற்றிவிடும் சமயங்களிலே வெறுப்புப் போல தென்படும்.

குழந்தை பிறப்பதை நானே வெருவுகிறேனாம் — உமாவைச் சொல்லிவிடலாமா? பொருளாதார நிலைமையும் வீட்டு வசதிகளும் இந்த ஊரிலுள்ளதைவிட அந்தப் பட்டணவாசத்தில் கீடகமாகவே யிருக்கும். நாங்களும் இரண்டே பேர் தான். வெளியில் போய் வர தடங்கல் கிடையாது. எப்பொழுதும் பிறரை வரவேற்கத் தயார் போல் துப்புரவாக வீடு விளங்க வேண்டும். எப்போதும் வெளியே கிளம்பத் தயார் போல் துல்லியமாக ஆடை துலங்க வேண்டும்- இது என் கொள்கை. இதற்குமேல் அழகாக எவள் குடித்தனம் நடக்கும்?

ஆனால் என் கணவர் வீட்டைவிட வீதியை அதிகம் நாடுகிறார். "வா, போவோம்!" எனக் கனிவுடன் என்னை அழைத்துச் செல்லமட்டும் முன்வருவதில்லை. என் முறையீட்டிற் கிணங்க அழைத்துச் செல்லும் சமயங்களிலே, நான் அவரிடம் எதிர்பார்க்கும் குதூகலம் புலப்படுவதில்லை! நான் விரும்பும் அற்பப் பொருள்களைக் கூடப் பெருஞ் செலவுகளாகக் காட்டுகிறது பொருளாதார நிலைமை. என்னை உடனழைத்துச் செல்வதையே அவர் ஒரு சுமை போல கருதினால்? . . . ." "அன்பை வெளியிட என்னால் முடியாது! மண வாழ்க்கைக்கு நான் லாயக்கற்றவன் போலும்!" என ஒரு நாள் அலுத்துக் கொண்டார்! கணவனாக இருப்பதற்கே அருகதையல்லவாமே! தந்தையாக இருப்பதானால்?

என் நிலைமையே இப்படி! உமா? கணவனை நன்குணரு முன்பே, அவனுக்கு முழு திருப்தியும் ஏற்படும் வகையில் சமையலும், குடித்தனப் பொறுப்பும் பழகு முன்பே, குழந்தையுடன் அல்லல்லாட நேரப் போவதை அச்சமின்றி எப்படி வரவேற்பாள்?

அண்ணா தன் மனைவியின் பால் மனங் கசந்துவிடாமலும், எனக்கு நாத்தி ஸ்தானத்தின் பொல்லாங்கு வராமலும், நல்ல பதில் எழுதிப் போட்டேன்.

உமாவின் உடல் நிலையை நான் எய்தாத பொழுதே, நான் அவளுடைய மன நிலையை அடைந்துவிட்டதை விளக்கி, கடவுளுக்கு இந்த சிருஷ்டியில் வக்ர புத்தியே இல்லை என்பதை ஸ்தாபித்தேன். குழந்தையைப் பேணுவதிலே உமாவுக்குஇருக்கக் கூடிய பொறுப்புக் குறைவை ஈடுகட்டும் மனப்பான்மை அண்ணாவிற்கு இருக்கிறது- கடவுள் மகவை அவர்களிடை தோற்றுவிக்கிறார்! எங்களுக்குப் பிறக்குமாயின் என் சக்திக் குறைவை நிறை செய்யும் மனப்போக்கு என் கணவருக்கு உண்டோ? வெகு நாள் மோனத்திற்குப் பின் அண்ணா, முற்றும் மாறிவிட்ட தொனியில், மனைவியின் உற்சாகத்தையும், அவள் வன மகோற்சவம் பொருட்டு பூந்தொட்டிகள் பயிர் செய்வதையும் சந்தோஷமாக உலவுவதையும் விளக்கி, என்னை வியப்பிலாழ்த்தினான்.

என்னுடைய வியப்பு, உமாவின் 'பூச்சூட்டல்' 'சீமந்தம்' சடங்குகளின் போது, அடங்கிற்று. அண்ணாவின் அன்பும், ஆதரவும் அவன் 'தாயார்' தான் என விளக்கும் பொழுது, உமா, 'தாயார்' ஆவதற்கு அஞ்சுவானேன்?

உரிய காலத்தில் மன்னிக்கு மகள் -எங்களுக்கு மருமகள்பிறந்தாள். மகிழ்ந்தோம். -மகவை வாழ்த்தினோம். எங்களுக்குப் பொறாமை கிடையாது. மகவில்லா மனக் குறை இருப்பினன்றோ பொறாமை எழும்? எங்களைப் பற்றி எங்களிடம் அங்கலாய்ப்பவர்கள், "நாட்டில் ஜனத்தொகை குறையணுமாம், நினைவிருக்கட்டும்!" என நாங்கள் எச்சரிப்பதை போலி வீரம் என நினைக்கலாம்! "எங்களுக்கு இல்லாத கவலை ஏனோ?" என நாங்கள் வினவுவதையும், "இந்த சம்சாரமே பெரும்பாரமாகிறது!" என நாங்கள் சொல்வதையும் 'தற்காப்பு' என மதிக்கலாம். ஆனால் அந்த ஏளனம், அவர்களுடைய தோல்வியின் குழந்தை!

வயதில் பெரியவர்கள் ஆசிகளாகப் பொழிந்தனர். -சிறியவர்கள்-அனுபவத்திலே என்னை மிஞ்சிவிட்ட பெருமிதத்துடன் வாழ்த்தினார்கள். அனுபவம் போதாத -சின்னவர்கள் ஆசைகளை வெளியிட்டார்கள். அவர்கள் தங்கள் இயற்படி, தங்கள் நோக்கிலே என்னை நிலைநிறுத்தினர். நான் அவர்களை குறை கூறுவது அழகல்ல. அறுபது வயதுப் பெரியவர்கள் ஓடிச்சாடி வளைய வருவதையும், என்னைவிட ஏழ்மை நிலையிலே வசதிக் குறைவுகளுடன் வீட்டில் மக்களுடன் குடித்தனம் நடத்தும் பெண்களின் தெம்பையும் நான் கண்டு மலைக்கிறேன். சிறிதும் கலையாத உறக்கத்தினால் எனக்கு எத்தனை தெளிவு இருக்கணுமே? ஊஹூம்- கிடையாது. தயிர் பால் வசதிகள் இருந்தும் எனக்கு சோர்வும் அசதியும் தான். இதையெல்லாம் பிறத்தியாரிடம் எத்தனை தடவைதான் சொல்லிக் கொள்ள இயலும்? என் மனம் அவர்களிடம் இருக்கும் சிறப்புக்களை பாராட்டுகையில் அவர்கள் மட்



டும் ஏன் என் உயர்வுகளைப் பார்ப்பதில்லை? இது ஒன்றுதான் என் ஏக்கம்.

அழுக்குப் பன்றி கூட ஒரு ஈற்றிலே பத்து குட்டி போடுகிறது. பன்றிக்கு உலகத்திலே ஏது உயர்வு? கனி தராத மரமும், பூவாத செடியும் வளர்ச்சி வீண் என்று மலடாக நிற்பதை யாரும் விரும்புவதில்லை. ஆனால் அவைகூட மழையின் உற்பத்திக்கு 'அணில் உதவி' புரியக்கூடும்! போகட்டும் மனிதன் ஆறறிவு படைத்தவன். பெண், பொன்தான்- எப்படியிருப்பினும் -வீண் அல்ல. நான் மற்ற எத்தனையோ அம்சங்களிலே பிறரை மிஞ்சுகிறேனே 'குழந்தையில்லாததால் நீ என்ன தாழ்ந்து போனாய்?" என்று என்னை மனமாரப் பார்ப்பவர் ஏன் இல்லை?

அதோ அருநெல்லிமரம்! அதிலே நாலுகொத்துக் கனிகள்- மரம் முழுவதும் அடர்ந்து பசுமையான இலைக் கூட்டம். ஆனால் முதலில் கண்களை இழுத்துப் பிணைப்பவை அந்தக் கனிகள் தாம்! மரத்திற்கு விளம்பரம் கனி! பெண்ணின் பெண்மைக்கு விளம்பரம் குழந்தை.

வேற்றூருக்கு மாற்றலாகிப் போகும் வழியிலே எங்கள் நாத்தனார் குடும்பம் எங்கள் ஊரில் ஒரு வாரம் தங்குகிறதாக கடிதம் வந்த பொழுது எனக்கு ஒரே மலைப்புத்தான், நாத்தனாரின் அட்டகாச அதிகாரங்களுக்கும் ஆணவமான பேச்சுக்கும் சில வருஷங்களுக்கு முன்பு இலக்காகியிருந்த நான், பீதியடையாமல் மகிழ முடியுமா? மலைத்து மாய்ந்து போனேன். ஆனால் அவர்கள் வந்த பின்னர்.

நாத்தனாருக்கு இரண்டு குழந்தைகள் -அவற்றைப் பெற்றவர் நாத்தனார்- வயிற்றிலும் ஒரு மகவு இருக்கிறது அவருக்கு- இதையெல்லாம் கண்டு என் மலைப்பு நழுவி விட்டது. என் சோர்வு கஷ்டம் எல்லாம் மூட்டை கட்டி மறைத்து ஒதுக்கி விட்டு விருந்தாளிகளை கவனித்தேன். மின்சார விசிறி போலச் சுழன்றேன். பிற்பகல் தூக்கமில்லை. வேலையும் மிகுதி- எனினும் வெற்றிகரமாகச் சமாளித்தேன். போகும் பொழுது நாத்தனார் "உனக்குச் சீக்கிரம் பிறக்க வேண்டும். எனக்கு இந்த விசை நீ வந்து நடத்திக் கொடுத்துவிட்டுப்போ -அம்மாவிற்குப் பதிலாக கட்டாயம் உனக்கும் பலன் ஏற்பட்டு விடும்!" என்று ஆசை காட்டுவது போல ஆசி கூறினார் சற்று துணுக்குற்ற நான், "அத்தகைய பலன் ஏற்படுமானால், நான் உதவிக்கு வரவே பயப்படுகிறேன். அக்கா!" என்று சொல்லிவிட்டேன்!

புனிதமான பணிதான்-மகப்பேறு சமயம் உதவி செய்வது விசேஷம் தான்! -என்னால் அது சாத்தியமா? இந்த ஒரு வாரம் நான் கடைபிடித்த பொறுமை போதும்! இந்த ஒரு வாரமும் உழைத்ததற்கு இளைப்பாற நான் பம்பாய் அன்றோ போக வேண்டும்? அண்ணாவின் வீட்டில், உமாவின் உபசரணைகளாலே தெம்புற வேண்டும்?

கணவரிடம் இதைத் தமாஷாய்ச் சொன்னேன். அதற்கு அவர், 'அண்ணா மதனி, அப்பா அம்மாவிற்குச் சமம் என்பார்களே- உனக்கு இரண்டு இடங்களும் இருக்கின்றன- பிறந்தகம் சீராடிவிட்டு வரலாமே!' என்றார். ஒருக்கால் கோபமாகக் கூறுகிறாரோ என ஐயுற்ற நான், "போய்வர கொள்ளைச் செலவு ஆகிவிடும்- அதற்கு- சமையல் ஆள் போட்டுக் கொண்டு இங்கேயே ஒரு மாதம் சீராடிவிடுகிறேன்!" என்று சொல்லிவைத்தேன். வேடிக்கைக்குச் சொல்வதாகத்தான் என் நினைப்பு! ஆனால், அவர் அப்படி நினைக்கவில்லை! "கார் சவாரி, ஊட்டி வாசம், ஆள் அம்பு எல்லாத்துக்கும் தாக்குப் பிடிக்க உனக்கு ஒரு லட்சாதிபதி வாய்க்காமற் போனான்! ஹூம், இரண்டு பொருத்தமில்லா காளைகளை வண்டியிலே பூட்டியாச்சு, வண்டி போய்த்தானாகணும்!" என்று பதிலளித்தார்.! காளைகள்.. என்ன வார்த்தை. பிறர் நாவுகளிலே இது நாள் வரை நெளிந்தது. பெண் குலத்திற்குச் சிறப்புப் பட்டம் அன்னைக் குலம். அந்தச் சிறப்பிற்கு- நான் உரியவளாகவில்லை. அருகதையும் அல்லள்-என்பதை என் கணவரே சுட்டிக் காட்டவும் கூடுமா?

அதோ தொட்டியிலே நான் நட்டிருந்த துளசி! இரண்டு கொத்து நட்டேன். இரண்டும் ஓங்கி வளர்ந்துவிட்டன- ஆனால், அத்தனை உயரம் வளர்ந்தும், அழகு இல்லை, பசுமை இல்லை. எங்களையே குறிக்கிறது போலும் நான் நட்ட செடி!

தொட்டி மத்தியிலே, தொட்டியின் மண் தெரியும்படியாக இரண்டும் நெடித்து வளர்ந்து, தாராளமாய்ப் பிரிந்து இடதும் வலதுமாகச் சரிகின்றன. அவற்றை நெருக்கி வைத்து அழகு செய்யும் வகையில் பசுமை சூழவில்லை. இந்த அழகற்ற உயரம் இன்றி, குஞ்சம் போல, சிறு புதர் போன்று, தொட்டி முழுவதையும் நிறைத்துக் கொண்டு வளர்ந்திருக்க வேண்டும். ஆனால், நான் நட்ட செடி அப்படிவளரவில்லை! "துளசிக்குக் கோலமிட்டுக் குங்குமமிட்டு விளக்கேற்றி கும்பிடடி அம்மா, வீண் போகாது!" என்னும் புத்திமதியை என்னுடைய பதினைந்தாம்வயதிலே,

ஆனந்த
குஸுமாகர லேகியம்
(REGD.)
தேக புஷ்டி, நரம்பு சக்தி, இரத்த விருத்திக்கு நிகரற்ற ஓர் கல்பகம்.
உபயோகித்தால் தேகாரோக்கியத்துடன் வாழலாம்
இழந்த சக்தியை அடையலாம்
விலை ரூ 2—8—0
விவரமான காட்லாக் இலவசம்
மலையாள
மெடிகல் ஹால்
REGD.)
189 வக்கீல் புது தெரு.
Post Box 27. மதுரை

எனக்கு மணாளன் கிடைக்கும் பொருட்டு ஒரு பாட்டி சொன்னார்! இன்று வேறொரு மூதாட்டி எனக்கு மகவு பிறப்பதற்காக ஓதுகிறார். வரட்டு மிளகாய்ப் பொடியின் நெடி நம்மை விரட்டுகிறது. ஆனால், அந்தப் பொடியினூடே சின்னஞ்சிறிய புழுக்கள் உற்பத்தியாகி வாழும் விந்தை! "சமாளிப்பாயா?" என பீதி வெருட்டுகிறது! ஆனால், ஆசை தழைக்கிறதே!

என் கணவர் மட்டும் என் அண்ணாவைப் போல கனிவில் தோய்ந்த அன்பினைச் செலுத்துபவராக இருப்பாராகில், நான் இந்தப் பாழும் மலைப்புக்கு இலக்காவேனா?

மன்னி உமா, கொள்ளை கொள்ளையாய் கம்பளிச் சட்டைகள் பின்னுகிறாளாம்- குழந்தைகளுக்குப் பல விதமாகப் பின்னி அணிவிக்கிறாளாம். அது மட்டுமா? "நாத்தனார் ஆகிய உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் போடலாம் என்று ஆசை- தற்சமயம், என் நாத்தனாருடைய நாத்தனாருக்கு இருக்கும் இரண்டு குழந்தைகளுக்கு இந்த இரண்டும் அனுப்பியிருக்கிறேன்!" என்று இரண்டு கம்பளிச் சட்டைகளை அனுப்பினாள் உமா! அண்ணா, தன் மனைவி மக்களைத் தாங்கும் தாங்கல், உமாவிற்குப் பெருமையளிப்பதாய் இருக்கிறது!

உமா பல பக்ஷண வகைகளும் அனுப்பினாள். எப்படி கற்றாளாம் அவற்றை? "யார் வீட்டில் எது செய்தாலும் நான் அதை உடனே செய்தாகணும்! இந்த வாண்டுப் பெண் உத்தரவு! கோலி அப்புச்சி, வெள்ளை மிட்டாய் என்று அடையாளம் எல்லாம் சொல்வாள்! அடிக்கடி செய்து பழக்கமாகிவிட்டது!" என்று பெருமிதமுடன் எழுதுகிறாள்! "தீபாவளிக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று யாராவது கேட்டால் நான் கசந்து கொள்வதையும், "ஏதோ செய்து தீபாவளியை முடித்தோம் என்று இருக்கவொட்டாமல் செய்யும் கேள்வியல்லவா இது?" என நான் அருவருப்பதையும் நானே எண்ணிக் கூசினேன்!

உமா அனுப்பிய கம்பளிச் சட்டைகளையும் பக்ஷணங்களிலே ஒரு பகுதியையும் நான் நேரில் போய்க் கொடுக்க திட்டமிட்டேன். "லைன்மேன்" மூலம் அனுப்பிவிடும் யோசனை மறுத்தேன். "எனக்கு எங்கேயாவது போய் வரணுமென்றிருக்கு!" என்று வற்புறுத்தி, இருவருமாகக் கிளம்பினோம். போய்ச் சேர்ந்ததும் அலுப்புப் பாராமல் விருந்தாளி என்னும் ஹோதாவில் நிற்காமல், அந்த இல்லத்திலே உறவாடினேன். மருமகன் என்னிடம் அண்டாமல் கணவரைக் கட்டி வளைப்பான். அப்பொழுது என்னைப் பார்த்து அவர் முறுவலித்தார்! சிலசமயம் கிறுக்கு செய்து அவரை அணுகாமல் என்னை அணைப்பான் பயல் அப்பொழுதும் அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்!

மீன் தன் கண்ணோக்கினாலேயே குஞ்சுகளைப் பொரிக்குமாம்! அன்னை மீனாட்சியின் அருள் நோக்கு, மக்களை உய்விக்கும் கண்ணோக்கு, என் கணவரின் பார்வையில் குடிபுகுந்துளதோ?

"குளிப்பாட்டிக் கொடுத்துவிடு நான் சட்டைப் போடுகிறேன்!" என்று மருமகனின் உடுப்பும் கையுமாய் பத்து நிமிஷம் காத்து நிற்கும் ஆர்வம் என் கணவரிடம் தென்பட்டது அதைவிட அதிசயம்! "பலே ஜோர்!" என அரைத்துச் செய்யாத உண்டி பாராட்டுப் பெற்றது! "நீ பெஞ்சியிலிருந்து உருட்டிவிடப் போகிறாயே அவளை" என்று நானும் அடிக்கடி எழுந்து கவனித்தேன். நீ என்னடா என்றால், குழந்தை இந்தண்டை அந்தண்டை அசைந்தாலே விழித்துக்கொண்டிருந்தாய்! அடித்துப்போட்டாற்போல தூங்குவாயே நீ! எப்படி விழிப்புக் கொடுத்தது உனக்கு?" என்று வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட அவர் கேட்டபொழுது, நான் இது நாள் உணராத உண்மையை உணர்ந்தேன். மந்த புத்தியின் உறக்கம் தெளிந்துவிட்டது. சோர்வற்ற விழிப்புப் பெற்றுவிட்டேன். சுயநலப் போர்வை சுருண்டது.

புனிதமானபணியைஎங்களகத்திலேயே நடத்த என் கணவரின் தங்கையையும் மக்களையும் உடனழைத்துச் செல்ல முடிவு செய்துவிட்டேன். அன்னைக்கு மேலாக என்னைக் கருதி, அன்று உதவிக்கு அழைத்த நாத்தனார் எனக்கு எத்தகைய உயர்வு வைத்திருந்தார்? அதை நிறைவேற்றுவது என் மகிழ்ச்சி மிகுந்த கடமை.

பயன்தரும் பசுவாக நான் விளங்காவிடினும், காளைபோல் விளங்கவும் விரும்பவில்லை. அன்னைக் குலத்திற்குரிய உணர்ச்சிகளின் உயர்வு இருந்தாலே போதும் என்று ஆசைப் படுகிறேன்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)
Phone: 85254.
குழந்தைகளின் சுரம், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.
கும்பகோணம் கிளை:— 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி
திருச்சி கிளை:— 15, புதிய பிள்ளை தெரு. தெப்பக்குளம் போஸ்ட்

அவன் சொத்து

★

பி. வி. ஆர்.

அந்தி மயங்கிவிட்டது. மத்தியான்னவேளைகளிலேயேவெளிச்சம் வராத அறையின் நடுவே, மக்கள் புடைசூழ அவர் படுத்திருந்தார். தலைமாட்டில் எப்பொழுதோ—ஏதோ ஒரு கார்த்திகையின் போது—வாங்கியிருந்த விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

இதற்கு முன்னால் எல்லாரும் தந்தையுடன் இம்மாதிரி கூடியிருந்ததில்லை. கடைசிப் பிள்ளையுடன் தான் அந்திய நாட்களைக் கழித்திருக்கிறார். இப்போது மூன்று பெண்களும் குழந்தை குட்டிகளை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவர் ஏறிட்டுப் பார்த்தார் ஒரு முறை. விழிகளே பிதுங்கிக் கொண்டு வந்துவிடும் போலிருந்தது.

பேச முயன்றார். நாக்கின் நுனி பல்லியின் வாலைப் போலத் துடித்ததே யொழிய ஒலி லேசில் புரளவில்லை. அவருக்குத் தெரியும் தம்மால் பேச முடியாது என்று. இருந்தாலும் முயற்சியை விட அவர் விரும்பவில்லை. பல நாட்களாகப் பல விஷயங்களைப் பேசித் தீர்க்க வேண்டுமென்று தான். என்னென்னவோ சொல்லணும்—இதைப் பெண்ணிடம்—அதைப் பிள்ளையிடம்—என்றெல்லாம் ஆசைதான். ஆனால் முடியவில்லை. இதுவரையில் அவர் முயன்றிருக்கிறார். ஆயிரமாயிரம் முறைகள் முயன்று தோல்வியைக்கண்டிருக்கிறார். இப்போதும் தோல்வியின் சுவடுதான். தம்மையேக்கூர்ந்து பார்த்த மக்களை—தாம் பெற்ற குழந்தைகளை.—அவர்களின் குழந்தைகளை அவர் கூர்ந்து பார்த்தார்.

மீண்டும் பேச முயற்சி: மீண்டும் தோல்வி.

திடீரென்று அவர் கண்கள் மிரள மிரள விழித்த பிறகு மூடிக் கொண்டன, கைகள் மார்பைப் பிடித்து அமுக்கின.

"அப்பா!...."

"ஐயோ! அப்பா...."

"ஐயோ! அப்பா.....அப்பா.....!"

"ஐயய்யோ, அப்பா.....அப்பா..... போறியே!!"

அவர் பெற்ற நான்கும், அவர் 'போய்க் கொண்டிருக்கையில்' அலறித் தீர்த்தன.

*　*　*

இருபது வயதுப் பிள்ளை—கடைக்குட்டி என்று ஒரு காலத்தில் செல்லமாகக் கொஞ்சப்பட்டவன்—எல்லாவற்றையும் முனகிக் கொண்டு செய்தான்.

மூன்றாம் நாள் எல்லோரும் போய் விடுவார்கள் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். சூழ்நிலையின் தன்மையை உணர்ந்து அதற்குத்தக்கவாறு, தனது தமக்கைகள் நடந்து கொள்வார்கள் என்று அவன் நினைத்தான். ஆனால் அவர்கள் உடனேயே கிளம்பவில்லை.

"சங்கரா.....உன் கிட்டே இருக்கோ இல்லியோ......ஒண்ணையும் விடாம செய்.....!கர்மாதிகளையெல்லாம் சரியாகச் செய்......அப்போத்தான் அப்பாவுக்கும் போன இடத்தில்......" என்று தொடங்கினாள் மீனு. அவள் மூத்தவள்.

"....இருக்கும்போது ஆயிரம் லெட்டர் போட்டும், அப்பாவை ஏறிட்டும் பார்க்காதவள் அப்பா போன பிறகு அவருடைய சொர்க்க வாழ்க்கையைப் பற்றி பெரிசாப் பேசறா!" என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியே போனான் சங்கரன்.

அப்பா உயிரோடு இருக்கும் போது வேலை பார்த்து வந்த செட்டியார் கடையில் பத்து நாட்களுக்கு வேண்டிய சாமான்களை கடனுக்கு வாங்கிக் கொண்டான்.

"செட்டியார். அப்பா காலமானது....."

"தெரியும் தம்பி....என்ன செய்யறது....நல்லவர்களுக்கே காலம் கெடையாது!"

"பழைய பாக்கியையும்இப்போ வாங்கினத்துக்கும் சேத்தி இன்னும் பதினைந்து நாளிலே தந்துடறேன்...."

"அதுக்கென்ன தம்பி....எவ்வளவு வேணும்னாச்சியும் வாங்கிக்க....உன் அப்பாவை நினைச்சுப் பார்க்கறபோது....உம்...என்ன செய்யறது...எல்லாம் காலம்...."

வாங்கின சாமான்களைத் தோள்மேல் சுமந்து கொண்டு வீட்டை அடையும் போது, வீட்டுக்காரர் வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"என்ன, தம்பி.....இப்படி ஆயிடும்னு.."

"என்னங்க செய்யறது.......எல்லாம் கொடுத்து வைச்சது அவ்வளவு தான்......."

"தங்கமானமனுஷர்போயிட்டார எல்லாருக்கும் துக்கம்தானே......இன்னிக்கு காலையிலேதான் தெரிஞ்சுது....உடனே ஓடியாந்தேன் விசாரிக்க...."

"உங்களுக்கு வாடகை பாக்கியையெல்லாம் சேர்த்தி......"

"அதைப் பத்தி இப்போ ஏன் பேசறே.....மத்த காரியங்களைக் கவனி......ஏதாவது தேவையாக இருந்ததுன்னா சொல்லி அனுப்பு......"

முதலியார் போன பிறகு, சாமான்களை நடுக்கூடத்தில் பரப்பி வைத்தான்.

ஏண்டா சங்கரா, அப்பா எப்பவோ ஒரு 'பாலிஸி' எடுத்திருந்தாரே இல்லியா... அது தான் நான் தலைச்சன் பொறறுத்துக்கு வந்த சமயத்தில்.." என்று கேட்டாள் மூத்த பெண் மீனு.

"ஆமாம், பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி தான்.. எனக்கு இன்னியாட்டமா இருக்கு.. அப்பா முதல் 'பிரீமியத்தைக் கட்டினார்.." என்றாள் இரண்டாம் தமக்கை வேதம்.

"ஆமாம் அது என்னாச்சு, யார் பேரிலே இருக்கு"? என்று மூன்றாம் தமக்கை குஞ்சு.

"பாலிஸி என்பேரிலே தான் இருக்கு. இரண்டாயிரம் ரூபா பாலிஸி... ஆனா நாலு வருஷமே பணம் கட்டலே..." என்றான் சங்கரன்.

"எப்படியிருந்தாலும் ஏதாவது கொடுப்பார்களோ இல்லியோ?" என்று மீனு கேட்டாள்.

"சுமார் ஆயிரத்து நானூறோ, ஆயிரத்தி ஐந்நூறோ கிடைக்கும்னு தோணறது.."

"இன்னிக்கே, பாலிஸியை கம்பெனிக்கு அனுப்பி பணத்தைக் கேளேன்..."

"அனுப்பலாம்.. தபால் சார்ஜே ஒரு ரூபாய்க்கு மேலே ஆகும் போலேயிருக்கு.. ரிஜிஸ்டர்லே அனுப்பணும்...நாளைக்கு யார் கிட்டே யாவது கடன் வாங்கித் தான்.."

"ஒரு ரூபாய் தானே.. நாளை வரையிலும் நிற்பானேன்...நான் தரேன்..." மீனு உடனே போய் தன் பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

சங்கரனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. முந்தின நாள் அவசரமாக ஒரு ரூபாய் வேண்டுமென்று மீனுவிடம் கேட்டதற்கு, 'இல்லை' என்று திட்டமான பதில் வந்தது. இன்று அவளாகவே ஒரு ரூபாய் தருகிறாள்.'

வந்த கோபத்திற்கு வார்த்தைகளால் நைவேத்தியம் செய்யாமல் பாலிஸியையும் எடுத்துக் கொண்டு அவன் தபாலாபீஸிற்குச் சென்றான்.

நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு வாசல்திண்ணையில் சங்கரன் படுத்துக் கொண்டிருந்தான். அன்று இன்ஷியூரன்ஸ் கம்பெனியிலிருந்து கடிதம் வந்திருந்தது.

"கூடிய சீக்கிரத்தில் பணத்தை அனுப்புகிறோம் என்று எழுதியிருக்கிறானே.. இன்னும் எத்தனை நாள் ஆகுமோ..... தெரியல்லையே.. நாம் நெனைச்சபடி ஆயிரத்தி நானூறுக்குக் கொஞ்சம் மேலே தான் வறது... நல்ல வேளை அப்பா 'அதில்' கடன் வாங்காமல் போனார்,.... படிப்பையோ, வீட்டையோ வைக்காததற்கு இதையாவது வைச்சுட்டுப் போனாரே.. அது வரையில் நல்லது. தான்... ஏதாவது கடை கண்ணி வைச்சுப் பொழைக்கலாம்..."

'ஆமாம்' என்று சொல்லுவது போல் சுவற்றில் ஒரு பல்லி சொல்லிற்று'

"அப்பா சொத்தே ஒண்ணும் வைக்காம போயிருந்தா?...... எவன் கிட்டேயாவது வேலைக்குப் போயிருக்கணும்.. செட்டியாரே எடுத்துக் கொள்வான்.... ஆனா என்னாலே அங்கே என்ன செய்ய முடியும்?'.. அப்பாவை மாதிரி கணக்கு எழுத முடியாது.... சாமான்களைக் கட்ட வேண்டியிருக்கும்.... அங்கே இங்கே போய் கடனை வசூல் செய்ய வேண்டியிருக்கும்?..... ஆனால், அதற்கெல்லாம் இப்போ இடமில்லாமல் செய்துவிட்டது இந்த இன்ஷியூரன்ஸ் பாலிஸி ....

படுக்கையில் ஒரு புறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்ட போது, அவனுக்கு முதலியாரின் ஞாபகமும், செட்டியாரின் ஞாபகமும் வந்தன.

"பாவம், ரெண்டு பேரும் எவ்வளவு நல்லவர்கள்!.. 'அப்பா' ன்னால் என்ன மதிப்பு.. தயாளம்' கடனைப் பத்தியோ,பாக்கியைப் பத்தியோ வாயே திறப்பதில்லை... அதுவும் சின்னத் தொகையா?... முதலியாருக்கு ஒன்பது மாதம் பாக்கி.. கிட்டத்தட்ட இரு நூறு! .. செட்டியாருக்கு நூத்தைம்பதுக்கு மேலே அப்போதே ஆகியிருந்தது...! அவர்களுக்கு முதலிலே கொடுக்கணும்.. பாவம்!"

மேலும் ஐந்தாறு நாட்கள் சென்றன. அப்பா இறந்து போய் பதி மூன்று நாட்கள்— சங்கரனைப் பொறுத்த மட்டில் பதி மூன்று யுகங்கள்— சென்றுவிட்டன. பெற்ற பிதாவுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம், சக்திக்கு தகுந்தபடி அவன் செய்தாகிவிட்டது.

வீட்டில் இன்னும் எல்லோரும் இருந்தார்கள். நாதிகள், பெண்களுடைய புருஷர்கள், இன்னும் 'போகாமல் இருக்கக் கூடாதே' என்று சமூகத்தின் திருப்தியை நாடி வந்த சொந்தக்காரர்கள் எல்லோரும் வந்து போய்விட்டார்கள்... ஆனால், பெண்கள் நகரும் வழியாக இல்லை.

சங்கரனுக்கு, "எப்போது நீங்கள் புறப்படப் போகிறீர்கள்?" என்று எப்போதாவது— கோபமும், வெறுப்பும் குமிழிகள் போலக் கிளம்பும் போது— கேட்கத் தோன்றினாலும், அவன் வாயைத் திறக்கவில்லை.

பதிநான்காம் நாள் காலையில் சாப்பிட்டுவிட்டு அவன் வெளியே போனான். போனவன் திடீரென்று திரும்ப வேண்டியதாயிற்று ஏதோ காரணத்தால்.

ரேழியில் காலை வைக்கும் போது உள்ளே தமக்கைகளுக்குள் நடக்கும் சம்பாஷணை அவன் காதில் கேட்டது. ரேழிக் கதவு சாத்தியிருந்ததால் அங்கேயே இருந்து கொண்டு காது கொடுக்கலானான்.

"ஏன், அக்கா அத்திம்பேர் மட்டும் பொறப்பட்டுப் போனாரே.... நீ கூடப் போகல்லியா?" என்று குஞ்சு கேட்டாள்.

"இப்போதே போவானேன்...? பாவம் சங்கரனுக்கு இன்னமே யார் இருக்கா...?"

"நீ தான் அக்கா அவனை 'அம்மா' மாதிரிப் பார்த்துக்கணும்..." என்றாள் வேதம்.

"ஆமாம்" என்று குஞ்சுவும் தலை அசைத்துவிட்டு, "எப்பத் தான் பொறப்படலாம்னு இருக்கே?" என்று கேட்டாள்.

"நீங்க ரெண்டு பேரும்?"

குஞ்சுவும் வேதமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மீனுவே கடைசியில் கூறினாள், அர்த்தமில்லாமல் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு: "இன்ஷியூரன்ஸ் பணம்

வந்த பிறகு புறப்படலாம்னு இருக்கேன். . . உங்களுக்கு அது தானே மனசில்? . . ."

ஒருவரும் வாயைத் திறக்கவில்லை. சங்கரனிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் மத்தியானம் சங்கரன் வீட்டிற்கு வந்தபோது மீனு, "சங்கரா . . . . உனக்கு கம்பெனியிலிருந்து ரிஜிஸ்டர் தபால் ஒன்று வந்திருக்கு . . . இப்பத்தான் அவன் தெருக்கோடியிலே போயிண்டிருக்கான்" என்றாள்.

"இன்னமே என்னாலே வெளியே போகமுடியாது .... நாளைக்கு வாங்கிண்டாப் போறது . . ."

"கம்பெனியிலிருந்து என்ன வந்திருக்கோ .... உடனேபோய்ப் பாரேன் .... இன்னிக்கே பார்த்துடேன்.

"அதை நாளைக்குத்தான்பார்க்கிறேனே...." என்று கூறிவிட்டு, சங்கரன் பதிலுக்கும் காத்திராமல் திண்ணைக்குப்போய்விட்டான் படுத்துக்கொள்ள. மீனுவின் முணு முணுப்பு அவன் காதில் விழாமலா போய்விடும்?

மறுநாள் சாயங்காலமே சங்கரன் 'செக்கை' மாற்றினான். பதினாலு நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரு பத்து ரூபாய்நோட்டும் அவனது மடியில் இருந்தன.

வீட்டுக்குள் நுழைந்ததும், மீனு, "என்ன சங்கரா, சொல்லாம கொள்ளாம போயிட்டே....காப்பி போட்டு வைச்சிருந்தேன்....சொல்லாம கிளம்பிவிட்டயே....இந்தா இதைக்குடி, வேறே கலந்தேன்....", என்று காப்பியைக் கொண்டு தம்பியின் முன் வைத்தாள்.

பிறகு, அவள் தொடங்கினாள். "சங்கரா, உனக்கு நினைவு இருக்கோ இல்லியோ....நான்பாப்பாவை பொறறுத்துக்கு வந்தபோது... அதுதான் அம்மா சாகற . சமயத்திலே, அப்பா என்னோடு இரண்டு தங்கக் காப்பையும் கொலுசையும், மூக்குத்தியும் வைச்சு மூந்நூறு ரூபாய் பணம் வாங்கியிருந்தா....அதைப்பிறகு மீட்கவேயில்லை....காப்பு நாலு பவுன்... கொலுசு பத்து ரூபா எடை....மூக்குத்தி ஒரு கல்லுவைரம்...?"

"இப்போ என்ன வேணும் அக்கா....?"

"இல்லேடா, அதை அப்பா அப்புறம் எடுத்துக் கொடுக்கவேயில்லை......கடைசியிலே வித்துப் போச்சு......'மீனு, தரேன் தரேன்'ன்னு சொல்லிண்டிருந்தார்......அதனாலேதான் கடைசியிலே கொஞ்சம் மனஸ்தாபம்கூட வந்தது...... உனக்குக்கூட அது தெரியுமே......"

"அந்தக் காலத்திலே பவுன் விலை இருபத்தைந்தோ, முப்பதோ தானே?......அப்பா எப்படி உன்பண்டத்தைவைச்சு மூந்நூறு ரூபாய் வாங்கியிருக்க முடியும்?" என்று கேட்க சங்கரனுக்கு நாத் துடித்தது.

"ஓகோ!" என்று மட்டும் அவன் நிறுத்திக் கொண்டான்.

" மொத்தமாக, வள்ளிசா நானூறு ரூபாய் தரேன்னுதான் அப்பா சொல்லிண்டிருந்தார்......", என்று மீனு சொல்லிவைத்தாள்.

வேதம், "சங்கரா......அப்பா என்னைக் கொடுத்த லட்சணம்தான் உனக்குத் தெரியுமே?......உன் ஆம்படையான் ஓட்டல்காரன் தானேடி......பாத்திரமா இல்லாம இருக்கப் போறது......? இரு நூறு ரூபாய்க்கு பாத்திரம் செஞ்சு போடறேன்னு வாக்கு கொடுத்திருக்கேன். . . செய்யறேனே, என்ன அவசரம்?' என்றுதான் கடைசி வரைக்கும் சொன்னா...... அந்த இருநூறை அன்னிக்கே தந்திருந்தா அது இப்போ மூன்னூறு ஆகியிருக்கும்......'அவர்' வேறே அதைப்பற்றி அடிக்கடி பேச்செடுக்கிறார்......" என்று கூறி முடித்தாள்.

"குஞ்சு......நீ மட்டும் என்ன பேசாம இருக்கே......உனக்கு ஒண்ணும் அப்பா பாக்கிவைக்கல்லியா போறபோது......?" என்றுசங்கரன் கேட்டான். கேட்கையில் ஏனோ அவனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

குஞ்சு பேசவில்லை.

பதினாலு நூறு ரூபாய் நோட்டுக்களையும், ஒரு பத்து ரூபாய் நோட்டையும் மடியிலே கட்டி கொண்டு அவன் எழுந்திருந்தான் மீனு சூடாக வைத்திருந்தகாப்பி இப்போது ஆறி அவலமாக இருந்தது.

மீனுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும்!

முதலில் முதலியாரிடம்....... பிறகு செட்டியாரிடம்.......அதற்குப்பிறகு சில்லறை இடங்கள்....... பிறகுக் கடை.......பத்து நாள் முன்பு வைதிகர்களுக்கு என்று வாங்கச் சென்ற துணிக்கடை....... ஒரு மார்வாரியின் லேவாதேவிக் கடை.......அவனிடமிருந்து வாங்கித்தான் அப்பாவுக்குக் கடைசி காலத்தில் எல்லாம் செய்திருந்தான்.

திரும்பிவீட்டுக்குவரும்போது ஒன்பது நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரு பத்து ரூபாய் நோட்டும்.

அவன் துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு கைகால்களைக் கழுவிவிட்டு, சாப்பிட உட்காருவதற்குள் மீனு ஒரு அத்தியாயம் படித்தாகிவிட்டது.

"......பாவம் அப்பாவுக்கு என் விஷயத்தில் ஒரே ஏக்கம்தான்....... 'பெற்ற பெண்ணின் நகைகளை வாங்கிச் செலவு செய்துவிட்டோமே யென்று'.......திருப்பிக் கொடுக்காமல் செத்தபோது பாவம். அவர் மனசில் என்ன தோணித்தோ...... 'உனக்குத்தான் மீனு. நான் சரியாச்செய்யல்லே... போராததற்கு உன் நகையையும் வேறு வாங்கியிருக்கேன்......' என்று அடிக்கடி அங்கலாய்ச்சுக்குவார்.......", என்று அவள் நிறுத்தினாள்.

ஈரக்கைகளைத் துண்டினால் துடைத்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான். திடீரென்று ஏதோ எண்ணம் அவன் மனத்தில் பாய்ந்தது.

மடியிலிருந்து நான்கு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, "இந்தா அக்கா.......அப்பா தர வேண்டியது.......", என்று அவள் முன் வைத்தான்.

பணத்தை எடுக்கும்போது அவனையே பார்த்துக் கொண்டிருந்த வேதம், "......எனக்கு பாத்திரத்துக்குன்னு அப்பா......" என்று இழுத்தாள்.

மறுபடியும் மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து வேதத்தின் முன் வைத்தான்.

குஞ்சு இரண்டு தமக்கைகளையும் மாறிமாறிப்பார்த்தாள்.

அவளுடைய கண்களின் ஓரங்களிலே நீர்த்திவலையைக் கவனித்தான் சங்கரன். அவனுக்குப் பொறுக்கவில்லை.

"இந்தா குஞ்சு.......உன்னைக் கொடுக்கிற போதுதான் அப்பா லாட்டரி அடிச்சுண்டிருந்தகாலம் அம்மாவும் இல்லாத காலம்....... இதுக்கு நல்ல புடைவையும் ரவிக்கையும் வாங்கிக்கோ.......மூக்கைக் குத்தி துடப்பங்குச்சியையா அடைச்சுக்கிறது.......நல்ல மூக்குத்தியா ஒண்ணு வாங்கிப்போட்டுக்கோ......"

சங்கரன் எஞ்சியிருந்த 'ஒரு பத்து ரூபாய்' நோட்டை எடுத்து கொண்டு எழுந்திருந்தான். அவனுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை.

வாசலில் வந்து உட்கார்ந்த போது, மணி ஒன்பது 'அடித்து விட்டது. தெருவிலே இரவின் அமைதி நிலவியது.

சங்கரன் கையிலிருந்த அந்த நோட்டையே வெறிச் சென்று ஒரு நிமிஷ நேரம் பார்த்தான். திடீரென்று ஏதோ அரவம் கேட்கவே எதிர் வீட்டை நோக்கினான்.

சுப்பா வாத்தியார் வீட்டு இடிந்த திண்ணையில் ராமப்பாவும் கிச்சனும் உட்கார்ந்திருந்தனர். சங்கரன் இருப்பதை அவர்கள் பார்க்கவில்லை. அந்த இரவின் அமைதியில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தது அவனுடைய செவியில் நன்றாகக் கேட்டது.

". . . ஏண்டா, நம்ம பொழப்பிலும் கடன் வந்து சேரதே . . . எல்லாரும் கடை கண்ணியிலே தான் கடன் வைச்சுக்குவா . . . இப்போ நம்ம வேலையிலும் ..." என்று ராமப்பா ஆரம்பித்தான்.

"...அதற்கு சுப்பாவும் சிபாரிசு சொல்லவந்துடறார் ... இன்னிக்கு அவ்ராலே பத்து ரூபாய் போச்சு . . . அன்னிக்கும் அவராலே நான் எல்லாருக்கும் பத்து



ரூபாய் போச்சு . . . எதிராத்துலே அவர் செத்தபோது... அந்த பிள்ளையாண்டான் கடன் சொல்லிக் கொள்ளி வைச்சான் அப்பனுக்கு . . .அப்புறம் திரும்பிப் பார்க்கவில்லை. . .கடனுக்கு இன்னமே என்ன வந்தாலும் தூக்கப்படாது . . ." என்று கிச்சன் கூறினான்.

சங்கரன் 'விர்' என்று எழுந்து அவர்களிடம் போனான். "உங்களை மறந்தே போயிட்டேன்... அன்னிக்கு நீங்க செஞ்ச உபகாரத்தை என்னாலே என்னிக்கும் மறக்க முடியாது ... இதை நீங்களும், இன்னும் "அந்த" இரண்டு பேருமா எடுத்துக்கொள்ளுங்கள் ..."

மடியை உதறிவிட்டு, துண்டைத் தோளின் மேல் போட்டுக் கொண்டு இருளில் நடந்தான். மனத்திலிருந்து சுமை இறங்கி விட்டது. தனிமையிலே, பற்று இல்லாதவனைப்போல அவன் நெடுந்தூரம் நடந்து கொண்டே போனான். உள்ளத்திலே அமைதி ஒளி.

காளையும் கல்யாணமும்

தில்லைவாசி

[சென்ற இதழ் தொடர்ச்சி]

துரைசாமிக் கவுண்டர், தன் மகளை வேறு யாருக்காகிலும் கொடுக்கவேண்டுமென்று யோசனை செய்து வருகிறார் என்ற வதந்தி மட்டும் ஊரில் அடிபட்டுக் கொண்டிருந்தது.

மருதாயிக்கு மட்டும், தன் அப்பன் பிடி கொடுக்காமல், மாடனை வேண்டாம் என்று வள்ளியிடம் சொல்லியனுப்பியது, பிடிக்கவில்லை. அதை நினைத்து அவளுக்கு அழ வேண்டும் போலிருந்தது. முன்னமே ஒப்பந்தம் செய்ததற்காக இல்லாவிட்டாலும், ஊரிலிருக்கும் அத்தனை வாலிபர்களைக் காட்டிலும், அழகும், தைரியமும், நிறைந்த மாடனைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவள் கொண்டிருந்த அசைக்க முடியாத முடிவை யாராலும் மாற்ற முடியாதுதான்.

இதற்கிடையில், மருதாயியும், மாடனும் வயற் காட்டில் சந்திக்கும்படி சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது.

அப்பொழுது மருதாயி, கம்பங் கொல்லைக்குக் காவலாக பரண் மீது உட்கார்ந்து, பறவைகளைக் கவண் வீசி விரட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் அதிருஷ்டம்தானோ என்னவோ? அப்படி அவள் வீசி எறிந்த கல் ஒன்று, அவ்வழியே தன் செவலைக் காளையை மேய்க்க ஓட்டிக் கொண்டு வந்த மாடன் மீது தாக்கிவிட்டது. நல்ல வேளை! அது ஒன்றும் எக்கச்சக்கமான இடத்தில் பட்டு, ரத்தக்காயம் ஏற்படுத்தி, ஆபத்து உண்டுபண்ணவில்லை. அவன் தோளைச் சிராய்த்துக் கொண்டு போய் விழுந்தது. வலி மட்டும் அவன் உடலிலேயே தங்கி விட்டது.

மாடன், தான் விட்ட கல்லால் தாக்கப்பட்டுவிட்டான் என்பதை அறிந்த மருதாயி, மனம் பதை பதைத்து, பரண்விட்டு இறங்கி, அவன் நின்ற இடம் ஓடி வந்தாள்.

"காயம்பட்டுவிட்டதா மச்சான்?" என்று அவள் மிகவும் உரிமையோடும், கவலையோடும் கேட்டாள்.

"காயம், படுவதற்கு இன்னும் என்ன பாக்கியிருக்கிறது. எல்லாம் முன்பே ஆகிவிட்டதே. நீ காசுக்காரன் மகள். வழியில் போறவனைக் கல்லாலேயும் அடிப்பாய்; கம்பாலேயும் அடிப்பாய். ஏழை நாங்கள் அதற்குத் தயாராக இருக்கணும்." என்று மாடன் கொஞ்சம் அலட்சியமாகவே பேசினான். அவன் கண்களோ அவள் அங்கங்களின் அழகைப் பருகிக் கொண்டிருந்தன. அவள் தளிர் மேனியும், குறு குறுத்த கண்களும், கதுப்பு கன்னங்களும், அள்ளிச் சொருகியிருந்த கரிய கூந்தலழகும், பார்ப்பவரைப் பரவசப்படுத்தும் முக வசீகரமும் அவனை மயக்கி மெய் மறக்கச் செய்துவிட்டன. "இவள் யாருக்குத்தான் சொந்தமாகப் போகிறாளோ" என்று அவன் தன்னையறியாமலே பெருமூச்சுவிட்டுக் கொண்டான்.

"நான் வேண்டுமென்றா அடித்தேன். ஏதோ குறித்தவறிப் போனகல் உன்மேல் விழுந்துவிட்டது. நல்லகாலம். காயமில்லை. இல்லாவிட்டால், உன் ஆத்தாள் என்னை விடமாட்டாள்" என்று மருதாயி கிளி கொஞ்சுவது போல் பேசினாள்.

"மருதாயி! உனக்குச் சொன்னாலும் புரியாது. என் இருதயம் அப்பவே காயம் பட்டுப் போய் விட்டது. என்ன இருந்தாலும், உன் அப்பாரு எங்களை இடித்துப்பேசி இருக்கவேண்டாம். சரி, உன்னிடத்தில் பேசி ஆவப் போவது என்ன?" என்று மாடன் வெறுப்பாகவே சொன்னான்.

"மச்சான், நான் கூட நம்பிக்கையாய்த்தானிருந்தேன். கடைசியில் அப்பாரு இப்படிச் சொன்னது தான் எனக்கு இடி விழுந்தது போலிருந்தது. வேறு யாருக்காவது கட்டிக் கொடுத்தால், எங்காவது விழுந்து செத்துப் போயிடறேன் என்று பிடிவாதமாகச் சொல்லியிருக்கிறேன். அப்பாரு என்ன செய்வார் பார்க்கலாம்" என்று அவள் உருக்கமாகச் சொன்னாள். அப்போது அவளுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது.

அன்றைக்கு நெருங்கி வார்த்தையாடியதற்குப் பிறகு, அவர்கள் அடிக்கடி சந்தித்தார்கள். மருதாயி தனித்து கொல்லைக் காட்டில், இருக்கும் சமயம் பார்த்து, மாடனும் வந்து முளைத்துவிடுவான். நேரம் போவதே தெரியாது, பேசி, சிரித்து, இன்பமாய் பொழுதைக் கழிப்பார்கள்.

இன்னும் நாள் ஆக ஆக, எக்காரணத்தைக் கொண்டும், எவராலும், எவ்விதத்திலும் பிரிக்க முடியாதபடி அவர்கள் அன்பு வளர்ந்துவிட்டிருந்தது. அப்படிப் பிரிப்பது என்றால், காலன் தான் அவர்களைப் பிரிக்க முடியும்.

* * *

ஒரு நாள், மத்தியானம். உச்சி வேளையிருக்கும். மருதாயி பரண் மீது உட்கார்ந்து பறவைகளை விரட்டிக் கொண்டிருந்தாள். இருந்தாற் போலிருந்து, அவள் உட்கார்ந்திருந்த பரணையை ஏதோ முட்டுவது போலிருந்தது. அவள் கீழே குனிந்து பார்த்தாள். பார்த்ததும் அவள் உடல் 'வெட வெட' வென்று நடுங்கியது. கீழே ஒரு சிறுத்தை பரணையை இடித்துவிட்டு, அப்படியே அடியில் உட்கார்ந்திருந்தது. அவள் பயத்தினால், அலறியடித்துக் கொண்டு, பரணியிலிருந்து குதித்து சாலை நோக்கி ஓடினாள். நல்ல வேளை! சிறுத்தை அவளைத் துரத்தவில்லை. அவளை அது பார்த்ததோ அல்லது பார்க்காமலிருந்துவிட்டதோ? அதன் கவனம் வேறு எங்கேயோ பதிந்து போயிருக்க வேண்டும். பரணின் அடியில் வந்து உட்கார்ந்த சிறுத்தை அப்படி இப்படி நகருவதாயில்லை.

மருதாயி அலறிக் கொண்டு சாலைப் பக்கம் ஓடுவதற்கும், மாடன் தன் செவலையுடன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்ததற்கும் சரியாகயிருந்தது.

மருதாயி, பயத்தினால் மாடனைக் கட்டியணைத்துக் கொண்டாள். நடந்ததையும் அவன் அறிந்து கொண்டான். சாலையிலிருந்து பார்த்தால், சிறுத்தை இன்னும் அங்கேயே உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

சிறுத்தையை எப்படிக்கொல்வது என்பது மாடனுக்குப்பெரிய யோசனையாகயிருந்தது. அவன் ஒருவனால், அது முடியாது. அவன் கையிலோ எந்த ஆயுதமும் கிடையாது. சுட்டால் தான் அதைச் சாகடிக்கலாம். துப்பாக்கி மணியக்காரர் வீட்டிலிருந்து வாங்கிவரவேண்டும். அப்படியும் சிறுத்தை சாகும் என்பது சந்தேகம்தான். கொஞ்சம் கவனப்பிசகு நேர்ந்தது விட்டாலும் போதும். சிறுத்தை புகை வந்த திசையே பாய்ந்துவிடும். அவன் அதற்குப் பலியாக வேண்டியவன்தான். இதெல்லாம் மாடனுக்குத்தெரியும்.

சிறுத்தையை மறைந்திருந்து தந்திரமாகச் சுட வேண்டும். மறைந்திருப்பதற்கும் தகுந்த இடம் அங்கில்லை.

மாடன் ஒன்றும் புரியாமல் மலைத்து நின்றான்.

அப்பொழுது செவலை மிக ஆக்ரோஷத்துடன், வயல் பக்கம் போவதை அவன் பார்த்தான். அதைச் சிறுத்தைக்குப் பலியாக்க அவன் விரும்பவில்லை. அந்தப் பக்கம் போகாமல், அவனால் ஆன மட்டும், காளையை மடக்கிப் பார்த்தான். பயனில்லை. அது கட்டுக்கடங்காமல் கோப வெறியோடு ஓடிக் கொண்டிருந்தது. அது சிறுத்தையைப் பார்த்திருக்க வேண்டும். அதன் முரட்டுத்தனத்திற்கு நல்ல

சோதனையான சமயம் அது தான் என்பதை அது உணர்ந்திருக்க வேண்டும். சிறுத்தையை ஒரு கை பார்த்துவிட வேண்டுமென்று அது பரணையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அதற்குள் சிறுத்தையும் காளையைப் பார்த்து 'தன்னைத் தயார் செய்துகொண்டுவிட்டது. தனக்கு நல்ல வேட்டையாக செவலைக் காளை கிடைத்துவிடும் என்று தனக்குள்ளேயே அது மகிழ்ந்திருக்கும்.

சாலையிலிருந்த மாடனும், மருதாயியும், செய்வது இன்னதென்று புரியாமல், மனம் 'திக், திக்' என்று அடித்துக் கொள்ள, அப்படியே இமை கொட்டாமல், மரமாய் நின்றார்கள். "எப்படியாவது செவலை சிறுத்தையிடமிருந்து தப்ப வேண்டும்" என்பது தான் அவர்களின் அப்போதைய பிரார்த்தனையாகயிருக்கும்.

அதற்குள் காரியம் மிஞ்சிப் போய்விட்டது. காளை ஆவேசத்தோடு பாய்வதற்கும், சிறுத்தை ஆத்திரத்தோடு பாய்வதற்கும் சரியாக இருந்துவிட்டது. அடுத்த கணம், யாரும் எதிர்பாராத விதமாக சிறுத்தை காளையின் கொம்புகளில் மாட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. செவலையின் நீண்டு வளைந்திருந்த கூரிய கொம்புகள் சிறுத்தையின் வயிற்றில் புகுந்துவிட்டிருந்தன. சிறுத்தை பெரிய சப்தம் போட்டு, உயிரை விட்டது. கொம்பில் மாட்டப்பட்ட சிறுத்தை, மாட்டின் முதுகுப் புறமாகத் தங்கிவிட்டிருந்தது.

செவலையின் கோபம் அப்போதும் அடங்கினதாய்த் தெரியவில்லை. சிறுத்தை தன் கொம்புகளில் மாட்டிக் கொண்டு, அப்படியே தங்கிவிட்டது, அதற்கு எப்படித்தானிருந்ததோ, அதன் நிலை இன்னும் கட்டு மீறிப் போய்விட்டது. சுமந்திருந்த சிறுத்தையுடன் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. மாடனின் பழகிய குரலுக்கும் அது பணியவில்லை. அவனால் அதனிடம் நெருங்க முடியவில்லை. அப்பொழுது அதற்கிருந்த கோப வெறியில், யார் கிட்ட நெருங்கினாலும், போட்டுத் துவைத்துவிடும் போலிருந்தது.

அக்கம் பக்கம் வயல் வேலைகளிலிருந்த ஆண், பெண்கள் எல்லோரும் அங்கு வந்து கூடிவிட்டார்கள். எல்லோருக்கும் பயம் கண்டுவிட்டது. அவர்கள் அனுபவத்தில், யாரும் இம்மாதிரி ஒரு காளை சிறுத்தையைக் கொன்று அறிந்திருக்க மாட்டார்கள்.

"காளையை மடக்கி அடக்குவது எப்படி? காளையிடமிருந்து சிறுத்தையை அகற்றுவது எப்படி?" என்ற கவலை எல்லோரையும் பற்றிக்கொண்டது. மருதாயியின் தகப்பன் துரைசாமிக் கவுண்டரும் அங்குவந்துவிட்டார் தன் மகள் சிறுத்தையிடமிருந்து காப்பாற்றப்பட்டுவிட்டாள் என்ற மகிழ்ச்சி ஒருபக்கமிருந்தாலும், காளையைப்பற்றின கவலைதான் அவருக்கும் அதிகமாகிவிட்டது.

மாடன் தன்னால் ஆனமட்டும் மாட்டின் பின்னாலேயே ஓடிப் பார்த்தான். குரல் கொடுத்து அதை நிறுத்தப் பார்த்தான்: மாடு மட்டும் தன் ஓட்டத்தை நிறுத்தவில்லை. பத்து, பதினைந்து பேர்களாகச் சேர்ந்து முயன்று பார்த்தார்கள். வெறி கொண்டிருந்த அதைக் கட்டுப்படுத்த எவராலும் முடியவில்லை.

"சிறுகச் சிறுக, காளை கோபம் தணிந்துவரட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர்கள் வீடு திரும்பினார்கள். சிறுத்தை கொம்பிலிருந்து அகற்றப்படாதவரை, காளையின் கோப வெறி அடங்கப் போவதில்லை?

மாடனுக்கு மட்டும் காளையை அந்த நிலையில்விட்டு வர மனமில்லை. அவனுக்கு அதன் பின்னாலேயே ஓடித்திரியவேண்டும் போலிருந்தது. அவனைச் சமாதானப்படுத்தி அழைத்துவருவதே பெரிய பாடாகிவிட்டது.

செவலையோ, காடு மேடெல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. பசித்த வேளையில், அப்படியே மேய்ந்தது. நினைத்த இடத்தில் படுத்துக்கொண்டது. மறுபடியும் அதே ஓட்டம்தான். ஒரு நாளாயிற்று. இரண்டாவது நாளும் போயிற்று. அப்பொழுதுகூட அதே நிலைதான். மாடனாலும் சரி, மற்றவர்களாலும் சரி, செவலையிடம் நெருங்கமுடியவில்லை. சிறுத்தை அகற்றப்படாமலேயிருந்தது. ஆகவே எல்லோருக்கும் பெரிய பிரச்னையாகிவிட்டது. துரைசாமிக்க கவுண்டர் தான் இதற்கு முதன்மையான ஆளாகயிருந்தார்.

கடைசியில் அவர்கள் ஒரு வழி கண்டுபிடித்தார்கள். மாட்டை ஒருவாறு மடக்கிவிட முறை கண்டுபிடித்தார்கள்.

மூன்றாவது நாள். காளை போகக்கூடிய பாதையில், மரத்திலேறி கயிறுகளுடன் தயாராகயிருந்தார்கள். மாடும் கயிற்றில் மாட்டி, திமிறிக் கொண்டிருந்த நிலையில், வேறு ஒரு கயிற்றினால்; சிறுத்தையை மாட்டி, கொம்பிலிருந்து இழுத்து அப்பால் போட்டார்கள். சிறுத்தையின் உடலை கண்ணெதிரே மறுபடியும் பார்த்தபோது அதன் கோபம் இன்னும் அதிகரித்திருக்கவேண்டும். ஒரு திமிர் திமிறிற்று, கயிற்றை அறுத்துக் கொண்டுவிட்டது. அவர்கள் பயந்து போய்விட்டார்கள். மறுபடியும் செவலை வெறிகொண்டு ஓடிற்று. அப்பொழுது அதற்கிருந்த கோபமும், ஆங்காரமும் இன்னதென்று சொல்லிமுடியாது அதற்கிருந்த ஆவேசத்தில் யார் அதன்முன் தென்பட்டாலும், முட்டி, கீழே தள்ளி, துவைத்து, கொன்று போட்டுவிட்டுத்தான் மறு வேலை பார்க்கும்.

செவலை மறுபடியும் திரும்பி மரத்தடிக்கே ஓடிவந்தது. அதற்குள் அவர்கள் சிறுத்தையை அப்பால் மறைத்துவிட்டிருந்தார்கள்.

சிறுத்தை இல்லாதது கூட அதன் கோப வெறியை அதிகரித்திருக்க வேண்டும் சிறுத்தை தன்னிடமிருந்து தப்பித்துக் கொண்டுவிட்டது என்று அது எண்ணியிருக்க வேண்டும். தன்னுடைய பலத்திற்கே அது ஒரு அவமானம் என்று அது கருதியிருக்கவேண்டும்.

திடீரென்று, என்ன நினைத்ததோ, இருந்தாற்போலிருந்து, தன் முன்னங்கால்களை, தரையில் பலம் கொண்டமட்டும் போட்டு உதைத்துக்கொண்டது. தரையே குழிவிழுந்து போய்விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் தரையில் விழுந்து புரண்டது. அதுகூட அதற்குப் பிடிக்கவில்லைபோலும். மறுபடியும் எழுந்து ஓட ஆரம்பித்தது. கொஞ்சதூரம் ஓடுவதும், திரும்புவதுமாகவே யிருந்தது. அதன் போக்கைக்கண்டு, மரத்திலிருந்தவர்களின் பயம், நிமிஷத்திற்கு, நிமிஷம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரத்தில், யாரும் எதிர்பாராதவிதமாக, செவலைக் காளை, அருகிலிருந்த பெரிய ஆலமரத்தின்மீது, தன்னுடைய பலம் கொண்டமட்டும், கொம்புகளைக் கொண்டுபோய் இடித்தது. இரண்டு கொம்புகளும் 'மடார்' என்று முறிந்து கொண்டன. அதன் தலையில் ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அது கதறிக்கொண்டே, அப்படியே கீழே விழுந்து சாய்ந்தது. அப்பொழுது அதன் கதறல் மிகவும் பரிதாபகரமாகயிருந்தது. அத்துடன் அதன் உயிர் போய்விட்டது. அதன் தலையும் சாய்ந்து விழுந்தது. மலைபோன்ற அதன் முகத்தில் சாந்தி நிறைந்த ஒரு அமைதி காணப்பட்டது.

தங்கள் முன்னிலையிலேயே செவலைக்காளை, இப்படிப் பரிதாபகரமாக விழுந்து இறந்ததையறிந்த அவர்கள், மனம் துடிதுடித்துப்போய், மரத்திலிருந்து இறங்கிவந்தார்கள். மாடன் கண்ணீர் விட்டுக் கதறியழுதான். அவன் தந்தை இறந்தபோதுகூட அவன் அப்படி அழுதிருக்கமாட்டான். "செவலையை, நான் எப்படி எப்படியெல்லாம் நேசித்திருந்தேன். இப்படி என்னை மோசம் செய்துவிட்டுப் போகுமா? அந்த சிறுத்தை அதற்கு எமனாக முடிந்துவிட்டது" என்று கூறி அவன் அழுதான். துரைசாமிக் கவுண்டர் உள்பட மற்றவர்களும், தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

செவலை இறந்த செய்தி கிராமத்திற்கும் பரவியது. கிராமமே அங்கு திரண்டு வந்து கூடிவிட்டது. பார்த்து பரிதாபப்பட்டார்கள். பெண்கள் எல்லோருமே கண்ணீர் சிந்தினர்.

மாடனை சமாதானப்படுத்தி அவனுடைய வருத்தத்தைப் போக்குவதுதான் முடியாத காரியமாகிவிட்டது. அன்றுமுதல் அவன் வெறிபிடித்தவன் போலாகிவிட்டான். எதிலுமே அவன் கவனம் செல்லாமலிருந்தது. அந்த செவலைக் காளையின் சிலைதான் இது.

கிழவர் கதையை நிறுத்தினார்.

என்றுமே மதிப்பில் குறையாத முதலீடுகள்!

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்.

பத்து வருஷ ட்ரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்.

கிடைக்கும் வட்டிக்கு வரி கிடையாது

இந்தியா நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், நிதி மந்திரி காரியாலயம், கார்ட்டன் காஸில், ஸிம்லா வெளியீடு.

A.C. 361. TM



காலேஜ் அட்மிஷன் அதிகாரி:— உன்னுடைய மார்க் ரிஸல்ட் எல்லாம் சரி தான். தேகவலிமைதான் இப்பொழுது முக்கியமானது அதற்கு என்ன 'சர்டிபிகேட்டு' வைத்திருக்கிறாய்?

அதோ வாசலில் எனக்கு முன்னால் நின்றிருந்த சுமார் அரைடஜன் பையன்களை அடித்து நொறுக்கி, பின்னால் தள்ளிவிட்டு வந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் மூர்ச்சித்து கிடக்கிறாங்க. போய்ப் பாருங்க!

"பெரியவரே, இந்தக் காளைச் சிலையை செய்து நிறுத்த ஏற்பாடு செய்தது யார் என்பதை நீங்கள் சொல்லவில்லையே" என்று நான் கேட்டேன்.

கிழவர் தொடர்ந்தார். இதெல்லாம், மாடனும், துரைசாமிக் கவுண்டரும் செய்ததுதான். துரைசாமிக் கவுண்டருக்கு, மாடனால்தான் தன் மகள் சிறுத்தையிடமிருந்து தப்பினாள் என்ற நினைப்பு. அதற்காகவே மாடன் என்ன சொன்னாலும், அவர் கேட்டு நடக்கத் தயாராகயிருந்தார். செவலையை, மருதாயி காவல்காத்த பரன் இருந்த இடத்திலேயே புதைத்துவிட வேண்டுமென்று மாடன் சொன்னான். துரைசாமிக் கவுண்டரும் அப்படியே செய்தார்.

இரண்டு மூன்று மாதங்கள் சென்றன. துரைசாமிக் கவுண்டரே? முன்வந்து, மருதாயியை மாடன்தான் கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமென்று சொன்னார்.

"முதலில் மருதாயியை உனக்கு கொடுக்க சம்மதிக்கவில்லையே என்று வருத்தம் வேண்டாம். ஏதோ அகம்பாவத்தில் அப்படிச் சொல்லிவிட்டேன். பணம் பெரிசு என்று எண்ணிவிட்டேன் குணம் பெரிசு என்று தெரிந்து கொள்ள இவ்வளவு நாளாகி விட்டது.. செவலை என் கண்களைத் திறந்து விட்டது. என் தவறுகளை மன்னித்து விடு. மருதயியை ஏற்றுக்கொள்" என்று அவர் மனமுருகச் சொன்னார்.

"என் செவலை போன பிறகு எனக்கு எதற்கு கல்யாணம்? என் கையே ஒடிந்து போய்விட்டது போலிருக்கிறது. எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று மாடன் வெறுப்போடு பேசினான். ஊர்ப் பெரியவர்கள் பலரும் வந்து, என்ன சொல்லிப் பார்த்தும், அவன் மறுத்துவிட்டான்.

கடைசியில் மருதாயியின் கண்ணீர்தான் அவன் திடசித்தத்தை மாற்றியது. அவள் காலில் விழுந்து அழுது "மச்சான், என்னைப் பாருங்கள், என்னை வெறுக்கும்படி நான் என்ன செய்தேன், சொல்லுங்கள், என்னைக் கட்டிக்கொண்டால், போச்சு. இல்லாவிட்டால், நானும் செவலையைப்போல், உங்கள் எதிரிலேயே என் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்துவிடுவேன்" என்று கூறியதும்தான் மாடன் கல்யாணத்திற்கு உடன்பட்டான்.

கல்யாணத்திற்கு முந்தி அவன் ஒரு நிபந்தனை போட்டான். "செவலையைப் புதைத்த இடத்தில், அதற்கு ஒரு சிலை செய்து வைக்கவேண்டும். அந்த வேலை முடிந்த பிறகுதான் கல்யாணம்" என்று சொல்லிவிட்டான். துரைசாமிக் கவுண்டரும் சம்மதித்தார்.

இந்த ஊரில் சாமிக்கண்ணு என்று ஒருவர் இருந்தார். அவர் கையினால் செய்ததுதான் இந்த சிலை. அவர் நல்ல வேலைக்காரர். எதையும் பார்த்தால் பார்த்தபடியே செய்துவிடுவார். செவலையை அவர் அது இறக்கும் வரையில் பார்த்திருந்தார்

அதைப்போலவே அவ்வளவு உயிர் உள்ளதாகச் செய்து கொடுத்துவிட்டார்.

மாடனுக்கு சிலையைப் பார்த்ததும்தான் மனசு நிம்மதியாயிற்று. அதுவும் செவலைக் காளையைப்போலவே, கொஞ்சமும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருந்தது. அவனுக்கு அவன் வருத்தத்தைப் போக்கக் கூடியதாகயிருந்தது.

இந்தசிலையை இங்குவைக்கும் போது, ஊரில் எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் இருந்தது தெரியுமா? சுற்றுவட்டாரத்து ஜனங்கள் எல்லாம் இங்கு வந்துகூடிவிட்டார்கள். அவ்வளவு மரியாதையும், வணக்கமும் இந்த சிலைக்கு ஜனங்கள்செய்தார்கள். இது காட்டுபுரத்து ஊர்தான். மலைக்காட்டிலிருந்து அடிக்கடி சிறுத்தை, புலி முதலிய காட்டு மிருகங்கள் வருவது கிராமத்து ஜனங்களுக்கு ஒன்றும் புதிதில்லை. செவலை, சிறுத்தை சண்டைக்குப் பிறகும், இந்த சிலையை இங்கு வைத்ததற்குப் பிறகும், இந்தப்பக்கத்தில் காட்டு மிருகங்களின் பயமே அற்றுப் போய்விட்டது. அவைகளுக்கு உயிர் வெல்லமாகயிருக்கும்போலிருக்கிறது" என்று கூறி கிழவர் நிறுத்தினார்.

"பெரியவரே, நீங்கள்சொல்லாவிட்டாலும், மாடனுக்கும் மருதாயிக்கும் ஒரு நல்ல நாளில் கல்யாணம் விமரிசையாக நடந்தது. எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள், இல்லையா?" என்று கூறி நான் சிரித்தேன்.

"கல்யாணத்திற்கு முந்திதான், இவ்வளவும் நடக்கும்படியாக இருந்துவிட்டதே. அப்புறம் கல்யாணம் நடக்காமல் இருந்துவிடுங்களா?" என்று பெரியார் என்னையே திருப்பிக்கேட்டார்.

அப்பொழுதுதான் எனக்கு கைக் கடிகாரத்தைப் பார்க்கத் தோன்றியது. மணி பனிரண்டு. கதை சுவாரசியத்தில் நேரம் போனதே தெரியவில்லை. வந்த வேலையையும் மறந்து விட்டிருந்தேன்.

அப்பொழுது ஒரு கிழவி பெரியவருக்கு கஞ்சி கொண்டுவந்தாள். அவளுடன் ஒரு ஐந்து வயது சிறுமியும் வந்தாள்.

"என்ன மருதாயி! கஞ்சிக் கொண்டார உனக்கு இவ்வளவு நாழியா? மனுசனுக்குபசிக்காது என்று நினைச்சுபுட்டியா. எவ்வளவு நாழியா வழியைப்பார்த்து கினு குந்திகிட்டு இருக்கிறதாம்" என்று கிழவர் கோபித்துக் கொண்டார். அவர் வேண்டுமென்றே கோபித்து கொள்வது போல் எனக்குத் தோன்றியது.

"ஆமாம் பெரியவரே! ஒரு சந்தேகம். கதையில் வந்த மாடக் கவுண்டர் நீங்கள்தானே. இது உங்கள் பெண்சாதி மருதாயா

Contest No 1. India Govt. Regd. No. 1345.

ரூபாய் 12,000

கடைசி தேதி : 5-4-52. விடை தேதி : 21-4-52.

65

எங்கள் சீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணுக்கு எண் சரியான விடைக்கு

முதற் பரிசு ரூ. **8,000**

முதல் நான்கு வரிசைகள் சரியான விடைக்கு ரூ. 4,000

இந்த சதுரத்தில் 1 முதல் 25 வரையில் உள்ள எண்களை வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இடமாகவும் குறுக்காகவும் எப்படி கூட்டினாலும் கூட்டு தொகை 65 வரும்படி அமைக்கவும். ஒவ்வொரு எண்ணையும் ஒருதட வைக்குமேல் உபயோகிக்கக்கூடாது.

பிரவேச கட்டணம் ஒரு கூப்பனுக்கு ரூ. 1
பிரதி ஆறு கூப்பனுக்கு ரூ. 5

கட்டணத்தொகையை மணியார்டர் அல்லது கிராஸ் செய்யப்படாத இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்ப வேண்டும். வெள்ளைக்காகிதத்தில் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். இந்த போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் கட்டுப்படுத்துவதுமாகும். எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. மணியார்டர் ரசீதுகளை கூப்பனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். போட்டியின் சீலிட்ட விடை 14-ந்தேதி மாலை 4-00 மணிக்கு எங்கள் காரியாலயத்தில் திறக்கப்படும். போட்டி எண்ணையும் விலாசத்தையும் ஆங்கிலத்தில் M. O. கூப்பனிலும் எழுதவும்.

MONDAY MONTHLY, 90, Perumal Koil Street, Pondicherry, (French India)

"நேத்து போன்மேலே இருந்த கோபத்திலே அவனை ஓங்கி அடிக்கப் போனேன். என் மூக்குக் கண்ணாடி கீழே விழுந்து உடைந்து போயி டுத்து..."

"உமக்கு மூக்குமேலே கோபம் வந்திருக்கும்!"

இல்லையா? சிலைக்கு தினமும் மாலை போட்டு வணங்குவதும் நீங்கள்தானே. அந்த சிறுமி உங்கள் பேத்தி, இல்லையா?" என்றேன் சிரித்துக்கொண்டேன். ஏதோ பெரிய ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டதாக என் நினைப்பு.

"செவலையை இழந்துவிட்ட அதிர்ஷ்டக்கட்டைநான்தானுங்க இரவு பகல், எந்நேரமும் எனக்கு செவலை நினைப்புதானுங்க" என்று கிழவர் தன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

"என்னுங்க, போன கதையை நினைச்சு, நினைச்சு, இப்படிக் குந்திக்கினு இருந்தால், உடம்பு என்னத்துக்காகும்? நமக்கு செவலை கொடுத்து வைத்தது அவ்வளவுதான். எழுந்திருங்க" என்று கிழவி சொன்னாள். அப்படிச் சொல்லும்போது, அவள் கண்களிலும் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

இந்தக் கிழ தம்பதிகளின் உள்ளத்தின் உள்ளேயே, எல்லையில்லாது பரவிக்கிடக்கும், செவலையின் நினைப்பை எண்ணும் போது, என் கண்களும் கண்ணீர் விடத் தயாராகி விடும்போலிருந்தன.

"சரி, பெரியவரே, நான் போய் வருகிறேன்" என்று கிளம்பினேன்.

"என்னுங்க, பசிக்கு ஒன்றும் சாப்பிடிலிங்களா. கஞ்சிகொஞ்சம்குடிச்சுவிட்டுப்போங்களேன்" என்றார் கிழவர், கபடு சூதில்லாமல்.

"எனக்கு ஆகாரத்தை இதோ பையில் கொண்டுவந்திருக்கிறேன். இல்லாவிட்டால், அதுகெட்டுப்போய்விடும்" என்று கூறி, கொண்டுவந்திருந்த ரொட்டிஒன்றை அந்தச் சிறுமியிடம் கொடுத்தேன்.

கிழவரிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டேன்.

மாடன், மருதாயி, செவலை, இம்மூவரின் நினைப்பு மட்டும் என் உள்ளத்தை விட்டு அகல மறுத்து விட்டது.

கிரிஸ்டல் ரேடியோ

விலை ரு. 30.

மின்சார சக்தியோ பாட்டரியோ இன்றி தொனி சுத்தமாக வேலை செய்யும் அமெரிக்காவிலிருந்து சமீபத்தில் இறக்குமதியானது வசீகரமான நிபந்தனைகளின் பேரில் எங்கும் ஏஜண்டுகள் தேவை நாணயமுள்ளவர்களுக்கு தவணைகளாகவும் தொகை செலுத்த அனுமதிக்கப்படும்.

எழுதவும்;

General Novelty Stores Ltd,
Delhi-6.

பெண்கள் உலகம்

குகப்பிரியை

விட்டுக் கொடுத்தல்

★

விட்டுக்கொடுத்தல்....புருஷர்கள் செய்கிற அசட்டுக் காரியங்களுக்கெல்லாம் இடங்கொடுத்து வேடிக்கை பார்ப்பதற்குப் பெயர் தான் விட்டுக்கொடுத்தல். எதற்காக விட்டுக்கொடுக்க வேணும். நாம் பெருந்தன்மையாய் போனாற் போகட்டும் என்று சில சலுகைகள் கொடுத்தால், அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமோ? நாம் அசடுகள். நமக்கு ஒன்றுமே புரியவில்லை அதனால்தான் சும்மாயிருக்கிறோம் என்றுதான் நினைக்கிறார்கள். நமக்கு விஷயம் தெரியும், தெரிந்தும் பல காரணங்களை முன்னிட்டு விட்டுக்கொடுக்கிறோம் என்பதை எங்கே புரிந்து கொள்ளுகிறார்கள்" என்று சண்டைக்கு வருகிறாள் விமலா.

பொதுவாக நம் நாட்டிலே புருஷர்கள் வெளியே சென்று உழைத்துப் பொருள் தேடுவதும், பெண்கள் நிழலில் உட்கார்ந்து குடும்ப நிர்வாகத்தை ஏற்று நடத்துவது என்பது நெடுநாளைய வழக்கமாக இருந்து வருகிறது. இந்த நிலையிலே "நாங்கள் வெளியே சென்று அலைந்து திரிந்து மேல் அதிகாரிகள், சக்தொழிலாளிகள் இவர்களுடன் உழன்று, அலுத்துச் சலித்து வீடுவந்து இங்கே ஆறுதல் பெற நினைக்கிறோம். மனைவி மக்களின் இன்முகத்திலும் வீட்டின் அமைதியான சூழ்நிலையிலும் சற்றே நிம்மதியாய் மெய்மறந்து இளைப்பாற விரும்புகிறோம்.

எங்கள் சுக துக்கங்கள் வெளியே உள்ள கஷ்டங்கள் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல்— வந்ததும் தங்களை நாங்கள் கவனிக்கவில்லை என்றும், இன்றும் தேவையுள்ளதும் தேவையில்லாததுமான குற்றச்சாட்டுக்கள், கண்டனங்கள் இவைகளையெல்லாம் எங்கள் மேல் பொழிந்தால் எப்படிப் பொறுமையாயிருக்க முடியும். கோபதாபங்களும் வீண் வாதங்களும் வளரத் தொடங்குகின்றன. சகிப்புத்தன்மை வேண்டியதுதான். அதன் பொருட்டு எல்லாவற்றையுமே சகித்துக் கொள்ளமுடியுமா? அவசியமா? அன்புப் பணிகளை எதிர்பார்த்து வருபவனுக்குக் குற்றச்சாட்டுகளை மட்டும் கேட்டால் எப்படி இருக்கும்" என்கிறார் விமலாவின் கணவர்.

இருவர் பேச்சையும் தனித்தனியே கேட்கும் பொழுது இருவர் சொல்லுவதும்நியாயமாகவே தான் தோன்றும். இரண்டு கட்சியிலும் நியாயமிருந்தால் மனத்தாங்கலுக்கு இடமேது? இவ்விருவரும் ஏன் இப்படி ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளாமல் இன்பமயமான வாழ்க்கையைச் சுவையற்றதாக ஆக்கிக்கொள்ள வேணும்? இந்தக் கேள்விக்கு விடையளிப்பது மிகவும் சுலபம்.

ஆரம்பத்திலே தனிக்குடித்தனம் தொடங்கிய சமயம். பெரியவர்கள் ஒருவரும் வந்து உடன் வசிக்கக்கூடியவர்களில்லை. புதுமையின் மோகம். விட்டுக்கொடுக்கும் விஷயத்தில் இருவரும் ஒருபடி அதிகமாகவே சென்றுவிட்டார்கள். பெரும்பான்மையானவர்களிடத்தில் இப்படி நேருவது சகஜம். இது அவர்கள் குற்றமா? இல்லை. தெரியாத்தனம்தான். விமலாவின் மாமியார் மிகவும் நல்லவள். மகனுடைய வாழ்க்கை மிகவும் இனிமையாக இருக்க வேணும். தம்பதிகள் பரஸ்பரம், அன்பும் ஆதரவுமாக இருக்க வேணுமென்றெல்லாம் விரும்புவது சகஜந்தானே.

இருந்தாலும் ஊருக்குப்புறப்படும்பொழுது மகனைத் தனிமையில் அழைத்து "தம்பீ புதுமோகத்திலே அதிகமாய்ச் செல்லங் கொடுத்து தலைமேலேற்றிவிட்டு கொள்ளாதே. பிறகு அவர்களுக்கும் இறங்கத் தெரியாது. உன்னாலும் இறக்கிவிட முடியாது, பிறகு வீண் மனத்தாங்கலுக்குத் தான் இடம். எல்லாவற்றிற்கும் விட்டுக் கொடுத்துக்கொண்டே போகவேண்டியதுதான். ஆகையால் முன் எச்சரிக்கையுடன் ஒரே நிதானமாக நடந்துகொள்" என்றாளாம். இதை இந்தச் சமர்த்து மனிதர் அப்படியே விமலாவிடம் பாடம் ஒப்புவித்து விட்டாராம்! இது விமலாவே சொன்ன இரகசியம்.

இவர்களது வாழ்க்கையிலே ஆரம்பத்திலே அதிகமான சலுகைகள் கிடைத்தன. இருவரும் இப்படி விசேஷமான சலுகைகளைப் பறிமாறிக்கொண்டார்கள். அவர் எனக்காகக் காத்திராதே. சாப்பிடு என்று சொல்லிச் சென்றால்கூட இவள் சாப்பிட மாட்டாள். அவர் வரும்பொழுது, புஷ்பம், புஸ்தகங்கள். ஸ்வெட்டர் போடக்கூடிய நூல் ஊசிகள், இவைகளை வாங்கிவந்து குவிப்பார். இந்தச் சலுகைகளினால் ஏற்பட்ட நிலையிலே இருவரும் தங்கள் தங்கள் மனிதர்களது குணா குணங்கள். குடும்பத்திலே நிகழ்ந்ததும் அவசியமில்லாததுமான சின்னஞ்சிறு பூசல்கள் இவைகளையெல்லாம் கொட்டி அளப்பது, முதலியவைகளெல்

லாம் மிகவும் உத்ஸாகமாய்த்தான் இருந்தன. ஆனால் ஒன்று, இரண்டு, என்று குழந்தைகள் தோன்றிய உடனே கூடவே ஒருவரை ஒருவர் அதிகாரம் செய்து வேலைவாங்குவதற்கு அந்தக் குழந்தைகளைக் கருவியாக்கிக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த சமயத்தில் எந்த வேலையாவது தடைப்பட்டு ஏன் செய்யவில்லை என்ற கேள்வி எழுந்தால் "முன்பெல்லாம் ஒழுங்காகச் செய்யவில்லையா? இப்பொழுது பல காரணங்களால் முடியவில்லை. இதற்காக அனுதாபப்படவேண்டாமா? ஒன்று அனுதாபப்படவேணும், அல்லது தானே முன்வந்து குழந்தையையாவது பார்த்துக்கொள்ளவேணும். இரண்டுமில்லை" என்று அவள் நினைக்கிறாள்.

"நான்தான் நாள் முழுவதும் வெளியிலே அலைந்து திரிந்து பேனாவோடு மன்றாடி வருகிறேனே. நான் வரும்பொழுது குழந்தைகளைச் சுத்தமாய் உடுத்தி அமளி அடக்கி, தன்னையும், வீட்டையும் ஒழுங்காய் வைத்துக்கொண்டு என்னை வரவேற்கக்கூடாதா? முன்பு நானும் எத்தனையோ விஷயங்களிலெல்லாம் விட்டுக்கொடுத்து, "ஐயோ பாவம்! போனாற் போகட்டும், புதிய உலகம், அனுபவம் போதாது" என்றெல்லாம் தணிந்து போகவில்லையா? இப்பொழுது இவளுக்கு வீட்டுவேலை அதிகம் என்றால், எனக்கும் காரியாலயத்திலே வேலை அதிகம். இப்பொழுதும் முன்போலவே! சலுகை காட்ட முடியுமா? என்பது அவர் கட்சி.

ஆனால் இதை விமலா ஒப்புக் கொள்வாளா? புதிதாய் வந்தவர்களை இன் முகத்தோடு வரவேற்று உபசரிப்பது சகஜம். நீடித்து வந்து கொண்டே இருப்பவர்களை ஒரே நீதியாய்க் கௌரவித்து நடத்துவதுதான் சிரமம். உயர்வும் கூட. முன்பு எனக்கு சலுகைகள் அவசியமேயில்லை. இவராகவே தான் வலுவிலே வந்து தண்ணீர் இழுத்துக் கொட்டட்டுமா? கொத்தவரக்காயைக் கிள்ளிக் கொடுக்கட்டுமா? என்றெல்லாம் கேட்பார். இப்பொழுது உதவி தேவை. ஆனால் செய்வதில்லை. எத்தனைதான் வேலைக்காரர்கள் செய்தாலும் சற்றே குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளக் கூடாதா? என்று அங்கலாய்க்கிறாள். இதில் யார் சொல்வது நியாயம். ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயம் ஒன்றுமே இல்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேணும். அப்படி நடப்பதற்கு முதல் படி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேணும்.

இது விமலாவின் குடும்பத்திற்குச் சரி. ஆனால் சுந்தரியின் குடும்ப நிலை முற்றிலும் வேறு. அவள் கணவன் குதிரைப் பந்தய பித்தன். முதலில் போனாற் போகட்டும் என்று பொறுத்திருந்தாள். பிறகு அதுவே வெறியாகிக் குடும்பம் சீர்குலைந்து விட்டது. இந்தக் குடும்பத்தில் தம்பதிகள் விட்டுக் கொடுப்பது சரியாகுமா? ஒரு நாளுமில்லை. நயத்தினாலும், பயத்தினாலும் கெஞ்சியும் பார்க்கிறாள். அவன் ஏனென்று கேட்பதே இல்லை. என்ன செய்வது என்று விளங்காமல் ஆரம்பத்திலேயே தடுக்காமற் போனோமே. விஷவித்து விருட்சமாக வளர்ந்து விட்டதே. முள்ளினால் போக்கக் கூடியதைக் கோடலியால் வெட்டும்படி ஆகிவிட்டதே . என்று மக்கி மடிந்து போகிறாள். இருப்பதோ ஒண்டுக் குடித்தனம். வெளிப் படையாகப் பேசுவதற்கு சுய கௌரவம் இடம் கொடுக்கவில்லை. இதையே தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்கிறான் கணவன். இவர்கள் விஷயத்திலே விட்டுக் கொடுத்தல் என்பது விபரீதமாகி விடுகிறது. விட்டுக் கொடுத்தல் என்பது சஞ்சீவியாக இராமல் விஷமாகிவிடுகிறது. சமூகத்தால் தீமை என்று விலக்கப்பட்ட செயல்களிலே விட்டுக் கொடுப்பது என்பது மதியீனம்.

கமலாவின் குடும்பம் வேறு வகை. அன்யோன்ய தம்பதிகள் தான். மாதக் கடைசி. சிற்சில சாமான்கள் இருக்கும். சிற்சில சாமான்கள் இராது. தற்செயலாய் நெடு நாட்களுக்குப் பிறகு தோழனைச் சந்திக்கிறான் அவள் கணவன். வீட்டிற்கு வந்து போகும்படி அழைக்கிறான். சாப்பிடும்படி சொல்ல நேரிடுகிறது. அவளுக்கு உள்ளூரக் கோபம். ஆனால், என்ன செய்வது? கூப்பிட்டாயிற்று. ஏதோ உள்ளதைக் கொண்டும், போதாததற்கு அண்டை அயலில் கொஞ்சம் வாங்கியும், உபசரித்து அனுப்புகிறாள். இல்லாமல் ஏறுமாறாகக் கோபித்தோ, உடம்பு அசௌக்கியமென்றோ சொல்லியிருந்தால் இருவரும் ஹோட்டலுக்குச் சென்றிருப்பார்கள். செலவும் அதிகம். நண்பனை வீட்டிலே வரவேற்பதற்குக் கூட சுதந்திரமல்லாத தேவிதாஸனாய் இருக்கிறான் போலிருக்கிறது என்று இகழ்ச்சியாய் நினைப்பான் நண்பன், அல்லது ஐயோ பாவம்! மனைவி மதிக்க மாட்டாள் போலிருக்கிறது என்று அனுதாபமும்படக் கூடும். இவைகளெல்லாம் தெரிந்த பெண் கமலா. கணவனுக்கு மரியாதை வைத்துவிட்டுக் கொடுக்கிறாள்.

கமலாவின் குணமும், பண்பாடும் இப்படி. ஆனால், அவள் தங்கை பத்மாவுக்கு ஊரிலே எந்தப் புதிய படம் வந்தாலும் உடனே பார்த்துவிட வேணும். கணவனும் ஓரளவு அவளைத்திருப்தி செய்பவன்தான். இயன்ற வரையில் அழைத்துப்போவான். அவள் அதோடு நிற்க மாட்டாள். குழந்தைகள் சினிமா பார்ப்பதற்கு இடையூறாக இருக்கிறார்கள் என்று எரிந்து விழுவாள். குழந்தை குழந்தை என்று எத்தனை நாட்கள் தான் படம் பார்க்காமலிருப்பது? என்பாள். யாராவது வந்து தன் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு தன்னை அனுப்பி வைக்க வேணுமென்று ஆவல். அப்படி யார் முன் வருவார்கள்? சினிமாவின் மேல் உள்ள எல்லையற்ற ஆசை கடமையைக் கூடச் சரிவரச்

செய்ய ஒட்டாமல் அமுத்துக் கொள்ளச் செய்கிறது. இம்மாதிரி மனைவியர் விஷயத்தில் கணவன் விட்டுக் கொடுப்பது ஒரு எல்லைக்குள் இருக்கும் வரையில் தான் நன்மை.

வேறு சிலர் பிறந்தகத்திலேயே இருந்துவிடுவதனால் கணவனுக்குத் தனிப்பட்ட முறையிலே கௌரவமளிக்க வேணுமென்ற மனப்பான்மையே இல்லாமல் ஏதோ எல்லோரையும் போல அவனையும் வரவேற்பது, உபசரிப்பது என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். கடந்த பல வருஷங்களாகப் பெரிய இடங்களிலே தமக்கு மேற்பட்ட இடங்களிலே பெண் கொண்ட பலர் இம்மாதிரி மனோபாவம் அதிகரித்து வருகிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறார்கள். இது வருந்தத்தக்கது. ஆரம்பத்தில் சில பெண்கள் தாங்கள் குடும்பப் பொறுப்பின்றி சுயேச்சையாய் பட்டும் படாமலும் திரியலாம் என்ற அசட்டு எண்ணத்தினால் இப்படி இருப்பது தான் மிகவும் இன்பமயமான வாழ்க்கை என்று இருந்ததுண்டு. பிறகு நாளடைவில் தன் குழந்தைகள், தன் கணவன், என்ற உரிமைகள் கூட பறிமுதலாகி வாழ்க்கை வெறும் போலி நாடகமாக ஆகிவிட்டதென்பதை உணரத் தொடங்குகிறார்கள். இதன் பின் பிறந்தகத்திலிருந்து பிரிந்து போகவும் முடியாது. ஒட்டிக் கொண்டிருந்தாலும் சுகமிராது. வாழ்க்கை சுருதி கலைந்து அபஸ்வரமாக ஒலித்துக் கொண்டே இருக்கும். தனிமையில் தன் அபிப்பிராயத்தை வெளிப்படையாய்ப் பேச முடியாத கோழைகளாகவும் பெருமை என்ற பெயரால் கிடைக்கும் அடிமை விலங்கைத் தகர்க்க முடியாமல் கஷ்டப்படுவதுண்டு. ஆதியிலே கணவனும் மனைவியும் புரிந்து கொள்ளாததும், வேண்டாத விஷயங்களுக்கு விட்டுக்கொடுத்ததும் தான் இவைகளுக்கெல்லாம் மூல காரணம்.

விட்டுக் கொடுத்தல் என்பது இளம் தம்பதிகளுக்கு மட்டுமே தான் என்று பலர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் பிசகு. விட்டுக் கொடுக்கும் மனோபாவமின்மையால் தான் மேல் நாட்டில் விவாக ரத்துக்கள் அதிகமாகின்றன. ஒரே மனப்பான்மையுள்ளவர்கள் ஒத்துப் போவதில் ஆச்சர்யமென்ன? வெவ்வேறு மனப்பான்மையுள்ளவர்கள் ஒத்துப் போவதிலே தான் இன்பமிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேணும். தவிர விட்டுக் கொடுத்தல் என்பது குறிப்பிட்ட வயதினருக்குத்தான் என்று சொல்ல முடியாது. வாழ்நாள் முழுவதும் மற்றெல்லா நற்குணங்களையும், நல்ல பழக்க வழக்கங்களையும் எப்படி பின்பற்றுகிறோமோ அது போலவே, இதுவும் என்றென்று நம்முடனிருக்க வேண்டிய ஒரு துணைவன் என்றே சொல்லிவிடலாம்.

ஜானகியின் கணவனுக்கு வயது ஐம்பது. அவளுக்கும் நாற்பது இருக்கலாம். அடி நாளில் அவர் இவளைக் கௌரவிக்க



"நான் உபயோகித்திருக்கும் இதர சந்தன சோப்புகளில் உங்கள் சோப்பிலிருக்கும் நறுமணம் இல்லை" என்று திருப்தி அடைந்த நேயர் ஒருவர் கூறுகிறார்.

இவருக்கு எங்கள் வந்தனம்.

மேட்டூர் சந்தன சோப்

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R. S — சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:	பூரண விற்பனை ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி	அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட், 120, அரமனைக்கார வீதி, சென்னை-1

வில்லை. பாடாய்ப்படுத்தி பம்பரமாய் ஆட்டி வைத்தார். உண்மைதான். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட மனத்தாங்கல்கள், பூசல்கள் காரணமாக இவள் உடல் நிலையும் கெட்டதுண்டு. தானே தன் தேவைகளைப் புரிந்து கொண்டு பூர்த்தி செய்து கொண்டு திருப்தி அடையத் தெரியாத ஒரு முரடு அவள் கணவன். இந்த முரட்டுத்தனம் காரணமாக தகப்பனார், சகோதரன், கணவன் என்று எந்த வடிவத்திலே அவர் தோன்றினாலும் பயப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாதவர்களாக வாழ்ந்துவிட்டனர். அவருடன் பேசிப் பழகவோ, அபிப்பிராயங்களைக் கேட்கவோ நெருங்குவதுமில்லை. நாளடைவில் மதிப்பதும் குறைந்து போயிற்று. அவரும் இப்படி இருப்பது பெரிய கௌரவம் என்று நினைத்துக் காலங் கழித்துவிட்டார். தீராத ஆசைகள், தாபங்கள் இவைகளுக்குப் போக்கு என்பதில்லாமல் அவை மனதிலேயே ஊறி ஊறி மருகி ஒரு கோபாவேசமாகவும், வெறியாகவும் பரிணமித்துவிட்டது. ஆனால், இன்று அவர் என்ன நினைக்கிறார்? தான் மற்றவர்களைப்போல் வாழாமல் ஏமாந்து விட்டோமென்பதை நினைத்து தன் மீதே தான் அனுதாபங் கொள்ளுகிறார். மற்றவர்கள் மீதும் அனுதாபமும், ஆவலும் உண்டாகின்றது. தான் இழைத்த தீங்கிற்குப் பரிகாரங் காண முயல்கிறார். இந்த நிலையிலே அவர் மற்றவர்களுடன் அளவளாவ விரும்பினாலும் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது மட்டுமல்ல, வெகு அலட்சியமாகப் பரிகசிப்பதும், உண்டு. ஆனால், ஜானகி என்ன செய்கிறாள். அவர் இறங்கி வந்து தன்னுடன் சகஜமாக நடந்து கொள்ள விரும்பினாலும் இவள் பொருட்படுத்துவதில்லை. இவ்வளவு நாட்களாகக் கௌரவிக்காத கணவர் இப்பொழுது கௌரவிக்க முற்பட்டால் ஏற்றுக் கொள்ள வேணுமென்பது என்ன நியாயம், வேண்டாமே என்கிறாள். இதற்கு ஏற்றாற் போல, இதே மனோபாவமுள்ள ஒரு தோழி வந்து சேருகிறாள். "இந்த வயதுக்கு மேல் நீ ஏன் தணிந்து போக வேணும்! என்ன வேண்டிக் கிடக்கிறது!" என்று தூபம் போடுகிறாள். ஜானகியின் சுய கௌரவத்தை இவள் காப்பதாக எண்ணம். அவளுடைய புத்திமதியை ஏற்றுக் கொள்வதா? மேலும் அவள் சற்று நேரம் பேசுவதற்குத்தான் தோழியேயன்றி லாப நஷ்டங்களில் பங்கு கொள்ள முன் வருவாளா? இவள் நட்பு சில நிமிஷங்கள் தான். தன் கணவனோ மகனோ வந்து விட்டார்களென்று தெரிந்ததும் எழுந்து போய்விடுவாள். இவளைப் போல் இனம் தெரியாத வீம்பு பேசுகிறவர்கள் விஷயத்தில் "சந்தைக்கு வந்தவர்களெல்லோரும் அந்திக்குத் துணை ஆவார்களா?" என்ற பழமொழி தான் சரியான உவமை.

போனது போகட்டும். இப்பொழுது திருந்தினாலும் மன்னித்து ஏற்றுக் கொள்ள வேணுமென்பது தான் இந்தியப் பெண்ணின் மனோபாவம். மன்னிப்பது என்பது தெய்வீக சக்தி. அன்பு நிறைந்த இதயந்தான் மன்னிப்பை அளிக்க முடியும். இந்த இடத்திலே மன்னிப்பு என்பது விட்டுக் கொடுத்தல் என்ற பெயரில்தான் இடம் பெறுகிறது. மன்னிப்பு என்று பெயரளித்துவிட்டால் நாம் பெரியவர்களாகவும், மன்னிப்பைப் பெறுகிறவர்கள் எதிரே இரந்து நிற்பதாகவும், தோன்றிவிடுமல்லவா? அதன் பொருட்டே போனாற் போகட்டும். விட்டுக் கொடு என்கிறார் பாட்டி.

இது இன்றைய நவ நாகரீக யுவதிகளுக்குக் கோபம் வரலாம். கோபம் தணிந்த பிறகு சிந்தித்துப் பார்க்கட்டும்.

விட்டுக் கொடுத்தல் அன்பின் சின்னம். யாராவது ஒருவர் பிறரைப் பற்றிக்கோள் சொல்லும் பொழுது கூட, அவள் தானே சொன்னாள். அதனால் குற்றமில்லை. என்று சொல்லிவிடுவோமானால் அது பகைமை வளராமல் அன்பு பெருகக் காரணமாகிறது. விட்டுக் கொடுத்தோமென்ற ஆத்ம திருப்தியும், சந்தோஷமும் ஏற்படுகிறது.

மகாத்மா காந்தி அடிகளை நாம் தெய்வமாக வழிபடுகிறோம். கஸ்தூரி பா விஷயத்தில் அவர் எப்படி நடந்து கொண்டார். கஸ்தூரி பா அவர் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டாரென்பது விட்டுக் கொடுத்தல் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

விட்டுக் கொடுத்தல் என்பது வாழ்க்கையில் மிகவும் முக்யமான ஒரு அம்சம். தம்பதிகளுள் மட்டும் தான் அதிகமாக இருக்கிறதென்று நினைக்கிறோம். ஆனால், எங்குமே இந்த மனப்பான்மை தான் வெற்றி பெறுகிறது. இதனால் விமலா சொல்வது போல் விட்டுக் கொடுத்துப் பெருந்தன்மையாக நடந்து கொள்பவரைக் கோழை என்றோ செயல் திறமில்லாதவர் என்றோ சொல்லிவிட முடியாது. சமயந் தெரிந்து விட்டுக் கொடுப்பதனால் தான் வாழ்வு வளம் பெறும் என்ற உண்மையைக் கண்டு, கடைப் பிடிப்பவர் என்று தான் சொல்ல வேணும். இப்படிப் பட்டவர்கள் தான் தமக்குப் பெரியோரிடத்திலும், சுற்றிலுமுள்ளவர்கள் விஷயத்திலும் நண்பர்கள் கூட்டத்திலும், உறவினரிடத்திலும், தன் மனைவி மக்களிடத்திலும் சிறந்த முறையில் பழக முடியும்.

இப்படிப்பட்டவர் பெண்ணாயிருந்தாலும் சரி, ஆணாயிருந்தாலும் சரி, மரியாதை தெரிந்தவர், இனந் தெரிந்தவர், நட்புக்குப் பாத்திரமானவர் என்றெல்லாம் பெயர் பெறுகிறார்கள். பிறரது கௌரவத்திற்கும், அன்புக்கும், மதிப்பிற்கும் உரியவராகி புகழப்படுகிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

சிறுவர் தொடர் கதை

ஜலந்துபிரபா

கமலா

பிரபாகரனை அடைத்துப் பூட்டியிருந்த பெட்டியை நடு இரவில், நடுக்கடலில், ஒரு பரமதுஷ்டனால் தள்ளப்பட்டதல்லவா? அந்த சமயம் வானமும் இருண்டு, காற்றும் ஆரம்பித்தது. அதனால் கடல் 'ஓ' வென்ற இரைச்சலுடன் அதிகமான அலைகளை எழுப்பிக் கொந்தளிக்க ஆரம்பித்தது. அதனால் அதில் தள்ளப்பட்ட பெட்டி அலையோடு ஆகாயத்திற்குப் போயும், பிறகு திடீரெனப் பள்ளத்திற்குக் கொண்டுவரப்பட்டும், ஒவ்வொரு சமயம் போச்சு, முழுகியே போச்சு என்னும்படி பள்ளத்தில் கண்ணுக்கு மறைந்தும், சற்றைக்கெல்லாம்மறுபடியும்ஒரு பெரிய அலை அதை அலாக்காய் ஆகாயத்தில் தூக்கி மிதக்கவும் இப்படியாகப் பலவிதம் அப்பெட்டி அலைகளுடன் படாத பாடுபட்டது. ஆனால், அது மரப் பெட்டியானதால் மூழ்கி விடாமல் அலைதள்ளும் போக்கில் போய்க்கொண்டிருந்தது.

கடைசியாக காற்றும் அடங்கி, மழையும் நின்றது. கடலும் அமைதிபெற்றது.கீழ்வானத்தில் சூரியன் உதித்து ஆகாயத்தில் கீச்சு மூச்சு என்று பறவைகள் பறக்க ஆரம்பித்துவிட்டன. அப்பொழுது கடலில் அலைகளால் அலைக்கப்பட்டு வந்து கொண்டிருந்த மரப் பெட்டியானது ஒரு தீவுபோல் காணப்பட்ட ஒரு இடத்தில் கரையில் ஒதுக்கப்பட்டது.

அது ஒரு சிறிய தீவுபோல் காணப்பட்டாலும் அங்கு மனித சஞ்சாரமே இல்லை. அங்கு ஒதுக்கப்பட்ட பெட்டி கேட்பாரற்றுக் கிடந்தது. அதற்குள் கிடத்தப்பட்டிருந்த பிரபாகரனுக்கு நினைவு வந்ததா? இல்லையா அல்லது செத்துப் போய்விட்டானா? எதுவும் தெரியவில்லை. சூரிய வெளிச்சத்தில் அந்தப் பெட்டி கன்னங்கரேல் என்று நன்றாகத் தெரிந்து கொண்டு அந்த மணல் திட்டில் கிடந்தது.

கொஞ்சநேரம்பொறுத்துஅங்கு ஒரு ப்ரும்மாண்டமான மனிதக் குரங்கு வந்தது. அதன் உடம்பு முழுவதும் அடர்த்தியான சாம்பல் நிற ரோமம் நிறைந்திருந்தது. அது கால்களையும் கைகளையும் வீசி வீசிப் போட்டு நடந்து வந்து அங்கு கிடந்த பெட்டியை அணுகிற்று. பிறகு அந்தப் பெட்டியை அப்படியும் இப்படியுமாகப் புரட்டியும் உருட்டியும் பார்த்தது, பிறகு அதை ஒருகையால் அலாக்காய்த் தூக்கி உற்று உற்றுப் பார்த்தது. அதில் பூட்டியிருக்கும் பூட்டைக் கண்டதும் அதை இடது கையால் பிடித்து இழுத்தது. அதன் பலம் பொருந்திய கையில் அந்தப் பூட்டு பெட்டியினின்றே பிடுங்கிக்கொண்டு வந்து விட்டது. அதை அப்படியும் இப்புடியுமாக நாலுதரம் பார்த்துவிட்டுக் கீழே எறிந்துவிட்டு, அந்தக் கருப்புப் பெட்டியை அலக்ஷியமாகத் தள்ளிற்று. உடனே அந்தப் பெட்டியின் மூடி 'டபார்' என்று திறந்து கொண்டது. பெட்டிக்குள் பிரபாகரன் கண்களை மூடியபடிக் கிடந்தான்.

பெட்டிக்குள்ளிருந்த பிரபாகரனைக் கண்டதும் அந்த மகா பெரிய குரங்கு அதிசயப்பட்டது போல் பெட்டியின் அருகில் வந்து உட்கார்ந்து கண்களைக் கொட்டிக் கொட்டிப் பார்த்து 'உர் உர்' ரென்று உருமிற்று. பிறகு வலது கையால் பிரபாகரனின் மூக்கையும் தலையையும் காலையும் தட்டித் தட்டிப் பார்த்தது. பிறகு அவனது கையைப் பிடித்துத் திருப்பித் திருப்பி ஒரு அதிச

யப் பொருளைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தது.

பல மணி நேரமாகப் பெட்டிக்குள் அடைபட்டு, மருந்து வேகத்தால் மூர்ச்சையுமாகி இருந்த பிரபாகரன் முகத்தில் கடற்கரையின் நல்ல காற்றும் சூரிய வெளிச்சமும் படவே, அவனது உடம்பில் சிறுகச் சிறுகச் சூடு ஏறி, நினைவும் வர மெல்லக் கண்ணை விழித்துப் பார்த்தான்.

அப்பா என்ன பயங்கரம்! அவன் ஜன்மத்திலேயே பார்த்திராத ஒரு பயங்கர பூதம்போன்ற அந்த ப்ரும்மாண்டமான உருவத்தைக் காணவும் ஒரே பயத்தால் 'ஓ' வென்றலறிக் கண்களை மூடிக்கொண்டான்.

பிரபாகரன் கண்களை மூடிக்கொண்டாலும் காது திறந்துதானே இருந்தது. அதனால் அவன் முகத்துக்கு நேர் குனிந்து பார்த்துக்கொண்டிருந்த கொரில்லாவின் உர் சத்தம் அவன் காதுக்குள் தாக்கவும் பயத்தால் அலறியபடிக் கண்களை விழித்த பிரபாகரன் எழுந்து பெட்டியினின்றே துள்ளிக் குதித்தான். ஆனால், பல மணி நேரம் பெட்டியில் அடைபட்டிருந்த அவனது கால்கள் நிற்கமாட்டாமல் துவளவே, அப்படியே மணலில் விழுந்துவிட்டான். பயத்தால் அவனது உடம்பு நடுங்கிற்று.

'அப்பொழுதுதான் அவன் பூரண நினைவுடன் தன்னைச் சுற்றிலும் கவனித்துப் பார்த்தான். என்ன ஆச்சர்யம்! நமது மாளிகையில் இரவு பாலைக் குடித்துவிட்டுப் படுக்கையில் படுத்துத் தூங்கின நாம் சமுத்திரத்திற்கருகில் எப்படிப் பெட்டிக்குள் இருந்தோம்? ஒரு வேளை சொப்பனமாக இருக்குமோ? இல்லை, இல்லை. அதோ அந்தப் ப்ரும்மாண்டமான குரங்கு என்னை நோக்கி வருகிறதே! அப்பா, அப்பா! எவ்வளவு பெரிய குரங்கு! அது கையால் ஒரு அறை விட்டால் இட்டிலியின் சட்டினி போல் ஆகிவிடுவேனே! நான் எப்படி இங்கு வந்தேன்? நான் எப்படி இந்தக் குரங்கினிடமிருந்து தப்புவேன்?—என்று அலறியபடி எழுந்து ஓடமுயன்றான். ஆனால், இரண்டடி தூரம் கூட ஓடமுடியாமல் தள்ளாடித் துவண்டுவிழுந்து விட்டான்.

அடுத்த நிமிஷமே அந்தப் பெரிய குரங்கு தாவி அவனருகில் வந்து உட்கார்ந்து அவனது கையைப் பிடித்து ஆட்டிற்று. முகத்தைத் தொட்டுப் பார்த்தது.

பயத்தாலும் களைப்பாலும் நடுங்கிக் கொண்டிருந்த பிரபாகரன் பீதியுடன் கண்ணை விழித்து அதைப் பார்த்தான்.

அதுவும் அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தது. உடனே பிரபாகரன் மனதில் அட! இது நான் பார்த்திராத அவ்வளவு பெரிய குரங்காக இருந்தாலும் இது நம்மை இம்சை செய்யாமல் பார்த்துக்கொண்டிருக்கிறதே! இது துஷ்டத்தன முள்ளதாக இருந்தால் இந்நேரம் என்னை ஒரே அறையில் தீர்த்துக்கட்டி இருக்கும்' என்று எண்ணினான். உடனே அவனது பயம் சற்று குறைந்தது. இருந்தாலும் அவனது உடல் நடுங்கிக்கொண்டுதானிருந்தது. ஏனெனில் அந்தப் பெருங்குரங்கு அவனது காலை அப்படியும் இப்படியுமாக அசக்கிப் பார்த்துக் கொண்டிருந்ததே!

எழுந்து உட்கார்ந்து கொண்ட பிரபாகரன், தான் என்றுமே பார்த்தறியாத அந்தப் புதிய கடல் மணற்கரையில் எப்படி வந்தோம் என்று தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு கூட யோசனை பண்ணிப் பார்த்தான். ஊஹூம் அவனுக்குத் துளிக் கூடத் தெரியவில்லை. சரி, நாம் எப்படியோ மாயமாகத்தான் வந்திருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டான். பிறகு தான் படுக்கும்பொழுது குளிருக்காக புஷ்கோட்டுப் போட்டுக்கொண்டு படுத்ததும், நிஜார் ஜோபிக்குள் சாக்லெட் போட்டுக்கொண்டதும் நினைவு வந்தது. ஆனால் மேலே புஷ் கோட்டைக் காணவில்லை நிஜார் ஜோபிக்குள் கைவிட்டான். மூன்று சாக்லேட்டும் அப்படியே இருந்தது. அதில் ஒன்றை எடுத்து வெள்ளிப் பேபரைப் பிரித்து ஒரு துண்டை தன் வாயில் போட்டுக்கொண்டான். அது வெகு ருசியாக இருக்கவே மற்றொரு துண்டு உடைத்து தன் அருகில் சாதுபோல் உட்கார்ந்து கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய குரங்கினிடம் நீட்டினான்.

அது அதைக் கையில் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு வாயில் வைத்துக் கடித்துப்பார்த்தது. அதற்கும் அது பிடித்திருந்தது. ஆகவே அத்துண்டை அது தின்றுவிட்டது. பிரபாகரனுக்கும் கொஞ்சம் தைரியம் பிறந்தது. அதை மெல்லத் தட்டிக்கொடுத்தான். அது அவனது முகத்தைப் பார்த்து மெல்ல 'உர்'ரென்றது. பிரபாகரனுக்குத்தான் அதன் பாஷை தெரியாதே! அதனால் அவன் "ஏ பெரிய குரங்கே, உன் பாஷை எனக்குத் தெரியாது. இந்த மனித சஞ்சாரமே இல்லாத இடத்தில் நீதான் எனக்குத் துணை. சமுத்திரத்தைத்தாண்டி சீதையைக் கண்டுபிடித்ததாக ராமாயணத்தில் வர்ணித்திருக்கும் ஆஞ்சநேயனைப்போல் பெருத்தஉருவம்படைத்திருக்கும் உன்னை நான் 'மாருதி' என்று கூப்பிடுகிறேன்" என்று சொல்லி "ஏய் மாருதி இந்தா இதையும் சாப்பிடு" என்று பாதி சாக்லெட்டை அதனிடம் கொடுத்து, மீதியைத் தானும் தின்றான்.

இப்பொழுது மாருதியிடம் அவனுக்குப் பயமில்லை. ஆனால் அந்த அத்வானமான இடத்தில் எங்கு சாப்பிடுவோம்? எங்கு படுப்போம்? என்கிற கவலையும் பயமும் அவனுக்கு அதிகமாக இருந்தது.

பிறகு அவன் மணலில் அவனைத் தாங்கி வந்த பெட்டிகிடப்பதைக் கண்டதும் அதைத்தூக்கிக்கொண்டு, கொஞ்ச தூரம் போய்ப் பார்த்தாலாவது ஒரு வீட்டையோ, ஒரு மனிதனையோ பார்க்கலாம் இல்லவா? என்று புறப்பட்டு "வா மாருதி" என்று கூப்பிட்டான். மாருதி அவனுக்கு வழி காட்டுவது போல் முன்னால் நடந்து சென்றது.

(தொடரும்)

"தோட்டத்தில் கிணறு ஒண்ணு வெட்டணும்னு பார்க்கறேன். . . . . ரொம்ப யோசனையா இருக்கு. . . !"
"என்ன, பூதம் புறப்பட்டு விடுமோன்னா யோசனை?"

சென்றவாரப் புதிர்

என்ன பேரோ?

★

விடை : 1. பார்வதி 2. ராஜாராம் 3. மோஹனி 4. ஜயஸ்ரீ.

பத்து-வருஷ

ட்ரெஷரி ஸேவிங்ஸ்

டிபாஸிட்டு

ஸர்ட்டிபிகேட்டுகள்

3½ சத விகிதம் வட்டி தரும்

வட்டிக்கு வரி கிடையாது

வருஷ வாரியில் உங்கள் விலாசத்துக்கு வட்டிப் பணம் அனுப்பப்படும்.

ஸர்ட்டிபிகேட்டுகள் கிடைக்குமிடம்:

(i) ரிஸர்வ் பாங்க் ஆபீஸ்கள்: கல்கத்தா, பம்பாய், சென்னை, டில்லி; மேலும் கவர்ன்மெண்ட் ட்ரெஷரி தொழில் பட்டுவாடா செய்யும் இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவின் பிராஞ்சுகள்.

(ii) இம்பீரியல் பாங்க் ட்ரெஷரி தொழில் பட்டுவாடாசெய்யாத பார்ட் 'ஏ'ஸ்டேட்டுகளிலுள்ள ஜில்லா ட்ரெஷரிகள்.

(iii) பூஜ் (கட்ச்) இம்பால் (மணிப்பூர்), கூர்க் மேர்க்காரா (கோடகு), ஆகிய இடங்களிலிருக்கும் ட்ரெஷரிகள்.

நூறு ரூபாய்க் கணக்கில் ஸர்ட்டிபிகேட்டுகள் வெளியிடப்படும்.

ரூ. 25,000 வரை நீங்கள் முதலீடு செய்யலாம். இரண்டுபேர் கூட்டாக முதலீடு செய்யவும், ஸ்தாபனங்களுக்கும் முதலீட்டின் அளவு ரூ. 50,000. தர்ம ஸ்தாபனங்களுக்கு ரூ. 1,00,000.

1951, ஜனவரி 22உ யன்று நிதி மந்திரி காரியாலய அறிக்கை நெ. 7 (1). B. /51 பிரகாரம் அதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குஉட்பட்டு வெளியிடப்பட்டது.

இதர விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக.

தி நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், கார்ட்டன் காஸில், ஸிம்லா-3.

AC-341 TM

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

171
கருமத்தில் ஐந்து

★

'கருமத்தைச் செய்துகொண்டே கரும பலனை விடுவது தியாகம். அவ்வாறு விட்டவன் தியாகி. விடாதவன் சுவர்க்கம், நரகம், பூலோகம் ஆகிய இன்ப துன்பங்களை அனுபவித்தற் பொருட்டு மாறிமாறிப் பிறந்திறக்கிறான். தியாகி அவற்றிற்கு ஆளாகாது தப்புகிறான்.' என்று முன்னே கூறிய கண்ணபிரான், தியாகத்தின் அவசியத்தை எடுத்துக் காட்டும்பொருட்டு, கருமத்தில் அடங்கிய ஐந்து காரணங்களை அர்ஜுனனுக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

நிற்கநிலை யாகுமுடல்
  நேர்ந்தவுயி ராங்கர்த்தா
வற்குநிழற் செய்கரண
  மற்றவைதான்-ஒற்கமிலாச்
சேட்டைபல பஞ்சமமாம்
  தெய்வவிறை கன்மத்துக்
கூட்டமாவ தாகவே கொள்.

(இ-ள்) நிற்க நிலை ஆகும் உடல்-(உயிர்) இருக்க க்ஷேத்திரமாகிய தேகம், நேர்ந்த உயிர் ஆம் கர்த்தா-அமைந்த ஜீவன் எனப்படும் கர்த்தா, அற்கு நிழல் செய் கரணமவை-போலியான நலம் தரும் கண், வாய், மனம் முதலிய உறுப்புகள், ஒற்கமிலா சேட்டை பல-அடக்கமில்லாத நானாவித வாயு சேஷ்டைகள், பஞ்சமமாம் தெய்வ இறை-ஐந்தாவதான அந்தர்யாமியான பகவான் ஆகியவை, கன்மத்து கூட்டமாவதாகவே கொள்-நிகழும் கருத்தில் அடங்கிய காரணத் தொகுதியாகத் தெரிந்துகொள்.

அதிஷ்டாநம் ததா கர்தா (1, 2)
காரணஞ்ச ப்ருதக்விதம் (2, 3, 4)
விவிதாச்ச ப்ருதக்சேஷ்டா (4, 2)
தைவஞ் சைவாத்ர பஞ்சமம். (3)

(இ-ள்) அதிஷ்டானம்-உடம்பும், ததா-அவ்வாறே, கர்த்தா-கர்த்தர்வாகிய ஜீவனும், ப்ருதக்விதம்-வெவ்வேறான, காரணம்-(கண், வாய், மனம் முதலிய) உறுப்புக்களும், விவிதாச-பலவகைப்பட்ட, ப்ருதக் சேஷ்டா-தனி வாயு சேஷ்டைகளும், அத்ர-(ஆக) இவைகளில், பஞ்சமம்-ஐந்காவது காரணம், தைவஞ்ச-தெய்வமாய் இருக்கிறது.

உடம்பினாலும், மனதினாலும், வாக்கினாலும் செய்யப்படும் கருமங்கள் சாஸ்திரத்திற்கு ஒத்ததாக விருந்தாலும், விரோதமாக விருந்தாலும், யாவும் ஐந்து காரணங்களாலேயே உண்டாகின்றன. அவைகளாவன (1) ஜீவனால் ஆட்டிவைக்கப்படும் ஜீவனுக்கிருப்பிடமான உடம்பு (2) ஜீவனாகிய கர்த்தா (3) வெவ்வேறான வேலை செய்கிற மனம் புத்தியோடு கூடிய இந்திரியங்கள் (4) உடம்பு முதலானவற்றை வேலைக்கு உதவச் செய்கிற பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் எனப்படும் ஐந்து வாயுக்கள் (5) அந்தர்யாமியான பகவான், இவை எல்லாவற்றிற்குள்ளும் பகவான்தான் முக்கியமான காரணமாவர். ஜீவன் பகவானின் பராதீனனாகவே இருந்து வேலைகளைச் செய்கிறான் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மனிதன் அல்லது பிராணிகள் வாயிலாகப் பிறக்கும் கருமங்களுக்குத்தான் இவ்வைந்தும் காரணங்களாகும். பகவான் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலான வேலைகளுக்கு இவ்வைந்தும் பொருந்தா.

சுலோகத்தில் கூறிய 'கர்த்தா' என்ற சொல் எப்படி ஜீவனைக் குறிக்கும்? கர்த்தா என்பவன் ஒருவனுக்கு உட்படாத சுதந்திரனாக இருக்கவேண்டாவோ? அதுவன்றோ கர்த்தாவுக்குக் கூறிய இலக்கணம். கர்த்தாவைத் தெய்வ பராதீனனாக எப்படிக் கொள்ளலாம்? எனில், ஒருவன் ஒரு கருமத்தைச் செய்வதற்கு அறிவு, ஆசை, முயற்சி ஆகிய மூன்றும் தேவை. அம்மூன்றையும் பகவானே உண்டுபண்ணுகிறார் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அவற்றைப் பகவானிடமிருந்து பெற்ற பிறகே ஜீவன் கருமம் செய்கிறான். ஆயினும் பகவான் ஜீவனுக்கு அறிவு முதலியன கொடுத்து வேலையைச் செய்விக்கிறபோதிலும், வெள்ளம், காற்று முதலியன ஒரு பொருளை பலாத்காரமாக இழுக்கிறதுபோல பலாத்காரமாக அன்று.

அன்றியும் பகவானுடைய அதீனமாக ஜீவன் எல்லா வேலைகளையும் செய்கிறதாக இருந்தால், ஜீவனைக் குறித்து சாஸ்திரம் 'இதைச் செய், அதைச் செய்யாதே' என்று உத்தரவு பண்ணுவதில் என்ன பயன்? பலம் இல்லாதவன் மிகுந்த பலவானால் வலிய இழுக்கப்படும்போது, பலம் இல்லாதவனை நோக்கி 'அவனிடம் போகாதே' என்று உத்தரவு செய்வது வீண்தானே என்று சாஸ்திர விதி சம்பந்தமாக ஆட்சேபனை செய்யலாம்.

இவ்வாட்சேபனைக்கு வேதத்தின் பொருளைச் சூத்திர ரூபமாகச் செய்த வியாஸ முனிவரே சமாதானம் சொல்லியுள்ளார். அதாவது:-ஜீவனுக்குப் பகவான் உடம்பு, இந்திரியங்கள்; அறிவு முதலிய சில சக்திகள் ஏற்கனவே கொடுத்திருக்கிறார். பித்தானைத் திருப்பிவிட்டால் விளக்கெரிவதும், சுற்றிவிட்டால், பிறகு தானே சுற்றியியங்கும் யந்திரங்களைப்போல் வேலை செய்வதுமே அச்சக்திகளாகும். உடம்பையும் இந்திரியங்களையும் ஏவுகிற சக்தி ஜீவனுக்குப் பகவானால் கொடுக்கப்பட்டதேயாகும். ஆயினும், ஜீவனையும் பிரகிருதியின் பரிணாமமாகிய உடம்பையும் பகவானே வகித்துக்கொண்டு, ஜீவன் ஒரு தொழிலைச் செய்வதற்

காக ஒரு பொருளைக் காட்டுகிறார். ஜீவன் எடுப்பதற்கென்றே பணத்தைக் கண்ணில்படச் செய்கிறார். காட்டப்படும் பொருள்கள் யாவும் ஜீவன் தன் இச்சைப்படி வேலை செய்வதற்கு அனுகூலமேயல்லாது பிரதிகூலமன்று. உலகப் பொருள்கள் ஜீவன் வேலை செய்வதற்கும் செய்யாமலிருப்பதற்கும் பொதுவானவைகளே. சிலர் வேலையைச் செய்ய ஆசைப்பட்டு முயற்சி செய்கின்றனர். அதற்கு உடம்பு முதலிய காணங்களை ஏவிக் கொள்கின்றனர்.

ஜீவனுக்கு அந்தரியாமியாக (உள்ளே ஆத்மாவாக) இருந்து ஏவுகிற பகவான் ஜீவனுக்கு உத்தரவு கொடுத்து, அந்த வேலையைச் செய்யும்படிச் செய்கிறார். ஆனால் வெள்ளம் துரும்பை இழுப்பதுபோல் பலவந்தம் செய்வதில்லை. ஆகையால், ஜீவனுக்கும் (ஜடப் பிரகிருதியைப்போலல்லாமல்) தன் நினைவினாலேயே ஒரு வேலையைச் செய்யும்படியான சக்தி இருக்கத்தான் செய்கிறது. ஆகவே, அத்தகைய ஜீவனைக் குறித்து சாஸ்திரம் 'செய்' என்றும் 'செய்யாதே' என்றும் உத்தரவு பண்ணலாம். தேரை இழுக்க ஆயிரக்கணக்காகக் கூடியிருப்பவர்களில் ஒவ்வொருவனையும் 'நிற்காதே இழு' என்று உத்தரவு பண்ணுவதையே சாஸ்திர விதிக்கு ஏற்ற உதாரணமாகச் சொல்லலாம்.

கருமத்தின் காரணங்களில் உடம்பை ஒன்றாகக் கூறிய பிறகு உடலின் உறுப்பு அல்லது காரியமாகிய மனம் இந்திரியங்களை மறுபடி வேறு காரணமாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும் எனில்:—அப்பொழுதைக்கப் பொழுது மன இந்திரியங்களாகப் பரிணமிப்பதற்கு யோக்கியமில்லாத பிரேத உடல் காரியஞ் செய்யாதாகையால், உடலை மாத்திரம் காரண மாகச் சொல்வது போதாது. அத்தகைய உடல் கல் மண்ணையே நிகர்க்கும். எனவே, ஜீவனுக்கிருப்பிடமாகிய சரீரம் இந்திரியாதி காணங்களோடு கூடிய வழியே கருமம் பிறக்கும் என்று காட்டுவதற்காக, இப்படியே தெய்வம் நீங்கிய பிறவற்றிற்கும் கொள்ள வேண்டும். தெய்வம் நினைந்த வழியற்ற நான்கும் அதன் வழிபட்டுக் கருமம் நடந்தே தீரும். ஆகையால் ஐந்தில் தெய்வமே பிரதான காரணம். பிரதானத்தை சிறப்புப்பற்றி முதலாவதாகவோ கடைசியாகவோ கூறுவது முறையாதலால் இங்கு கடைசியில் வைத்துக் கூறினார்.

இச்சுலோகத்தில் 'அதிஷ்டானம்' என்பதற்கு 'இச்சாத்துவேஷ சுக துக்க ஞானாதிகள் பிரகாசிப்பதற்கு ஆசிரயமான தேகம்' என்று சங்கரரும், 'ஜீவனுக்கிருப்பிடமான தேகம்' என்று ராமானுஜரும் கூறினார். 'கர்த்தா' என்பதற்குச் சங்கரர் 'உபாதி லக்ஷண போக்தா' என்றும், ராமானுஜர் 'ஜீவன்' என்றும் கூறினர். அவ்வாறே 'கரணம்' என்பதற்கும் வேறுபட்டுச் சங்கரர் 'ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து மனம் புத்தி ஆகப் பன்னிரண்டு' என்றும், ராமானுஜர் 'கருமேந்திரியங்களும் மனமுமே' என்றும் கூறினர்.

'தைவம்' என்பதற்குச் சங்கரர், 'இந்திரியாதி நியாமகர்களான சூரியாதிகள்' என்றும், ராமானுஜர் 'முக்கியகாரணனும் அந்தர்யாமியான பரமாத்மா' என்றும் கூறினர்.

கீதை பதினெட்டாம் அத்தியாயம் முற்பகுதியில் உண்டாகக்கூடும் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டுக் கண்ணனால் சொல்லப்பட்டது என்று அநேக உரைகாரர் கூறியுள்ளனர். அறிவுடையோர் அத் 4. சு 18, அத் 10. சு 20 இவற்றுடன் ஒப்பிட்டு இதற்கு ஆழ்ந்து சிந்தித்துப் பொருந்துமாறு, பொருள் கொள்ளவேண்டும்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன் கனைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர். இன்றே பரிக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)
இணையற்ற வாசனை நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 6 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agents—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வர்ரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

1.	அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு	ரு. 6 0 0
2.	திருப்பாவை 30 பாட்டுக்கு	ரு. 7 8 0
3.	பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு	ரு. 6 0 0
4.	ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு	ரு. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை

1.	ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு	ரு. 6 12 0
2.	ஸ்வாதித் திருநாள் 30-க்கு	ரு. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை தனித்தனிதாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோடு. சென்னை



24

தாயே! நீ உத்தம மனைவி, லட்சிய மாட்டுப்பெண்-பெண்ணினத்தில் திலகம் போன்றவள். உன் கணவனும் அவ்வாறே உயர்தரமானவன். உங்கள் கிருக கிருத்தியம் இனிமையாக நடைபெறுகிறது, என்றேவைத்துக்கொள்ளுவோம்! உங்கள் கடமை அத்தகைய வாழ்க்கையை நடத்துவதோடு நின்று விடவில்லை. உங்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளையும் நீங்கள் நல்ல வழியில் கொண்டு வரவேண்டும். இந்த மகத்தானபொறுப்பை நீங்கள் சரிவர நிறைவேற்றத்தவறினால் சமூகத்திற்கே பெரிய தீங்கிழைத்தவர் களாவீர்கள். குழந்தைகளின் உடலையும் உள்ளத்தையும் எப்படிப் பயிற்றுவதென்று தெரிந்துகொள்ளாமல் குழந்தைகளைப் பெறுவது, கணக்கு வழக்குத் தெரியாது வியாபாரம் செய்வதையும், உடற்கூறு சாத்திரம் தெரியாது வியாபாரம் செய்வதையும், உடற்கூறு சாத்திரம் தெரியாது சஸ்திர சிகிச்சை செய்வதையும் ஒக்கும். ஆடவரும் பெண்டிரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் குழந்தை வளர்ப்புக் கலையும் ஒன்று.

நாய்களை வளர்த்துக் காட்சிகளுக்கனுப்பிப் பல பரிசுகளைப் பெற்ற என் நண்பரொருவர் இருக்கிறார். அவருடைய குழந்தைகள் நோயால் நலிந்துமெலிந்து கிடக்கின்றன. அவற்றின் பெற்றோர்கள், நாய்களிடம் செலுத்திய கவனம்கூட குழந்தைகள்பால் செலுத்தவில்லை. குழந்தைகளைச் செவ்வையாக வளர்க்கத் தெரியாதவர்கள் குழந்தைகளை பெறுவதற்கே யோக்கியதையற்றவர்கள். பெற்றோர்கள் வெகு சாதாரணமானவிதிகளைக்கூடப் பின்பற்றத் தவறுவதாலேயே சிசு மரண விகிதம் அதிகரிக்கிறது. தத்தாரிகளான ஆட்கள் தோன்றுகிறார்கள்.

தடுக்கப்பட்ட உறவின் முறையோரைத் தவிர்த்து வேறு யார் யாரை விவாகம் செய்துகொள்ளுவதை நிறுத்தச் சட்டம் கிடையாது. ரோகிஷ்டிகளும், அறிவிலிகளும், பொறுப்புணர்ச்சியில்லாதவர்களும் விவாகம் செய்து கொள்ளக்கூடாதென்ற விதியை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். சமூக சீர்திருத்தத்தில் இது மிகவும் முக்கியமானது முதன்மையானதும்கூட. அடுத்த சந்ததியை உலகுக்களிப்போர் திட சரீரிகளாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் மேதாவிகளாகவும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சமூகமே சீர்குலைந்து போய் விடும்.

தன் காதில் விழும் வார்த்தைகள், தன் கண்ணுக்குத் தெரியும் நடத்தை இவற்றையே குழந்தைகள் அனுசரிக்கும். ஆகையால் குழந்தைகளின் நன்மையை உத்தேசித்து நல்ல வார்த்தைகளையே வீட்டிலுள்ளோர் உபயோகிக்கவேண்டும். நாளில் பெரும் பகுதியைக் குழந்தைகளுடனேயே கழிக்கும் தாயார் இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆயிரம் ஆசான் மாறினும் ஒருதாயார் உயர்ந்தவள் என்று ஜார்ஜ் ஹெர்பர்ட் என்னும் அறிஞர் சொல்லியுள்ளார். அவருடைய வார்த்தைகளை, அவளுடைய நடத்தையை குழந்தை முதன் முதலாக அப்பியசிக்கும். ஆகையால் தாயார் குழந்தையின் உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் நற்குணங்கள் முதலியவை ஏற்படும்படியான முறையில் நடந்துகொள்ளவேண்டும்.

வீடு பெண்ணின் ராஜ்யம். அதில் அவளே ஸர்வ வல்லமையுள்ளவள். தனக்கு எது தேவையானாலும் குழந்தை தாயின் முகத்தையே பார்க்கும்.

பச்சை மரத்தில் செதுக்கிய எழுத்துக்கள் அழியாது நிலை நிற்பதுபோல் குழந்தைப் பருவத்தில் பதிந்த குணங்கள் நிரந்தரமாக நின்றுவிடும். ஆகையால் முதலில் பதியும் குணங்கள் நல்லவையாக இருக்கவேண்டியதுமகா அவசியம். தாயைப் போல் பிள்ளை. நூலைப்போல் சேலை என்பது முதுமொழி. தாயின் மறு சொரூபமே குழந்தைகள். நல்லமாதர் ஏற்படுத்தியதே உண்மையான நாகரீகம் என்று எமர்ஸன் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

ஆடவன் மனித வர்க்கத்தின் மூளையென்று வைத்துக்கொண்

டாலி, பெண்டிர் அதன் இதயம். தம் அன்பாலேயே பெண்கள் காரியங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். அறிவு வளர்ச்சிக்குத் தகப்பன் அடிகோலினால் தாய் உள்ளத்தை நிரப்புகிறாள். உள்ளத்தைப் பண்படுத்துகிறார்கள்.

அர்ச். அகஸ்டின் என்ற கிறிஸ்தவப் பெரியார் ஒருவர் இருந்தார். ஏழையாயிருந்தபோதிலும் அவருடைய தந்தை மிகவும் பிரயாசைப் பட்டு அவருக்குக் கல்வியைப் போதித்தார். ஆனால், நேர்மை, உயர் குணங்கள் முதலியவை வருவதற்கு அவரது தாயாரே காரணமானாள். அவர் உலகம் போற்றும் உத்தமனானதற்குக் காரணம் அவரது தாயாரே.

அமெரிக்காவின் தலை சிறந்த அரசியல் வாதியான ஜான் ராண்டல்ப் என்பவர் தம் தாயாரின் உபதேசங்கள் காரணமாகவே தாம் கடவுள் நம்பிக்கையுள்ளவராக மாறினாரென்றும், இல்லாவிட்டால் நாம் நிரீச்வர வாதியாகவே இருந்திருக்கக் கூடுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வீட்டைவிட உயர்ந்த பள்ளிக்கூடமுமில்லை, தாயைவிட உயர்ந்த ஆசானுமில்லை. ஏழைக் குடிசையாயினும் அதில் வசிப்பவள் உத்தமியாக இருப்பாளானால் அந்த இடத்திலே இணையற்ற வீரர்களும், மேதாவிகளும் தோன்றுவர்.

உபதேசத்தைவிட நடத்தையே முக்கியம். ஆகையால், பெற்றோர்கள் நன்னடத்தை யுள்ளவர்களாயிருந்தால்தான் குழந்தைகளும் நல்லவராக வளருவர்.

(தொடரும்)





—கணபதி

சதுரங்க சரித்திரத்தில் உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவர் "வில்லியம் ஸ்டீனிட்ஸ்" என்னும் ஜெர்மானியர் ஆவர். இவர் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலக நிபுணராக விளங்கியவர். இவர் காலத்துக்கு முன்பு இருந்த நிபுணர்கள் (மார்பீ, ஆண்டர்ஸன் போன்றோர்) காய்களை சீக்கிரம் வெளியேற்றி, எதிரி ராஜாவை தாக்குதலிலேயே திறமையைக் காட்டினர். ஆட்கள் அமைப்பு போன்ற நுண்ணிய விஷயங்களை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஒரு சதுரங்க ஆட்டம் என்றால் அது நேர்த்தியான தாக்கலில் தான் முடியவேண்டுமென்பது அன்னார் கருத்து. ஆனால் ஒன்று கூறவேண்டும். அக்கருத்தை மேற்கொண்டு, அவர்கள் நடத்திய ஒவ்வொரு தாக்கலும் நம் மனதைப் பூரிக்கச்செய்கிறது.

இந்நிலையில், பிலிடார் என்னும் பிரெஞ்சுக்காரர் சதுரங்க உலகில் கிளம்பினார். இவர்தான் "ஆட்களே சதுரங்க ஆட்டத்தின் ஆன்மாவாகும்" என மொழிந்தவர். ஆட்களே நிலைக்கு உறம் தருகிறதென்றும், ஆள்–நகர்த்தல் மூலம் வரிசைகள் திறக்கப்படலாம், மூடப்படலாம் என்றும் ஆட்களை உபயோகித்து எதிரி கோட்டையை உடைக்கலாம் என்றும் கண்டறிந்தார். இவற்றை தம் ஆட்டத்தில் உபயோகித்தார். ஆனால் அன்று சதுரங்க உலகம் ஆட்களை அலட்சியமே செய்தது.

திட்டமிட்டு ஆடும் முறை பிலிடாரால் விதைக்கப்பட்ட, அதை நன்கு வளர்த்து வைத்தார், ஸ்டீனிட்ஸ். மார்பீ, ஆண்டர்ஸன் ஆடிய ஆட்டங்களை பரிசோதித்தார். இருவரும் இடையாட்டப் புலியாயிற்றே! அப்படியிருக்க ஆட்டம் சமமாக அல்லவா முடியவேண்டும். ஆனால் ஒவ்வொரு ஆட்டத்திலும் யாரோ ஒருவருக்கு வெற்றியாக முடிகிறதே என்று சிந்தித்தார். திட்டம் சரியாக செய்யாதவர் ஆட்டமே தோற்றது என்று கண்டறிந்தார். ஆட்டம் சரியாக ஆடவேண்டு

வில்லியம் ஸ்டீனிட்ஸ்

✶

மானால் திட்டமிடவேண்டும் என்று அவருக்குத் தோன்றிற்று. உடனே உலகத்துக்கு எடுத்துக்கூறினார்:—"ஆட்டத்தில் ஒரு திட்டமிட்டு ஆடவேண்டும். எல்லா திட்டமும் காரணத்துடன் அமையவேண்டும். ஆட்டக்காரர் பலத்துக்குத் தக்கபடி திட்டம் அமையக்கூடாது. அட்டையிலுள்ள நிலைக்குத் தக்கபடியே அமையவேண்டும்." என்ன நவீன முறை! இம்முறை உலகத்துக்கு எடுத்துக் காட்டியதுடன் நிற்கவில்லை. தம் ஆட்டத்தில் ஆடியும் காண்பித்தார். இம்முறையில் ஆடியவர்களே லாஸ்கர், காபப்ளாங்கா என்போர். இம்முறையை இன்றுள்ள நிபுணர்களும் கையாளுகின்றனர் என்றால் "நவீனகால சதுரங்கத்திற்குத் தந்தை ஸ்டீனிட்ஸ்" என்பதில் தவறென்ன இருக்கிறது?

ஸ்டீனிட்ஸின் சிறப்பு, இவர் சுகர்டார்ட் என்பவருடன் ஆடிய போட்டியில் வெளியாகிறது. சுகர்டார்ட் பிரமிக்கத்தகும் தாக்கல் செய்பவராவர், ஆண்டர்ஸனின் சீடராயிற்றே! ஸ்டீனிட்ஸோ நிலை ஆட்டப் புலி. பழைய முறைக்கும், புதிய முறைக்கும் தர்க்கம். புதிய முறை வென்றது. அவர்கள் போட்டியிலாடப்பட்ட ஒரு ஆட்டம் இதோயிருக்கிறது.

ஆட்டம்.

(மந்திரி பக்க ஆட்டம்)

வெள்ளை	கறுப்பு
சுகர்டார்ட்	ஸ்டீனிட்ஸ்
1. ஆ—ம 4	ஆ—ம 4

1.ஆ–ரா 4–க்குப் பதிலாக, 1.ஆ–ம 4 என்றும் வெள்ளை ஆரம்பிக்கலாம். இந்த ஆட்டத்தில் வெள்ளை ஆ–ம.ச 4 என்று சீக்கிரத்தில் தள்ளி ம.சகடு வரிசை திறக்கப் பார்ப்பான். திறந்த வரிசையில் யானையை நிறுத்தலாம். மற்றும் ஆ–ரா 4 தள்ளாததன் நோக்கம் ம.கு 1–லிருந்து ரா.யா.7 வரையுள்ள வெள்ளை சாய்வரிசையில் சகடையும், மந்திரியையும் நிறுத்தி எதிரி கோட்டையில் ரா.யா 2–ஐத் தாக்க ஏற்பாடு செய்வதுமாகும். போட்டிகளில் கையாளுவதற்கு சிறந்த ஆரம்ப ஆட்டமாகும். (ஆட்டம் கற்போர் 1.ஆ–ரா 4 என்றே துவங்குவது சிறந்ததாகும்).

2. ஆ—ம. ச 4

கறுப்பு 2. . . . ஆ X ஆ செய்தால் வெள்ளை ஆளை மீண்டும் பெற்றுவிடுவான். உதாரணமாக, 2. . . . ஆ X ஆ. 3.கு–ரா.ச 3, (கறுப்பு ஆ–ரா 4 வைப்பதைத் தடுக்க) ஆ–ம.கு 4? 4.ஆ–ம.யா 4, ஆ–ம.ச 3. 5.ஆ X ஆ, ஆ X ஆ. 6.ஆ–ம.கு 3 என்று வைத்து சீக்கிரத்தில் ஆளைப் பெற்றுவிடுவான். கறுப்பு 2. . . . ஆ X ஆ செய்த பிறகு ஆளைக் காக்க முயற்சிக்கக்கூடாது.

2. . . .	ஆ—ரா 3

சரியான நகர்த்தல். ம 4க்கு உதவியளிக்கப்படுகிறது.

3. கு—ம. ச 3	கு—ரா. ச 3

இருவரும் கறுப்பு ம 4–ஐக் கவனிக்கின்றனர்.

4. கு—ச 3	ஆ X ஆ

கறுப்பின் நகர்த்தல் யோசனை கொண்டது. கறுப்பு எதிரியின் மந்திரியாளைத் தனிப்படுத்தப் பார்க்கிறான். எவ்வளவு சீக்கிரம் திட்டம் இட்டாய்விட்டது!

5. ஆ—ரா 3	ஆ—ச 4
6. ச X ஆ	ஆ X ஆ
7. ஆ X ஆ	

மந்திரி ஆள் தனிப்படுத்தப்பட்டது. இனி அதைத் தாக்கவேண்டும். வெளியேற்றலையும் மறக்கக்கூடாது.

7	ச—ரா 2
8. 0—0	0—0

"என்ன நாராயணா! குடம் ரெண்டும் தண்ணாயிருக்கே! எங்கேயிருந்து வாங்கிண்டு வரே! என்ன விலை?"

வாங்கல்லேடா! பக்கத்து தெருவு லேந்து தண்ணீர் கொண்டு வரப் போறேன்!"

வெள்ளை இனி திட்டமிடவேண்டியது அவசியம். நிலைக்குத் தகுந்தபடி இடவேண்டும். சுகர்டார்ட் இடையாட்டப் புலியாதலால் எதிரியைத் தாக்கப் பிரயாசிக்கிறார்.

9. ம—ரா 2

இதற்குப் பதிலாக, 9.ச–ரா.கு 5, 10.ம.யா–ச 1 வைத்து ம.சகடு வரிசையில் நோக்கத்தைச் செலுத்தியிருக்கலாம்.

9. . . . . ம.கு—ம 3

இக்குதிரை ம 4-ஐ அடையப்போகிறது.

10. ச—கு 3

எதிரி ரா.யா 2-ஐத் தாக்க இச் சகடு உப்யோகப்படுமல்லவா. ஆகவே பத்திரப்படுத்தப்படுகிறது.

10. . . . கு—கு 3
11. ச—ரா.ச 4 ம.கு—ம 4
12. ச—கு 3

வெள்ளை ஒரு திட்டமும் இடாமல் ஆடுகிறான்.

12. . . . . ம—யா 4

யானைக்கு ம1–ல் இடமளிக்க. இது ம.ஆளைத்தாக்கும் யோசனையில் வைக்கப்பட்டது. எதிரி ச 3–ம் கவனிக்கப்படுகிறது.

13. ம.யா—ச 1 ச—ம 2
14. கு—ரா 5 ரா.யா—ம 1
15. ம—ச 3

வெள்ளை ம 4-ஐக் கவனிப்பதில் ஒரு யோசனையுள்ளது.

15. . . . ச—ரா 1
16. ரா.யா—ரா 1

ம 1–ல் வைத்தால் ம.ஆள் காக்கப்படும்.

16. . . . . ம.யா—ச 1

எதிரி ம.ச 3 மீண்டும் கவனிக்கப்படுகிறது.

17. ச—ரா.யா 4

வெள்ளையின் யோசனையாவது கறுப்பு குதிரையை ம 4–னின்றும் நீக்குதலேயாகும்.

17. . . . . கு × கு

இல்லாவிட்டால் 18 ச × ரா.கு, ச × ச. 19 கு × கு, ஆ × கு. என ம.நேர்வரிசை கறுப்புக்கு மூடப்படும். ரா. நேர்வரிசை வெள்ளைக்கு திறக்கப்படும்.

18. ஆ × கு ம—ச 2

சகடுக்கு துணை அளிக்கப்படுகிறது.

19. ம—ம 3 கு—ம 4
20. ச × ச ம × ச
21. ச × கு யா × ச
22. ஆ—ம.ச 4 யா(ம 4)—ம 1
23. யா—ரா 3

வெள்ளை, கோட்டையைத் தாக்கவே துடித்துக்கொண்டிருக்கிறார். மையத்திலுள்ள ஆட்களை ரா.யா–ம 1 என்று வைத்துப் பாதுகாத்து வந்திருக்கலாம். இது வெள்ளைக்கு தாக்கும் சந்தர்ப்பம் அல்ல. பாதுகாக்கும் சமயமேயாகும். நிலைக்குத் தக்கபடி ஆடவேண்டும் என்று மேலே கூறப்பட்டதற்கு விரோதமாக ஆடுகிறார் வெள்ளை.

23. . . . . ம—ம 3
24. யா—ம 1 ஆ—ச 3
25. யா—யா 3

வீண் பயமுறுத்தல்.

25. . . . . ஆ—ரா.யா 3
26. கு—கு 4 ம—ச 5

வெள்ளை குதிரையை விரும்பியிழக்கக்கூடும் என சந்தேகித்து, ம–ச 5 வைத்தான் கறுப்பு.

27. கு—ரா 3 ச—யா 5

வெள்ளையின் தாக்கல் மறைந்துவிட்டது!

28. யா—ச 3 ம—ம 3
29. யா—ம 2 ச—ச 3
30. யா—கு 3 ஆ—ச 4

கறுப்பு.... ஆ–ச 5 என்ற இருபிடியை எச்சரிக்கிறான். குதிரையை பாதுகாப்புக்கு எடுத்துச் செல்லாமல், தாக்க ஆரம்பிக்கிறான் வெள்ளை.

31. யா—கு 6 ச—ரா 5
32. ம—கு 3 ரா—யா 3

எதிரியின் ஆ–ச 5 னின்றும் தப்ப

33. ஆ—ச 5 ? யா × ஆ
34. யா × ஆ யா—ச 8 ஷா
35. கு—ம 1 ம—ச 5
36. ம—கு 2 யா—கு 3
37. ம—ச 3 யா—ம.ச 1

யானைகள் சம வெட்டை கட்டாயப்படுத்த.

38. யா × ச ? ம × யா(ரா 4)

வெள்ளைக்கு மந்திரியும், ராஜாவும் அபாயத்திலுள்ளன. வெள்ளை தோல்வியை ஒப்புக்கொண்டான். இந்த ஆட்டத்தில் கறுப்புக்கு ஆட்டத்தை ஆடி ஜெயிக்கும் கஷ்டத்தைக் கொடுக்காமல், வெள்ளை தவறு ஆடியே தோற்றார். வெள்ளை, கறுப்பு கோட்டையைத் தாக்கும் தவறான யோசனையில் ஈடுபட்டதால்தான் முடிவு சீக்கிரம் ஏற்பட்டுவிட்டது. நமக்கு இவ்வாட்டத்திலிருந்து கிடைக்கும் பாடமானது: ஆட்டத்தை திடீரென தாக்கல் மூலம் ஜெயித்துவிட முடியாது. சிறு அனுகூலங்களைப் பெற்று, பேரனுகூலங்களாக மாற்றிக்கொண்டு பிறகே தாக்கலாம் அல்லது கடையாட்டத்தில் வெற்றி பெறலாம்.

அனுகூலங்களைத் தாக்கலுக்கு உபயோகப்படுத்துவது, கடையாட்டத்திலும் காணலாம். உதாரணமாகக், கீழுள்ள நிலையை எடுத்துக்கொள்ளுங்கள்.

கறுப்பு



வெள்ளை

(வெள்ளை ஆடவும்)

இங்கு இருவருக்கும் காய் பலம் சமமாக இருந்தபோதிலும், வெள்ளைக்கே அனுகூலமுள்ளது. கறுப்பின் சகடு பலமிழந்துள்ளது. எப்பொழுதும், ஆட்களால் அடைபட்ட நிலைகளில் குதிரை, சகடைவிட பலம் வாய்ந்தது. மற்றும் வெள்ளையின் ரா.ஆளை கறுப்பு ராஜா தடுத்து நிற்கவேண்டியிருக்கிறது. கறுப்பு ரா.ச.ஆள் பின் தங்கியுள்ளது. மேலும், வெள்ளையின் ம.கு.ஆள் 6–ம் வரிசையில் துணையுடன் நிற்கிறது. இவ்வனுகூலங்களை உபயோகித்து வெள்ளை தாக்குகிறான். எங்கே கண்டுபிடியுங்கள், பார்க்கலாம். வெள்ளை வெற்றியடையும் முறையை!

संसार की जन-संख्या प्रतिदिन ६०,००० के हिसाब से बढ़ती जा रही है। इसलिए भूमि पर आहाराश्रय का भार भी बढ़ता जा रहा है। कृषि के योग्य भू-भाग तो सीमित ही है; और उस संपूर्ण भू-भाग की खेती करने पर भी समस्त जनता की आहार-समस्या हल नहीं हो सकती। ऐसी हालत में आहार के पौष्टिक पदार्थों के लिए हमें अधिकाधिक मात्रा में समुद्र पर निर्भर रहना पड़ेगा। भारत, चीन, जैसे अधिक जन-संख्यावाले देशों के लिए तो ऐसा करना अत्यावश्यक ही नहीं, अनिवार्य भी हो जाता है।

विटमिन-अनुसंधान के प्रारंभिक काल में यही माना गया कि विटमिन-'ए' और 'डी' के लिए 'काड-लिवर-आइल' ही सब से अच्छा स्रोत है। मगर कुछ समय बाद यह मालूम हुआ कि उन विटमिनों के लिए 'काड-लिवर-आइल' से भी 'हेलिबट-लिवर-आइल' बेहतर है।

समुद्र की पौष्टिक सपंत्ति

★

युद्ध के पहले दुनिया के ज्यादातर देश विटमिन 'ए' और 'बी' के लिए नार्वे पर निर्भर थे।

लेकिन जब जर्मनी के नाज़ियों ने नार्वे पर कब्ज़ा कर लिया, संसार को वहाँ से काड-लिवर-आइल का आना भी बंद हो गया। तब यू. एस. ए., कानडा, आस्ट्रेलिया, न्यूज़ीलैंड, दक्षिण अफ्रीका और भारत ने शार्क-लिवर-आइल तैयार करना शुरू कर दिया। भारत में यह उद्योग मद्रास, तिरुवितांकूर, बंबई, सिंध और बड़ौदा में शुरू किया गया और आजकल उड़ीसा और बंगाल में भी यह शार्क-लिवर-आइल तैयार होने लगा है।

भारत में शार्क-लिवर-आइल तैयार करने का यह उद्योग सबसे पहले मद्रास में शुरू हुआ। पूर्वी देशों में शार्क-लिवर-आइल का सबसे बड़ा कारखाना मद्रास सरकार का है। कोपिक्कोड़ में स्थित इस कारखाने के मद्रास-गवर्नमेंट-ब्रैंड-शार्क-लिवर-आइल और अडमिन नामक अधिक पुष्टि का विटमिन आइल भारत में मशहूर हो गए हैं।

मद्रास राज्य में तो लिवर-आइल का यह उद्योग १८५४ से ही होता आया है। तभी से इसका प्रधान उत्पादन-केन्द्र कोपिक्कोड़ ही रहा है। १८७० में विदेशी काड-लिवर-आइल का दाम इतना गिर गया कि देशी शार्क-लिवर-आइल उससे होड़ नहीं लगा सका। फिर इस शताब्दि के आरंभ से वैज्ञानिक अनुसंधानों के फलस्वरूप जब यह मालूम हुआ कि काड-लिवर-आइल से बढ़कर शार्क-लिवर-आइल में ही अधिक पोषण-शक्ति है, तब से शार्क-लिवर-आइल की माँग यहाँ फिर से बढ़ने लगी। पिछले महायुद्ध के समय जब विदेशी काड-लिवर-आइल का आयात यहाँ बिलकुल बंद हो गया था, तो इस देशी उद्योग का अच्छा विकास संभव होने लगा। तब मद्रास सरकार इसे अपने हाथों लेकर इसके विकास और वृद्धि की वैज्ञानिक व्यवस्थाएँ करने लगी।

இல்வாழ்க்கை அனுப்புத்தட்டா திருக்க புருஷன் மனைவி எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், எத்தகைய மனோபக்குவத்துடன் இருக்கவேண்டும் என்பதை வாசிப்போர் அனைவரும் ருசிக்கும்படியான முறையில் நமது வாரப்பத்திரிகையில் தொடர்ச்சியாக " புருஷனும் மனைவியும் " என்ற தலைப்பில் எழுதிவந்த 'காசி' (ஸ்ரீ ஏ. ஏ. ஸோமயாஜுலு) சென்ற 17-ந்தேதி மாரடைப்பினுல் காலமான செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம் அவருடைய தொடர் கட்டுரை பூர்த்தியாகாமல் இவ்வாரத்துடன் முடிவடைகிறது.

शार्क-जाति की मछलियों के कुल ६९ भेद हैं जिनमें ५६ तरह की छमलियाँ इस राज्य के तीनों तरफ़ के समुद्रों में काफ़ी तादाद में मिलती हैं। आकार में शार्क इतना बड़ा और भयंकर होता है कि उसकी लंबाई कभी ४० फ़ीट तक होती है। समुद्र-तट से लेकर बीच समुद्र तक की सभी जगहों और गहराइयों में मिलनेवाला यह शार्क बड़ा पेटू होता है—यहाँ तक कि समुद्री शैवल से लेकर दूध या बिस्कट या मांस के टिन, अनाज के बड़े-बड़े बोरे, मछली, बकरी वगैरह हाथ लगनेवाली हर तरह की वस्तुओं और जन्तुओं को निगल लेता है। कभी-कभी १०-१२ मील दूर मी समुद्र में जाकर वहाँ बड़े-बड़े जालों या कांटों के सहारे शार्क पकड़े जाते हैं। इस ख़तरनाक काम में मद्रास के कुशल मछुए बड़ी आसानी से सफल हो जाते हैं।

यद्यपि विटमिन 'ए' और 'डी' शार्क में अधिक पाए जाते हैं, तथापि उनकी मात्रा और उत्तमता कई परिस्थितियों पर निर्भर होती हैं। फिर अच्छे शार्क के कलेजे को तापकर उसका तेल पूरा-पूरा निकालना एक और मुश्किल काम है इन बातों में कुशलता के विकास और वृद्धि के लिए मद्रास सरकार की मत्स्य-अनुसंधान-शाला में तरह-तरह के वैज्ञानिक प्रयोग किए जा रहे हैं।

(" द. हिन्द " से)

पौष्टिक புஷ்டியுள்ள, புஷ்டியளிக்கும்.
हिसाब (ஆ. பா.) கணக்கு
आहाराश्रय (ஆ. பா.) உணவுக்கான சார்பு.
सीमित எல்லைக்குட்பட்ட
निवारण (ஆ. பா.) தடுப்பு.
निवार्य தடுக்கப்படக்கூடிய.
अनिवार्य தடுக்கப்படமுடியாத
स्रोत (ஆ. பா.) அடி, மூலம், ஊற்று.
क़ब्ज़ा (ஆ. பா.) கைப்பிடிப்பு.
क़ब्ज़ा कर लेना வசப்படுத்திக் கொள்தல்.
कारख़ाना (ஆ. பா.) தொழிற்சாலை.
शताब्दि (பெ. பா.) நூற்றுண்டு.
अनुसंधान (ஆ. பா.) ஆராய்ச்சி.
फलस्वरूप பலனுக பயனுக.
संभव சாத்தியமான
दमे (ஆ. பா.) வித்தியாசம், விதம், ரகசியம்.
तादाद (பெ. பா.) அளவு, எண்ணிக்கை.
आकार (ஆ. பா.) உருவம், தோற்றம்
समुद्र-तट (ஆ. பா.) கடற்கரை.
गहराई (பெ. பா.) ஆழம்.
पेटू (ஆ பா.) குண்டோதரன் வயிறுதாழி.
शैवल (ஆ. பா.) பாசி
टिन (ஆ பா.) டின், டப்பா.
निगलना விழுங்குதல்.
जाल (ஆ. பா.) வலை.
कांटा (ஆ. பா.) முள், தூண்டில்.
के सहारे உதவியால்.
ख़तरनाक ஆபத்தான.
कुशल கைதேர்ந்த
उत्तमता (பெ. பா.) உயர்வு
कलेजा (ஆ. பா) நெஞ்சு ஈரல்.
तापना சுடவைத்தல், காய்ச்சுதல்.
वैज्ञानिक प्रयोग (ஆ. பா.) விஞ்ஞான ஆராய்ச்சி.

जय हिन्द! जय हिन्द!

ரயில்வே சிப்பந்திகளின் கால தாமதம்

★

ரயில் ஸ்டேஷன்களின் புக்கிங் ஆபீஸ்களின் சுவற்றின் மேல் பார்த்தீர்களானால் "24 மணி நேரமும் பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுக்கப்படும்" என்று எழுதியிருக்கும். நீங்கள் அதை நிஜந்தானென்று நினைத்துக்கொண்டு, பத்துமணி ரயிலுக்கு டிக்கட் வாங்க எட்டுமணிக்கே போனால் புக்கிங் ஆபீஸில் யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி இருந்தாலும் "இன்னும் கொஞ்சம் நேரம் கழித்துவா போ" என்று காலத்தைத் தள்ளிப்போடுவார்கள். சில சமயங்களில் ரயில், பிளாட்பாரத்தில் வந்து நின்ற பிறகுங்கூட டிக்கெட் கொடுப்பவர் தன் பக்கத்திலிருப்பவரோடு பேசிக்கொண்டே டிக்கெட் கொடுக்காமல் 'காலதாமதம்' செய்வார்.

"ரயில்வே ஜங்ஷன் ஆபீஸ்களில் நீங்கள் எந்தநாள் சென்று கண்ணைச் செலுத்தினாலும் "போட்மெயில் 1½ மணி லேட், பாஸஞ்சர் 5 மணி லேட், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் அரை மணி லேட்" என்று ரயில்கள் வரும் நேரத்தை பலகைகளில் சாக்பீஸால் எழுதிவைத்திருப்பதைப் பார்க்கலாம். ரயில்களை காலதாமதம் இல்லாமல் ரயில்வே சிப்பந்திகள் ஓட்டிக் கொண்டு வந்து சேர்ப்பது மிகவும் அபூர்வம். இப்படி ரயில் வண்டிகள் காலதாமதமாக வருவதால் யாருக்கும்

'தாய் உள்ளத்'தில் இளைய தாய் மாதுரி தேவி மூத்தாள் பிள்ளைகளுக்கு ஊதல் ஊதும் வசீகரக் கட்டம். ஹாஸ்ய நடிகர் கே. ராமசாமி பின்னுல் தம்பட்ட மடிக்கிறுர்.

அதிக நஷ்டமில்லை. ஆனால் பிரயாணிகள் காலதாமதமாக ரயிலுக்கு வந்தால் . . . . ?

“வண்டி ஓடும்போது ஏறி கை காலை முறித்துக்கொண்டு, நாக்கைக் கடித்து ஊமையாகி வாழ்நாள் முழுவதும் பிச்சையெடுக்க நேரிடும்” என்று ரயில்வே சிப்பந்திகள் கூறுகிறார்கள். இதற்காக ஒரு சினிமாப் படமும் தயாரித்திருக்கிறார்கள்.

சேத்துப்பட்டு ரயில்வே பைன் ஆர்ட்ஸ் சொஸைடி அங்கத்தினர்கள் 16 மில்லிமீட்டரில் இந்த மாதிரிப் படம் ஒன்றை எடுத்திருக்கிறார்கள். பிரயாணிகள், ஓடும் ரயிலில் ஏறுவதாலும், ரயில் ஓடும்போது புட்போர்டுகளில் நின்று சாமர்த்தியமாகச் சாய்ந்து எட்டிப் பார்த்து மண்டையை உடைத்துக்கொள்வதாலும் ஏற்படும் விபத்துக்களைப்பற்றி எச்சரிப்பதற்கே ரயில்வே சிப்பந்திகள் இப்படத்தை எடுத்திருப்பதாக மேற்படி சொஸைடியின் உதவிக் காரியதரிசி ஸ்ரீ சர்மா, படம் சென்ற வியாழக்கிழமை பிருந்தாவன் ஹோட்டலில் பத்திரிகை நிருபர்களுக்கு திரையிடப்பட்டபோது கூறினார்.

படத்தின் பெயர் ‘காலதாமதம்.’ பெயருக்குக் காரணத்தை ஏற்கனவே சொல்லிவிட்டேன். இந்தப் படம் ஒரு பொதுஜனத்தொண்டு என்பதில் சந்தேகமில்லை. உத்தியோக சார்பற்ற முறையில் பொது ஸ்தாபனங்கள் எவ்வளவு சேவை செய்யலாம் என்பதற்கு ரயில்வே பைன் ஆர்ட்ஸ் சொஸைடியார் இந்தப் படத்தின்மூலம் வழிகாட்டியிருக்கிறார்கள். சுமார் 8000 ரூபாய் செலவில் படமெடுக்கப்பட்டிருக்கிறது. இதை பள்ளிக்கூடங்களிலும் இதர பொது ஸ்தலங்களிலும் காட்ட உத்தேசித்திருக்கிறார்கள். மிக நல்ல முயற்சி.

படம் திரையிடும் வைபவத்திற்குத் தலைமை வகித்த தென்இந்திய பிராந்திய ரயில்வே அகவுண்ட்ஸ் அதிகாரி ஸ்ரீ பாட்லிவாலா “இவர்கள் முயற்சிக்கு சர்க்கார் ஆதரவளிக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். அந்த வேண்டுகோளை நானும் ஆதரிக்கிறேன்.

இந்தப்படத்தை எடுத்துக்கொடுத்திருக்கும் காமிராக்காரர் வேலைக்குப் புதியவரல்ல. பல சினிமாப் படங்களில் உதவிக் காமிராமானும், சுப் ஜஸ்டிஸ் ராஜமன்னாரின் மருமானுமான பிரஸாத்தான் ஒளிப்பதிவு செய்துகொடுத்திருக்கிறார்.

இந்த பொதுஜனத் தொண்டில் ஈடுபட்டதுபற்றி பிரஸாதையும், ரயில்வே சிப்பந்திகளையும், இத்தனைக்கும் மூலகாரணமென சொல்லப்படும் சங்கப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ தங்கவேலுவையும் பாராட்டுகிறேன். இவர்கள் இனிமேல் ‘காலதாமத’மில்லாமல் இந்த மாதிரிப் படங்களைத் தொடர்ந்து எடுக்கவேண்டுமென்றும், வெற்றியும் இவர்களுக்குக் ‘காலதாமத’மில்லாமல் கிடைக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன்.

—சாண்டில்யன்

போட்டி நெ 2. கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் நெ 31

ரூ. 500-ம், ஒரு பார்க்கர் ஜூனியர் பௌண்டன் பேனாவும், முழுவதும் சரியான விடை அனுப்பும் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும்.

கடைசி தேதி : 28—3—52. விடை தேதி : 5—4—52.

எங்கள் சீல் செய்யப்பட்ட ஆபீஸ் விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணுக்கு எண் முற்றிலும் சரியான விடைக்கு முதற் பரிசு ரூ 500/-ம், ஒரு பார்க்கர் ஜூனியர் பேனாவும் முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு 2-வது பரிசு ரூ 100; முதல் வரிசை சரியான விடைக்கு 3-வது பரிசு ரூ 25. முதல் வரிசையில் முதல் எண் சரியாகவுள்ளதற்கு 4-வது பரிசு ரூ. 5. முதல் பரிசு எண்ணிக்கை எங்கள் சீலிட்ட விடைக்கு முற்றிலும் சரியானதாய் உள்ள விடைகளைப் பொருத்தது.

38

பக்கத்திலிருக்கும் சதுரத்தில் 2 முதல் 17 வரையில் உள்ள எண்களை வலமாகவும், மேலிருந்து கீழாகவும், இடமாகவும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 38 வரும்படி அமைக்கவும். ஒவ்வொரு எண்ணையும் ஒரு தடவைக்குமேல் உபயோகிக்கக் கூடாது பிரவேசக் கட்டணம்:— ஒரு ரூபாய்க்கு இரண்டு கூப்பன்கள். ரூ. 5-க்கு 12 கூப்பன்கள். கட்டணத் தொகையை மணியார்டர் அல்லது கிராஸ் செய்யப்படாத இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். வெள்ளை காகிதத்தில் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம் இந்த போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் கட்டுப்படுத்துவதுமாகும். எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. மணியார்டர் ரசீதுகளை கூப்பனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். 28—3—52-ந் தேதியன்றும் கூப்பன்களை தபாலில் போடலாம். போட்டி எண்ணையும் விலாசத்தையும் ஆங்கிலத்தில் M. O. கூப்பனிலும் எழுதவும்.

போட்டி நெ. 1-ன் சரியான விடை

8	1	12	13
15	10	3	6
[illegible]	[illegible]	5	4
2	[illegible]	[illegible]	11

பரிசு பெற்றவர்களில் சிலர்: 1. P. R. விஜயராகவன், புலியூர், திருச்சி ஜில்லா. 2. P M. கோபால் செட்டி, தர்மபுரி, சேலம் 3. O. K. சுப்பிரமணியம், ஓமலூர், சேலம் 4 D M. படையாச்சி உளுந்தூர்பேட்டை, S. A. Dt. 5 ராம்லால் பள்ளன், ஜலந்தர் ஸிடி 6. K S. ஷாகுல் ஹமீத், பெங்களூர். 7. G. D. சர்மா, மோரதாபாத். மற்றும் 36 இதரர்கள். 1—4—52 அன்று பரிசுத் தொகை அனுப்பப்படும்.

Winning Star Competitions No 2. (S.M.W.)

No. 28, Venkatachala Mudaly St., Meersahibpet, Royapettah P. O. Madras 14.

19861

(மேல்)

நாகபுரி தென்னிந்திய மாதர் சங்கத்தினர் ‘‘காதலர் கண்கள்’’ என்ற நாடகத்தை நடித்தனர் அப்பொழுது எடுக்கப் பட்ட கோஷ்டி படம் இது.

★

(இடது)

பாரத சாரணர்கள் தினத்தையொட்டி ராஷ்டிரபதி பவனத்தில் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாதுக்கு ஒரு கொடியை அணிவிக்கிறார் ஒரு மாது.

சுதேசமித்திரன் புத்தகசாலை

விக்டோரி ஹவுஸ் :: மவுண்ட்ரோட் :: சென்னை.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள் :

1. பெங்களூர் க-மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்.
3. கோயமுத்தூர் ஜங்.
4. கடலூர் N. T.
5. திண்டுக்கல் ஜங்.
6. ஈரோடு ஜங்.
7. கரூர்
8. காசரகாட்
9. கும்பகோணம்
10. மதராஸ் பீச்
11. மதுரை ஜங்.
12. மானாமதுரை ஜங்.
13. மாயவரம் ஜங்.
14. ஒலவக்கோடு
15. பழனி
16. பொள்ளாச்சி ஜங்.
17. ராமனாதபுரம்
18. ரெய்ச்சூர்
19. சேலம் மார்க்கெட்
20. ஸ்ரீ வைகுண்டம்
21. தாம்பரம்
22. தென்காசி ஜங்.
23. திருநெல்வேலி ஜங்.
24. திருப்பதி
25. திருப்பூர்
26. திருத்துறைபூண்டி ஜங்.
27. திருவாரூர் ஜங்.
28. திருச்சி கோட்டை
29. திருச்சி ஜங்.
30. தூத்துக்குடி
31. விழுப்புரம் ஜங்.
32. விருதுநகர் ஜங்.
33. விருத்தாசலம் ஜங்.

அடியிற்கண்ட இடங்களில் கூடிய சீக்கிரம் ஸ்டால்கள் திறக்கப்படும்.

நெல்லூர் - குத்தி (Cooty)

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும, தினசரி, வாரப பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலியஇடங்களில் பிரசுரமாகும் வாரப பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டோரி ஹவுஸ், மவுண்ட் ரோட், சென்னை.